


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2050*

*மலர் - 12 இதழ் - 3 - ஜுன் - 2020*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*

**இதழ் வடிவமைப்பு**

*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**



படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்...................................... 04

தமிழ் பயிற்று மொழி கை நழுவிய வரலாறு
சு.நரேந்திரன்................................................ 09

உல்லாசத் திருமணம் ஒரு மனதை உருக்கும் மூன்று தலைமுறைக் கதை
கி.நாச்சிமுத்து................................................ 15

நமது நாட்டில் ஆசிரியர்களும் பள்ளி கல்வியும்: தேவைப்படும் மாற்றங்கள்
முனைவர் தி. ராஜ் பிரவின்.................................... 21

வாழ்க்கைக்கு மிக அருகில்...
இரா. காமராசு................................................ 23

புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம்
க.பேபி........................................................ 27

இந்தியாவில் உள்ள குழந்தை இலக்கிய ஆய்வு நிறுவனங்கள்
த. நிர்மல் கருணாகரன்........................................ 30

புத்தகம் இல்லாத உலகினை என்னால் கற்பனைகூட செய்ய முடியாது
விமர்சகர் ந.முருகேசபாண்டியன்.............................. 43

தமிழக மெய்யியல் கி.பி.1880க்கு முன்னர்
முப்பால்மணி................................................ 55

அன்றும் இன்றும் என்றும் தேவை
உதயை மு.வீரையன்.......................................... 68

உ.வே. சாமிநாதையரின் திருக்குறள் ஆராய்ச்சி
முனைவர் இரா. வெங்கடேசன்................................ 72

பகிர்வு

# படித்துப் பாருங்களேன்...

## ஆ.சிவசுப்பிரமணியன்

# எரிக் ஹாப்ஸ்பாம் - ஜியார்ஜ் ரூட் (2001) காப்டன் ஸ்விங்


Eric Hobsbawm & George Rude (2001) Captain Swing


Phoenix Press, London

நெப்போலியனுடன் இங்கிலாந்து நடத்திய போரின் விளைவாக, இங்கிலாந்தில் பணவீக்கம் உருவானது. கிராமப்புறங்களில் வேலையின்மையும் வேலையற்ற உபரித்தொழிலாளர்களின் எண்ணிக்கையும் மிகுந்தன. வேலைச்சந்தையில் உபரியாகிப் போன இவர்கள் வேலையைத் தேடி இடப்பெயர்ச்சியை மேற்கொண்டார்கள் .


இடப்பெயர்ச்சியின் விளைவினால் வேளாண்மை விரிவடைந்து, அதனால் தானிய உற்பத்தி அதிகரித்தது. வேளாண்பண்ணைகளுடன் பிணைக்கப்பட்டிருந்த உழைப்பாளிகள் முன்போல் தானிய வடிவில் இன்றி பண வடிவில் ஊதியம் பெறுபவர்களாக மாற்றப்பட்டார்கள். இதற்கு முன்னால் ஆண்டுதோறும் வேலை என்றிருந்த நிலை, குறிப்பிட்ட வேளாண் பருவகால வேலையாக மாற்றமடைந்தது. இம் மாற்றமானது வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை உயர்வுக்கும், வேலை இல்லாதாரின் எண்ணிக்கை மிகுவதற்கும் வழிவகுத்தது .

தானிய வடிவில் ஊதியம் பெறும் உரிமையை இழந்துபோன வேளாண்தொழிலாளர்கள் அதிக





எரிக் ஹாப்ஸ்பாம்



ஜியார்ஜ் ரூட்

விலை கொடுத்துத் தம் உணவை வாங்கும் நிலைக்கும், பணவீக்கத்தின் விளைவுகளைச் சுமக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டார்கள். அவர்களது அடிப்படைத் தேவையான உணவு, உடை என்பனவற்றைக் குறைந்த அளவிலான ஊதியத்தால் நிறைவு செய்யமுடியாது அல்லாடினார்கள்.

இது தொடர்பாக வில்லியம் கோபட் என்பவரின் கூற்றை ஹாப்ஸ்பாம் மேற்கோளாகக் காட்டுகிறார்: "முன்னர் செய்தது போல் தம் பண்ணையாட்களுக்கு உணவும் உறையுளும் நிலக்கிழார்கள் ஏன் வழங்கவில்லை என்ற வினாவை எழுப்பும் வில்லியம் கோபட், இம்முறையில் பணவடிவிலான கூலி என்ற பெயரில் குறைந்த செலவில் பண்ணையாட்களை வைத்துக்கொள்ள முடியும் என்பதால்தான்" என்று விடை பகர்ந்துள்ளார்.

பண வடிவில் ஊதியம் வழங்கும் இப் புதிய முறையானது நிலக்கிழார்களையும் பண்ணையாட்களையும் பிரித்தது. ஒருபக்கம் உணவுப்பொருள்களின் விலை உயர்வு, மற்றொரு பக்கம் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்வு என்ற இரண்டிற்கும் இடையே அகப்பட்டு பண்ணையாட்கள் நைந்தார்கள். இதற்குமுன் அன்றாட உணவு குறித்துக் கவலையற்றிருந்த பண்ணையாட்கள், நிலக்கிழார்களின் சமையலறைக்குள் நுழையும் உரிமையை இழந்து நாள் அல்லது வார ஊதியக்காரர்களானார்கள். நில உரிமையாளர்கள் தமக்குரிமையான நிலங்களின் பரப்பளவை விரிவுபடுத்திக்கொண்டு, தம் பொருளியல் நிலையையும் உயர்த்திக்கொண்ட நிலையில், இருதரப்பினர்களுக்கும் இடையே சமூக நிலையிலும், பொருளாதார நிலையிலுமான இடைவெளி கூடியது. உழைப்பாளி, இரந்து வாழ்பவன் என்ற இருவருக்கும் இடையிலான வேறுபாடு மறைந்தது.

கிராமப்புற வேலையின்மைக்கு அறுவடைக்காலம் மட்டுமே விதிவிலக்காக அமைந்திருந்தது. கதிரடிக்கும் எந்திரங்கள் அறிமுகமான பின்னர் இதுவும் மாற்றம் அடைந்தது. நவம்பர், திசம்பர், சனவரி ஆகிய மாதங்களில் நிகழும் அறுவடைப் பணிகளில் பண்ணையாட்களின் பங்களிப்பு தேவையான ஒன்றாக இருந்தது. போர் நடந்த காலத்தில் பணியாளர் பற்றாக்குறை ஏற்பட்டபோது அறுவடை எந்திரத்தின் தேவை அவசியமானதாய் இருந்தது. போர் முடிந்த பின்னர் பணவீக்கம் உருவானதுடன் உபரித்தொழிலாளர் எண்ணிக்கையும் மிகுந்தது. இம் மோசமான நிலையிலும் கூட அறுவடை எந்திரங்களின் பயன்பாடு தொடர்ந்தது. பெரும்பாலான நில உடைமையாளர்கள் அறுவடை இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம்காட்டினர். பண்ணையாட்களுக்கோ இது அச்சமும் துயரமும் தருவதாக அமைந்தது.

எந்திரங்களின் பயன்பாடானது இவர்களின் பட்டினிநிலையை ஏளனம் செய்வதாக அமைந்தது. இந்நிலையானது எந்திரங்களைத் தம் எதிரியாகக் கருதி அவற்றை அழிக்கும் சிந்தனையை இவர்களிடையே உருவாக்கியது. அறுவடை

எந்திரத்தைப் போல வேறு எந்த வேளாண் எந்திரமும் இவர்களின் எதிர்ப்புக்கு ஆளாகவில்லை.

வேலையின்மை, விலைவாசி உயர்வால் பண வடிவிலான ஊதியம் போதாமை என்பனவற்றால் உந்தப்பட்ட வேளாண்தொழிலாளர்கள், இவற்றால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வழிமுறையாக உருளைக்கிழங்கு, டர்னிப்கிழங்கு ஆகியவற்றைக் கவர்ந்து வரும் சிறு திருட்டுக்களில் ஈடுபடலாயினர். இச் செயலால் பிறர் நிலத்தில் அத்துமீறி நுழைந்தவர்களாகவும்,பிறர்பொருளைக் கவர்ந்து வருபவர்களாகவும் குற்றவியல் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டனர்.

இத்தகைய சூழலில் தம் கண்முன் நிற்கும் எதிரியாக அறுவடை எந்திரங்களைப் பார்த்தனர்.

**எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு**

எதிர்ப்புணர்வின் சிறு பொறி போன்று வைக்கோல், தானியத் தாள், தானியக் களஞ்சியம் என்பனவற்றை நெருப்பிட்டு எரிப்பதும் எந்திரங்களை உடைப்பதும் ஆங்காங்கே நிகழலாயின. இவற்றைச் செய்தவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டனர், அல்லது ஆஸ்திரேலியாவில் ஆங்கிலேயர் நிறுவிய தண்டனை முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

என்றாலும், எதிர்ப்புணர்வு மட்டுப்படவில்லை. 1830 ஆகஸ்ட் இறுதியில், தீ வைப்பு, அச்சுறுத்தும் தன்மைகொண்ட கடிதங்களை எழுதி அனுப்புதல், கிளர்ச்சியைத் தூண்டும் தன்மைகொண்ட துண்டு வெளியீடுகளையும் சுவரொட்டிகளையும் வெளியிடுதல், கூலி உயர்வை வலியுறுத்தும் கூட்டங்களை நடத்துதல், பண்ணை உரிமையாளர்கள், பண்ணை மேற்பார்வையாளர்கள், நீதிபதிகள், மதக்குருக்கள் ஆகியோரைத் தாக்குதல், கலகம் செய்து பணம் அல்லது உணவுப்பொருள்களைப் பெறுதல், வரிக்குறைப்பு, குத்தகைக் குறைப்பு என்பனவற்றை வற்புறுத்திப் பெறுதல் என்பன பண்ணையாட்கள் தரப்பில் நிகழலாயின.இவற்றின் வளர்ச்சி நிலையாக அறுவடை எந்திர அழிப்பு நிகழத் தொடங்கியது.

இவை எல்லாம், ஒரு குறிப்பிட்ட பகுதி என்றில்லாமல் பரவலாக நிகழத் தொடங்கின. கோடைகாலம், குளிர்காலம், இரவு, பகல் என்ற வேறுபாடு இல்லாமல் வெளிப்படையாக இவை நிகழ்ந்தன. அடிப்படை ஊதியம் என்ன என்பதை வரையறுக்கும்படியும், கிராமப்புற வேலையின்மையைப் போக்கும்படியும் வற்புறுத்தினர். இச் செயல்கள் யாவும் ஓர் இயக்கமாக வளர்ச்சி பெற்றதால், சிறைச்சாலையை உடைத்து, சிறைப்பட்டிருந்தவர்களை விடுவித்து அழைத்துச்செல்லும் துணிச்சலை வழங்கியது. சிறையை உடைத்து அதில் அடைக்கப்பட்டிருந்த பண்ணையாள் ஒருவரை விடுவித்ததுடன் ஊர்வலமாக அவரை அழைத்துச்சென்றமையும் கூட நிகழ்ந்தது.


**ஸ்விங் யார்?**

இக் குடியானவர் எழுச்சியில் பரவலாக அறிமுகமான பெயர் காப்டன் ஸ்விங். இப் பெயரில்தான் எச்சரிக்கை செய்யும் கடிதங்களும் துண்டு வெளியீடுகளும் வெளிவந்தன. உண்மையில் இது ஒரு கற்பனைப் பெயர்தான் என்பதை முன்னர் கண்டோம். செயல்பாடுகளின் அடிப்படையில் நெருப்பு வைத்து எரிக்கும் ஸ்விங், எந்திரங்களை உடைத்து நொறுக்கும் ஸ்விங் என இருவேறு ஸ்விங்குகள் பண்ணையாட்கள் எழுச்சியில் காணப்படுகின்றனர்.

இக் கலகச் செயல்களில் ஈடுபட்டோர் பண்ணையாட்கள் என்றபோதும் அரசு ஆவணங்கள் வேறு வகையில் குறிப்பிடுகின்றன. பிறர் நிலத்தில் அத்துமீறி நுழைவோர், கள்ளக்கடத்தலில் ஈடுபடுவோர் , திருட்டுத்தனமாக மான்வேட்டை ஆடுவோர் ஆகியோரே இக் கலகங்களில் ஈடுபட்டதாக அரசு ஆவணங்கள் சில குறிப்பிடுகின்றன .

கிப்பன் வேக்ஃபீல்ட் என்பவர், போராட்டங்களில் ஈடுபட்ட பண்ணையாட்களை இரண்டு பிரிவினர்களாகப் பகுத்துள்ளார். அவரது

*“எந்திரங்களின் பயன்பாடானது இவர்களின் பட்டினிநிலையை ஏளனம் செய்வதாக அமைந்தது. இந்நிலையானது எந்திரங்களைத் தம் எதிரியாகக் கருதி அவற்றை அழிக்கும் சிந்தனையை உருவாக்கியது. அறுவடை எந்திரத்தைப் போல வேறு எந்த வேளாண் எந்திரமும் இவர்களின் எதிர்ப்புக்கு ஆளாகவில்லை.”*



Sir


Your name is down amongst the Black hearts in the Black Book and this is to advise you and the like of you, who are Parson Justasses, to make your Wills

Ye have been the Blackguard Enemies of the People on all occasions, Ye have not yet done as ye ought

Swing

A "Swing" letter

"காப்டன் ஸ்விங் பெயரால் அனுப்பப்பட்ட கடிதங்கள்"



Sir

This is to acquaint you that if your thrashing Ma-
:chines are not destroyed by you directly we shall com=
=mence our labours

signed on behalf of the whole

Swing


பகுப்பின்படி ஒரு பிரிவினர் கூனிக் குறுகியவர்களாக, சதைப்பற்றில்லாத பின்னங்கால்களைக் கொண்டவர்களாக, உடலும் உள்ளமும் நைந்துபோன மந்தபுத்தியுள்ளவர்களாக, மன உறுதியற்றவர்களாக விளங்கினர். இவர்களைப் பார்க்கும்போதே அவர்களது அவலநிலை வெளிப்படும்.

மற்றொரு பிரிவினர் வலிமையானவர்களாக, அறிவுக்கூர்மை உடையவர்களாக, வளையாத தன்மைகொண்ட வலுவான தூண்போன்று விளங்கினர். உளுத்துப்போன சட்டங்களினால், அத்துமீறிப் பிறர்நிலங்களில் நுழைபவர்களாகவும், கடத்தல்காரர்களாகவும் ஆக்கப்பட்டவர்கள். இவ்விருவகையான பண்ணையாட்களின் சேர்க்கையால் உருவாக்கப் பட்டவர்தான் காப்டன் ஸ்விங்.


அடுத்த இதழில் காப்டன் ஸ்விங் பெயரால் செயல்பட்டோர் குறித்தும், அவர்களது செயல்பாடுகள் குறித்தும் காண்போம்.

தொடரும்


# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





**கார்ல் மார்க்ஸ்**
பதிப்பாசிரியர்: எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-





**சத் சங்கம்**
வெ.இறையன்பு
₹ 150/-




**தொல்காப்பியம்**
**(மூலமும் உரையும்)**
கு.வெ.பாலசுப்பிரமணியன்
₹ 360/-




**வயல்** (நாவல்)
கு.வெ.பாலசுப்பிரமணியன்
₹ 80/-




**தலைவலியும் மருத்துவமும்**
டாக்டர் சு,நரேந்திரன்
₹ 90/-




**உடல்நலம்**
**காத்திடும் உண்மைகள்**
டாக்டர் ராமர் கோதண்டபாணி
டாக்டர் உமா ராமர்
₹ 165/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in




கட்டுரை

# தமிழ் பயிற்று மொழி - கை நழுவிய வரலாறு

## டாக்டர். சு.நரேந்திரன்

காலனி அரசில் 1921இல் ஆர்.வேங்கடரத்தினம் தலைமையில் அமைந்த குழு ஆங்கிலம், வட்டார மொழி இவையிரண்டில், பயிற்றுமொழியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பள்ளி நிருவாகத்தினருக்கு விட்டுவிடவேண்டும். ஆனால் பள்ளிகளில் பாடங்கள் ஆங்கிலம், வட்டாரமொழி ஆகிய இரண்டின் மூலமாகவும் கற்பிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. 1924இல் திரு.சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளிகளில் வட்டாரமொழிகள் கட்டாயப் பயிற்று மொழியாக்கப்பட வேண்டும் என்று சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வந்தார். இத்தீர்மானம் மாவட்ட உயர்நிலைக் கல்விக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டது. ஒருமித்த கருத்து உருவாகவில்லை. இதனால் 1925இல் கல்வி இயக்குநர் சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக் குழுவோடு இணைந்து ஒரு அறிக்கை தயாரித்தார். இந்த அறிக்கை "உயர்நிலைப் பள்ளிகள் பயிற்று மொழியாக ஆங்கிலத்தையோ, வட்டார மொழியையோ தெரிவு செய்து கொள்ளலாம்" என்று கூறியது. ஆகையால் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழிக் கல்வி மிக மெதுவாகவே நடந்தது. 1937 வரை இம்முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதைப் பயிற்றுமொழியின் கொள்கையை மதிப்பீடு செய்த ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. 1930களில் மொத்தம் இருந்த முந்நூறு பள்ளிகளில் 155 பள்ளிகளில்தான் தாய்மொழிக் கல்வி கற்பிக்கப்பட்டது.

வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டத்தின் விளைவாக, சமரசப் போக்கை இங்கிலாந்து அரசு மேற்கொண்டதின் பேரில் 1935ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய சட்டத்தின்படி கல்வி, பல்கலைக்கழக நிருவாகம் மாநில அரசின் கைக்கு வந்தது.

**ஆட்சியைப் பிடித்த காங்கிரஸ் - தமிழ் வளர உதவியது**

ஆக ஒரு நூற்றாண்டுக்குப் பின்னால் 1937இல் அன்றைய சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டபோது அரசு வெளியிட்ட ஆணை தாய்மொழி வழிக் கல்விக்குப் புது வளர்ச்சியைக் கொடுத்தது. அந்த ஆணை "இதுவரை தாய்மொழி வழிக் கல்வியை மேற்கொள்ளாத பள்ளிகள் இனிக் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும். முதலில் நான்காம் படிவத்தில் தொடங்கித் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி முழுவதும் செயற்படுத்தப்பட வேண்டும்" என்றும் குறிப்பிட்டது. இந்நிலையில்தான் 1939இல் கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் தமிழை உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக்கினார். இதன் விளைவாக 1941இல் மாணவர்கள் முதலாவதாகத் தமிழ்வழிப் பள்ளி இறுதித் தேர்வினை எழுதினார்கள் (எஸ்.எஸ்.எல்.சி).

1939ஆம் ஆண்டின் இறுதியிலே காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பொறுப்பைத் துறந்து வெளியேறிய பின்னர் சுமார் ஆறு ஆண்டுகாலம் ஆங்கிலேயர் மூவர் கொண்ட ஆலோசகர் ஆட்சி நடைபெற்றது. அந்தக் காலத்தில் திரும்பவும் ஆங்கிலமே உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் 1939 செப்டம்பரில் தொடங்கியது. இந்தியர்களைக் கேட்காமலே அவர்கள் இசைவு இன்றியே இந்தியாவைப் போரில் ஈடுபட வைத்ததால் இராஜாஜி அமைச்சரவை பதவி விலகியது. ஆளுநரின் ஆணையின் பேரில் இந்தி நுழைப்புத் திட்டம் கைவிடப்பட்டது. 1942 சென்னை ஆட்சியின் அறிக்கையின்படி முன்னூற்றுத் தொண்ணூற்று நான்கு பள்ளிகள் மொழியில்லாத பாடங்களை, வட்டார மொழிகளில் கற்பித்தன.

1946 சூன் 6ஆம் நாளிட்ட அரசாணைப்படி ஆங்கிலம் இரண்டாம் மொழியாக ஆகியது. இதற்கு முன் ஆங்கிலம் முதல் மொழியாகவும் வட்டார மொழிகள் இரண்டாம் மொழியாகவும் இருந்தன. ஆக 1946ஆம் ஆண்டு சூன் 5ஆம் தேதி தமிழ் முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் மாற்றப்பட்டதால் ஆறாம் வகுப்பிற்குப் பிறகு கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் மொழியாக இருந்தபோது தொடக்கக் கல்வியிலிருந்து கற்பிக்கப்பட்டு வந்தது. 1948ஆம் ஆண்டு ஆணைப்படி ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

**தமிழக ஆட்சிமொழி, பயிற்றுமொழி - காமராஜ் இந்திய அரசு ஆட்சி மொழி ஆணையத்திற்கு அறிவிப்பு**

இதற்குப் பிறகு தமிழ்வழிக் கல்வியைப் பற்றி ஓர் ஆய்வு 1956ஆம் ஆண்டு நடைபெற்று அக்குழு தன் அறிக்கையில் தமிழ்வழிக் கல்வி ஆய்வு நிலையைக் கடந்துவிட்டது. கல்வியின் எல்லா நிலைகளிலும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு முழுமையாக மாற்றுவதற்குச் சிறிது காலமாகும். தமிழ் பயிற்றுமொழி ஆகியபோதிலும் கூட அறிவியல் தொழில்நுட்பம் போன்ற தொழில்சார் அறிவைப் பெறுவதற்கு வாய்ப்பாக ஆங்கிலத்தின் தேவை தொடர்ச்சியாக இருந்துகொண்டே இருக்கும் என்று கூறியது. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட ஆங்கில அறிவைப் பெறுவதில் ஏற்பட்ட சரிவை, வீழ்ச்சியைத் தடுக்க வேண்டும் அல்லது முற்றிலும் மாற்றப்பட வேண்டும் என்றும் கூறியது. 1957க்குப் பிறகு தமிழ் வழிக் கல்வியில் தளர்ச்சி நிலை காணப்பட்டது. அதன் பிறகு இன்று வரை இது நீடித்து ஆங்கில வழிக் கல்வியின் செல்வாக்கு நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

இந்திய அரசு 7.6.1955இல் ஆட்சி மொழி ஆணையம் அமைத்தது. இதன் தலைவர் பி.ஜி.கெர், பி.சுப்பராயன் உட்பட 20 பேர் உறுப்பினர்கள். இந்தக் குழுவிற்கு அன்றைய முதலமைச்சராக இருந்த காமராஜ் அனுப்பிய அறிக்கை,

"சென்னை மாநிலத்தில் தமிழே அரசியல் மொழியாக இருக்க வேண்டும். எல்லாக் கட்டங்களிலும் தமிழே பாடம் நடத்தும் மொழியாக இருக்க வேண்டும். இந்தி மொழியை எந்தக் கட்டத்திலும் கட்டாயமாக ஆக்க இயலாது. அது விருப்பப் பாடமாகக் கற்பிக்கப்படலாம். மைய அரசின் அலுவல்களுக்குச் சென்னைப் பகுதியினர் தமிழில் எழுத அனுமதித்தல் வேண்டும்" என்று கூறியது.

மேலும் கீழ்க்காணும் கருத்துக்களையும் அரசு அறிவித்தது. சென்னை மாநிலத்தில் தமிழ்மொழிதான் எல்லா வேலைகட்கும் முதல் மொழியாக இருக்க வேண்டும். தமிழைக் கற்கும்

மொழியாக்குவதில் சிறிது காலமாகுமானால், 1965ஆம் ஆண்டை இதற்கு இறுதிக் காலம் கெடுவாகக் கொள்ள வேண்டும். ஆனால் 1965க்கு முன்பே தமிழைக் கற்பிக்கும் மொழியாக்க வேண்டும் என்று அறிவித்தது.

இத்துடன் சென்னை அரசு தன் இரண்டாவது குறிப்பில் தங்கள் சில பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு வந்த பாராளுமன்றக் குழுவிடம் என்றாவது ஒரு காலத்தில் இந்த மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் ஏதாவது ஒன்றில், ஆங்கிலம் போதனா மொழியாக இல்லாமல் போகுமேயானால் அந்த இடம் தமிழ் மொழிக்குக் கிடைக்குமே தவிர இந்திக்குக் கிடைக்காது என்று இந்த அரசு திட்டவட்டமாகக் கூற விரும்புகிறது என்றும் தெரிவித்தது."

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கலாம் என்ற தமிழக அரசு 1959இல் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை 1937இல் பள்ளிகளில் பயிற்சி மொழி பற்றிய ஆணை போன்ற திட்டவட்டமானதாக இல்லை. கலைத்துறைப் பாடங்களை விரும்பினால் தமிழில் நடத்தலாம். ஆங்கிலமும் பயிற்று மொழியாகத் தொடர்ந்து நீடிக்கும் என்ற நிலை இருந்ததால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இதைக் கொண்டு வந்தபோது பல தடைகளை எழுப்பினர். நூல்கள் இல்லையே என்றனர். தரம் கெட்டுப்போகும் என்றனர். இவற்றையெல்லாம் கேட்ட அரசு தன் ஆணையில் சில நெளிவு சுழிவுகளையும் நுழைக்க வேண்டியதாயிற்று. கல்லூரிகளில் கலைத்துறைப் பாடங்களை விரும்பினால் தமிழில் கற்பிக்கலாம் என்று அதற்காகக் கற்போர்க்கும், கற்பிப்போர்க்கும் சில சலுகைகள் தரப்படும் என்றும் கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1937இல் சென்னை மாநிலத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழி பேசுவோர் இருந்தனர். பயிற்றுமொழி பற்றிய ஆணை பிறப்பிக்கப்பட்ட பொழுது மற்ற மொழியினர் ஏற்றுக் கொண்ட காரணத்தால், தமிழர்களும் மறுப்புக் கூறாமல் ஏற்றுக் கொண்டனர். இதற்கு நாட்டுப் பற்றும் ஓர் காரணமாக இருந்தது. 1959இல் நிலைமையே வேறு. சென்னை மாநிலத்தில் தமிழ் ஒன்றே வட்டாரமொழி.

1959 முதல் தமிழகத்தின் கல்லூரிகளில் கலைத்துறைப் பாடங்கள் தமிழில்தான் பயிற்றுவிக்கப்படும் என்று அரசு திட்டவட்டமாக அறிவித்திருந்ததால் இன்று அறிவியலும் அந்த நிலையை எட்டி இருக்கும். சட்டத்தாலும், ஐயுறவாலும் அதனைச் செய்யத் தவறிய காரணத்தால் இடர்பாடுகள் ஏற்பட்டன. தமிழில் பயின்றால் தரம் கெட்டுப் போய்விடும். தமிழில் பாடநூல்கள் இல்லை. அறிவியல் மற்றும் கலைத்துறைப் பாடங்களைத் தமிழில் எழுதக் கலைச் சொற்கள் இல்லை. இவற்றைக் கூறியே மக்களை அச்சத்திற்கும், அவலத்திற்கும் ஆளாக்கினர்.

இதற்கு உண்மையான காரணம் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாக இருந்ததுதான். அது அவர்கட்கு ஓர் நல்ல அடிப்படையாயிற்று. இதனைக் கண்ட வல்லவர்களின் உள்ளத்தில் அச்சமும் வஞ்சனையும் உருவாயின. எனவே 1959இல் அரசு ஆணையைக் கண்டு குறை கூறினர். 1959இல் அரசு ஆணையை எதிர்த்தவர்களின் ஆசைக்கு இணங்க மழலையர் பள்ளிகளில் 3ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் பயிற்று மொழி ஆனது.

**கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழி**

1959ஆம் ஆண்டு தமிழக அரசு ஆணையை நிறைவேற்ற கோவை அரசினர் கல்லூரி முன்னோடிக் கல்லூரியாகத் தேர்வு செய்யப்பட்டது. இந்தப் பாடத் திட்டத்தை அமுல்படுத்த ஜி.ஆர்.தாமோதரன் கல்லூரி தமிழ்க் குழு அமைக்கப்பட்டது. இக்குழு பரிந்துரைகளுக்கு மாநிலக் கல்வி அறிவுரைக் குழுவும் ஆதரவும் அளித்ததன் பொருட்டு 1963-64இல் பயிற்றுமொழி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்ற வேண்டும் என்று ஆணை வந்தது. மேலும் 1948லேயே துணைவேந்தர்களின் கல்விக்குழு பல்கலைக்கழக அளவில் பயிற்று மொழியாக ஆங்கிலத்தை மாற்றுவது வரும் 5 ஆண்டுகளுக்குள் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தாலும் உயர்கல்வி அமைப்புகளிடமிருந்து எதிர்ப்பு தொடக்கத்தில் இல்லை. கல்லூரிகளில் பாடநூல்கள் இல்லை என்ற நிலையைக் களைய 1959இல் கல்லூரித் தமிழ் கல்விக் குழு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, பின் 1962இல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் (Tamil Nadu Text Book Society) தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் புதுமுக வகுப்பு இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்பு வரை நூல்களை வெளியிட்டது. இவற்றுள் 416 நூல்கள் கலைப் பாடத்திற்கும் 418 நூல்கள் அறிவியல் பாடத்திற்கும் உரியவை. ஆனால் 1962இல் சட்டசபை விவாதத்தில் தமிழ்வழி பயில மாணவர்களிடையே ஆர்வமில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. 1962இல் இடைநிலைக் கல்வியில் ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிக் கல்வியைத் தொடங்க 65 பள்ளிகளுக்கு

இசைவளிக்கப்பட்டது. அதன் வெளிப்பாடு 1962க்குப் பின்னர் மிகுதியாயிற்று. 1965க்குப் பின்னர் அதன் உத்வேகம் மிக மிக அதிகமாயிற்று.

பொதுமக்களுக்கும், பள்ளி நிர்வாகத்தினருக்கும் ஆங்கில வழிக் கல்வியில் இருந்த ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு ஆங்கில வழிப் பிரிவுகளை அதிகமாக்க அரசு முடிவு செய்தது. 1967இல் நடந்த மாநிலக் கல்வித்துறை மாநாட்டில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், வட்ட தலைநகரங்களில் ஆங்கில வழிப் பள்ளிகளில் பிரிவுகளைக் கூடுதலாக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.

அன்றைய அரசு அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகள் 100 கூடுதலாகத் தொடங்குவதற்கு அனுமதியளித்தது. பிறகு 1968-69இல் மாற்றுப் பயிற்று மொழியாக அறிவியல் பாடங்களுக்குத் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

1969 சூன் தமிழ்ப் பயிற்று மொழியை மிகுவிக்கும் வகையில் தமிழக அரசுக் கல்லூரிகளில் மேலும் சில பாடங்களைத் தமிழ்வழிக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆங்கில வழிப் பிரிவுகள் சிலவும் கூட தமிழ்வழிப் பிரிவுகளாக மாற்றப்பட்டன. இது தமிழ்த் திணிப்பு எனப்பட்டது. இதைக் காரணம் காட்டியே தமிழகத்தில் ஆங்கிலம் சார்பாக ஓர் இயக்கம் உருவெடுத்தது.

**தமிழ் படித்தால் வேலை கிடைக்காது**

1970இல் கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை விரிவுபடுத்தும் ஆணையைச் சிண்டிகேட் காங்கிரஸ்காரர்களும், டாக்டர் எ.லெட்சுமணசாமி முதலியார் போன்றவர்களும் எதிர்த்தனர். மதுரையில் இவ்வாணையை எதிர்த்து மாநாடு நடந்தது. மாணவர்கள் பெரும் போராட்டத்தில் குதித்தனர். அன்றைய முதல்வர் கருணாநிதி கொடும்பாவியைக் கொளுத்தினர். வேலை வாய்ப்பு இவ்வாணையால் பறிபோகும் எனக் கூறினர். இந்தப் போராட்டத்தைக் கைவிடச் சொல்லி கலைஞர் விடுத்த வேண்டுகோள்,

**பொதுவான வேலையில்லாத்**
**திண்டாட்டத்தைத் தமிழ்ப் பயிற்று மொழியுடன்**
**முடிச்சு போடாதீர் - கலைஞர்**

“நான் எந்த மாணவர்களுக்காக இந்தியை எதிர்த்துப் பலமுறை சிறை சென்றேனோ, எந்த மாணவர்களுக்காக முப்பது ஆண்டுகளுக்கு முன்பே “தமிழ் மாணவர் மன்றம்” தொடங்கினேனோ, எந்த மாணவர்களின் பெயரால் பாளையங்கோட்டைச் சிறையில் பாதுகாப்பு கைதியாகத் தனிமைச் சிறைவாசம் செய்தேனோ அந்த மாணவர்களின் அடுத்த வரிசையினர் என் கொடும்பாவிக்கும் கொள்ளி வைப்பதென்றால், அது மகிழ்ச்சியோடு தாங்கக்கூடிய ஒன்றுதானே, பொதுவாகவே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பயிற்றுமொழிப் பிரச்சினையையும் ஒன்றாக்கி முடிபோடுகிற பேச்சுக்கள் வெறும் அரசியல் லாபத்திற்காகப் பேசப்படுபவை என்பதை மாணவ நண்பர்களே புரிந்து கொள்ளுங்கள்” என்று உரைத்தார்.

இந்த நிலையில் அன்றைய கல்விக் கொள்கை நிலைப்பாட்டைக் கலைஞர் அமைச்சரவையில் கல்வி அமைச்சர், மேலவையில் நிகழ்த்திய வரலாறு சிறப்புமிக்கதொரு தமிழ்ப் பயிற்று மொழி ஆதரவுக்கான உரை கவனத்திற்குரியது.

1970 தமிழ்ப் பயிற்று மொழி ஆணை எதிர்ப்புக்கு - கல்வியமைச்சர் அறிக்கை,

“பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிற்றுமொழி சம்பந்தமான அரசாங்க நிலையினை இந்த அவையில் எடுத்து வைக்க இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். தாய்மொழியே பயிற்சி மொழியாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற உணர்வு கடந்த முப்பதாண்டு காலமாகக் குறிப்பாகச் சுதந்திரம் அடைந்த பிறகு அதிகரித்து வந்துள்ளது.

நம் மாநிலத்தில் 1939 முதற்கொண்டே கல்வித் துறையில் எடுக்கப்பட்ட முற்போக்கு நடவடிக்கை மூலம் நமது மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியே பயிற்சி மொழியாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை நல்ல முறையில் செயல்பட்டு வந்த செழுமையான பலனையும் தந்துள்ளது” என்று கல்வியமைச்சர் தான் அறிக்கையில் கூறினார்.

இதே காலத்தில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் டாக்டர் ஏ.லெட்சுமணசாமி முதலியார், டாக்டர் ஏ.ராமசாமி முதலியார் உள்பட பலர் ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு நடத்தினர். அம்மாநாட்டில் ஆங்கிலம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்ற கொள்கை விளக்கத்தினை முன்னிறுத்தினர். இதன் காரணமாக ஆங்கிலம் வாழ்க, தமிழ் ஒழிக என்று கூறுமளவுக்கு மாநிலம் முழுவதும் போராட்டம் தொடர்வதைக் கண்டு குன்றக்குடி அடிகளார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் போன்றவர்கள் கலைஞரிடம் சிறிது காலம் தமிழ்ப் பயிற்று மொழி ஆணையை நிறுத்தி வைக்கக் கோரினர் என்பது சரித்திரம். இந்தக் காலகட்டத்திற்குப் பிறகுதான் இந்திய அரசு மாநில அரசிடம் இருந்த கல்வியைப் பொதுப்

பட்டியலுக்கு மாற்றியது. இந்த மாற்றம் தமிழ் மொழிக் கல்வி வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்தது. இதன் பிறகு தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகள், கேந்திரவித்யாலயா பள்ளிகள் நூற்றுக் கணக்கில் தோன்றி ஆங்கிலவழிக் கல்விக்கு அடிகோல, தமிழ் வளர்ச்சிக்கு இடையூறாக அமைந்தது. ஏனெனில் அரசு 1972இல் முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளுக்குப் பயிற்றுமொழியாக 7 மொழிகள் அறிவிக்கப்பட்டன. இவ்வாணைப்படி தமிழையும் படிக்கலாம். ஆனால் ஆங்கிலம் கட்டாயம்.

ஆங்கில வழிப் பள்ளிகளின் எண்ணிக்கை கூடியதன், காரணமாகவும் பயிற்றுமொழிக் கொள்கை காரணமாகவும் 1969ஆம் ஆண்டு மட்டும் ஆங்கில வழிப் பள்ளிகளில் இடம் பிடிப்பதற்கான எண்ணிக்கை 20 முதல் 25 விழுக்காடு வரை கூடியதாகத் தெரிகிறது. சென்னை நகரத்தில் மட்டும் 120 பள்ளிகள் இருந்தன. இவற்றுள் பெரும்பாலானவை நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஆங்கில வழிப் பிரிவுகளைக் கொண்டிருந்தன. இப்பள்ளிகளில் சேர்ப்பதற்குரிய இடங்களைப் போல மூன்று நான்கு மடங்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றன. நகரத்திலிருந்த 300 ஆங்கில வழி மழலையர் பள்ளிகளிலிருந்து ஆங்கில வழி இடைநிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பித்தனர். இவர்கள் கல்லூரியை எட்டும் பொழுது ஆங்கிலவழிக் கல்வியை நாடினர் என்பது நடைமுறையானது.

தமிழ்வழிக் கல்விக்கு இவர்கள் ஆதரவு தராதவர்களாயினர். இதன் காரணமாகக் கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்வி மூலம் படிப்பவருக்கு அரசாங்கம் உதவித் தொகை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி படிக்க பணம் கொடுக்கப்பட்டது. மாணவரும் பெற்றோரும் தானாக வந்து தமிழ்ப் பயிற்று மொழியை ஆதரிக்கவில்லை.

1971ஆம் ஆண்டு சூன் மாதத்தில் கல்லூரிகளில் தமிழ்வழிப் பயில மாணவர்களை ஈர்க்கும் வகையில் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ் இளங்கலை, இளமறிவியல் பட்டங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் ஆண்டுதோறும் ரூபாய் 180 பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இது 1971-72ஆம் ஆண்டிலிருந்து அரசுக் கல்லூரிகளில் மட்டுமின்றி தனியார் கல்லூரிகளில் தமிழ்வழி பயிலும் மாணவர்களுக்கும் இவ்வுதவித் தொகை வழங்கப்பட்டது.

இது போலவே புதுமுக வகுப்பு பயிலும் மாணவர்கள் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டோராக இருப்பின் தமிழில் பாடநூல்கள் வாங்குவதற்கு வாய்ப்பாக ரூபாய் 80 புத்தகப் படியாகத் தரப்பட்டது. இக்காலத்தில் நடைபெற்ற இளமறிவியல் பட்ட வகுப்புகள் தனியார் கல்லூரிகளில் ஆங்கில வழியிலேயே நடைபெற்றன. அரசுக் கல்லூரிகள் கூட இருமொழிகளிலும் கற்பித்தன. தமிழ்வழிக் கல்வி ஆணைக்கு எதிர்ப்பு 1970இல் வந்தபொழுது அதனைக் கலைஞர் திரும்பப் பெற்றுக் கொண்டு அதனால் ஏற்பட்ட வருத்தத்தை 1975இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய பட்டமளிப்பு விழாவில்,

"தமிழில் கற்றால் புத்துலகத்தோடு போட்டி போடும் புதிய வரலாறு எழுத இயலும் பத்தாண்டுகட்கு முன்பே தமிழால் முடியும் என்று உறுதி தோன்றியது. முயற்சி அரும்பியது. தமிழைப் பயிற்று மொழியாக்கும் நிலையை முழுமையாக்கிட ஏழாண்டுகளுக்கு முன்பு சூளுரை மேற்கொண்டோம் பயன் யாது? "பயிற்று மொழி உணர்வைக் கெடுக்க, வயிற்றுமொழி உணர்வு" தூண்டிவிட்டது தமிழ், சோறிடாதோ? சோம்பிக் கிடக்குமோ? சோறும் தரும், சுயமரியாதையும் தரும் என்று எடுத்து வைத்த சான்றுகள் விழலுக்கிறைத்த நீராயிற்று. வெண்ணிலா, காட்டில் காய்ந்த கதையாயிற்று விறுவிறுப்பான வேலை நிறுத்த நடவடிக்கைகள், மாணவர்களின் உணர்ச்சியைத் தட்டிவிட்ட எழுப்பப் பெற்ற, கிளர்ச்சியை விளக்கப் பெறுவதற்கான அமைதியான தன்மையைத் திரைபோட்டு மறைத்ததால் தமிழ் பயிற்றுமொழித் திட்டம் தயங்கி நின்றது" என்று கூறினார்.

**தமிழ் பயிற்று மொழிக்குத் தடை - விளை என்ன**

அறிவியல் கலைகள் பற்றிய பாடங்களைப் பள்ளிகளில் போதிக்கத் தொடங்கியபோது ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழைப் பயிற்சி மொழியாக்கி இருந்தால் இதற்குள் அறிவியல் சொற்கள் தமிழிலும் (கொள்ளை பல நிலைகளில் கொள்ளையாகக்) குவிந்திருக்கலாம். இதேபோல் பாடப் புத்தகங்கள் மட்டுமே அல்லாமல் தகவல் புத்தகங்கள் மொழி பெயர்க்கப்படவில்லை என்று இராது. தமிழைப் பயிற்சி மொழியாக்கி இருந்தாலும் அதுவும் நடந்திருக்கலாம்.

# நியூ செஞ்சுரியின்
# விற்பனை சாதனை நூல்கள்





**தமிழகத்தில் சாதி உருவாக்கமும்**
**சமூக மாற்றமும்**
(பொ.ஆ.800-1500)
நொபொரு கராஷிமா, எ.சுப்பராயலு

₹ 70/-





**இந்தியத் தத்துவங்களும்**
**தமிழின் தடங்களும்**
ந.முத்துமோகன்

₹ 370/-





**பிராமண போஜனமும்**
**சட்டிச் சோறும்**
இடைக்காலத் தமிழகத்தில் வைதீகமும்
சாதி உருவாக்கமும்
ஆ.சிவசுப்பிரமணியன்

₹ 75/-





**கார்ல் மார்க்ஸ்**
**வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்

₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை

₹ 155/-




**சோமநாதர்**
வரலாற்றின் பல குரல்கள்
ரொமிலா தாப்பர்

₹ 300/-

# உல்லாசத் திருமணம்

## ஒரு மனதை உருக்கும் மூன்று தலைமுறைக் கதை

கி.நாச்சிமுத்து




**உல்லாசத் திருமணம்** (தமிழில் விரியும் பிரெஞ்சு வழி / ஆப்பிரிக்க உலகம்) பிரெஞ்சு நாவல் (2016) / மூல ஆசிரியர்: தஹர் பென் ஜெலூன் (மொராக்கோ) / தமிழில்: சு.ஆ.வெங்கடசுப்புராய நாயகர் / தடாகம் வெளியீடு, சென்னை 2020 / பக்.263, விலை 300

*அண்மையில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரெஞ்சுப் பேராசிரியர் சு.ஆ.வெங்கடசுப்புராய நாயகர் மூன்று மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளார். 1.உல்லாசத் திருமணம். பிரெஞ்சு நாவல்(2016) மூல ஆசிரியர் தஹர் பென் ஜெலூன்(மொராக்கோ), 2.ஆன்டன் செக்காவ் ஆகச் சிறந்த கதைகள், தமிழில் 3.வாழ்வு இறப்பு வாழ்வு லூயி பஸ்தேர் (1822-1895) வாழ்க்கை வரலாறு. இவை மூன்றையும் தடாகம் பதிப்பகம் சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது.*

மனதை உருக்கும் மூன்று தலைமுறைக் கதையைச் சொல்லும் உல்லாசத் திருமணம் நாவலை பிரெஞ்சில் எழுதிய தஹர் பென் ஜெலூன் அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பிரெஞ்சில்

எழுதும் மொராக்கோ எழுத்தாளர். அவரைப்பற்றி மொழிபெயர்ப்பு ஆசிரியர் சு.ஆ.வெங்கடசுப்புராய நாயகர் அறிமுகப்படுத்துவதைப் பார்ப்போம்.

'வட ஆப்பிரிக்க பின்காலனித்துவ எழுத்தாளர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கும் ஜெலூன் தாய்மொழியான அரேபிய மொழியில் எழுதாமல் பிரெஞ்சு மொழியிலேயே தன் இலக்கியப் படைப்புகளான புதினங்கள்,கவிதைகள்,கட்டுரைகள் அனைத்தையும் எழுதிவருகிறார். இலக்கியத்தின் மூலம் இனவேற்றுமைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறார்.

2016 இல் வெளியான **உல்லாசத் திருமணம்** எனும் இப்புதினத்திலும் இது எதிரொலிப்பதை உணரலாம்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட இவரது படைப்புகள் நாற்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அதனாலேயே ஜெலூன், பிரெஞ்சு மொழியினைத் தாய்மொழியாய்க் கொள்ளாத எழுத்தாளர்களின் படைப்புகளில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட படைப்புக்களுக்குரியவர் என்ற பெருமை பெற்றவராகிறார்.

சமூகத்தில் மனித இனம் எதிர்கொள்ளும் சிக்கல்களை வாசகர்களுக்கு நெருக்கமான மொழியில், நடையில் எடுத்துரைக்கும் உத்தியினைக் கொண்டவர் ஜெலூன்.

பல இலக்கியப் பரிசுகளைப் பெற்றுள்ள இவர் பெயர் நோபல் பரிசுத் தேர்வுப் பட்டியலிலும் உள்ளது. இவர் இப்போது பாரிசில் வாழ்ந்து வருகிறார்.

உல்லாசத் திருமணம் ஒரு மனதை உருக்கும் மூன்றுதலைமுறைக் கதை.

மொராக்கோவிலுள்ள ஃபேஸ் நகரத்தைச் சேர்ந்த வெள்ளை நிறமுள்ள அரபு வணிகனான அமீர் வணிக நிமித்தமாக செனகல் நாட்டிற்குச் செல்லும்போது அன்று வழக்கிலிருந்த உல்லாசத் திருமணம் என்ற தற்காலிகத் திருமண ஏற்பாட்டின்படி நபு என்ற அழகான கருப்பினப் பெண்ணுடன் சில காலம் வாழ்ந்துவிட்டுத் திரும்பும்போது அவள் மீது உள்ள காதலால் தன் நாட்டிற்கு அழைத்துவந்து தன் வெள்ளை அரபு முதல் மனைவி லாலா ஃபாத்மாவின் எதிர்ப்பையும் மீறி இசுலாமிய முறைப்படி இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறான். அமீருக்கும் நபுவுக்கும் வெள்ளைநிறத்திலும் கருப்பு நிறத்திலும் ஹுசேன் ஹசன் என்ற இரு மகன்கள் பிறக்கின்றனர். பின்பு அமீரின் முதல் மனைவி லாலா ஃபாத்மாவும் ஒருவர் பின் ஒருவராக இறக்கின்றனர். அதன் பின் அமீர் குடும்பத்தின் பல்வேறு நிறவெறித் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்ட அவன் இரண்டாம் கருப்பின மனைவி நபு தன் கருப்பு மகன் ஹசனுக்குப் பிறந்த பேரன் சலீம், ஐரோப்பாவிற்குக் குடிபெயரும் முயற்சியில் எல்லை தாண்டும்போது குண்டடிபட்டுச் சாவதையும், மகன் ஹசன் பைத்தியமாவதையும் கண்டு நிற்பதோடு கதை முடிகிறது. இக்கதைகளுக்குச் சாட்சி போல இக்கதையில் தொடர்ந்து வருபவன் அமீருக்கு முதல் திருமணத்தில் பிறந்த வெள்ளை நிறத்திலுள்ள மனிதாபிமானியான மனவளர்ச்சி குறைந்த கரீம் என்ற பாத்திரம்.

உல்லாசத் திருமணம் என்ற ஏற்பாடு அரபு வணிகர்கள் ஆப்பிரிக்க நாடுகளுக்கு வணிகம் காரணமாகச் சென்று தங்கியிருக்கிற காலத்தில் வைப்பாட்டிகள் போல் இன்பம் அனுபவிக்கத் தற்காலிகமாக வைத்துக் கொள்கிற ஒரு சுரண்டல் ஏற்பாடு. இதற்கு ஒப்பந்த ஆவணங்கள் உண்டு. இது ஒரு வகைப் பெண் அடிமை முறை. கேரளத்தில் நம்பூதிரி பிராமணர்கள் நாயர் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளாமல் வைத்துக் கொண்டிருந்த சம்பந்தம் என்பது போல இது இருக்கிறது என நினைக்கலாம். ஆனால் இரண்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் முடிவு சொல்லவேண்டும். நம் நாட்டுத் தன வணிகர்களும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் போனபோது இத்தகைய நடைமுறை இருந்தது. ஏன் நாம் 'அன்பின் ஐந்திணை' என்று மாய்ந்து மாய்ந்து கொண்டாடுகிற தமிழ் அகத்திணையில் காணப்படும் மருதம் என்ற திணையில் வரும் பரத்தையர் பண்பாடும் அதன் வழிப்பட்டுப் பிற்காலத்தில் கட்டமைக்கப்பட்ட கணிகையர் முறையும் இந்த ஆண்மையைப் பெண்ணடிமைத்தனத்தின் வெளிப்பாடுதான். இந்தக் கண்ட்ராவியை வெறுத்துப் பகுத்தறிவுப் பகலவன் வள்ளுவர் தான் பாடிய இன்பத்துப் பாலில் இந்த மருதக் காட்டுமிராண்டித்தனத்தைப் பாடாமல் விட்டுவிட்டார் என்பது அவர் பெண்ணுரிமைக்கு ஆற்றிய பெரும்பங்கு எனக் கொண்டாடலாம்.

இந்த நாவலை அராபிய ஆயிரத்தொரு இரவுக் கதைகளில் வருவதைப் போல கோஹா ஒரு கதை சொல்லி சொல்லுவது போல அமைத்துள்ளார்.இந்த

நாவலில் வெள்ளை நிறத்தில் பிறந்த அராபிய முசுலீம்களும் ஐரோப்பிய வெள்ளை நிறத்தவரும் கருப்பு நிறத்தில் பிறந்த ஆப்பிரிக்க கருப்பினத்தவரை விலங்கு போல எந்தவித மனிதாபிமானமும் கூச்ச நாச்சமும் இன்றி நடத்துவதை அப்பட்டமான கதைகளாக அமையும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் மூலம் ஆசிரியர் நம் முன் படைத்துக் காட்டுவது நம்மைப் பல வேளைகளிலும் அதிர்ச்சிக்கும் சொல்லொணா வருத்தத்திற்கும் உள்ளாக்குகிறது. இங்கு அருளாளர்களும் அறிவார்ந்தவர்களும் உருவாக்கிய மதம் எப்படி ஒரு பாசாங்காக முகமூடியாய் மாறுகிறது என்பதை நாவலாசிரியர் பல இடங்களில் கதைக்களங்கள் மூலம் விவரிக்கிறார்.மனிதனுக்கு மேலுலகில் மோட்சத்தை முன்பதிவு செய்யும் மதங்கள் இவ்வுலக வாழ்வில் மனிதனின் ஈடேற்றத்திற்கும் மீட்சிக்கும் உதவாத மண்குதிரைகள் என்பதை இந்நாவலின் சாரமாகக் கொள்ளலாம். இந்த நாவலில் கருப்பின மக்கள் ஆளாகும் சொல்ல முடியாத இன்னல்கள் இழிவுகள் பல இடங்களில் தூக்கலாகச் சொல்லப்பட்டாலும் பெண்கள் குறிப்பாகக் கருப்பினப் பெண்கள் படும் அத்தகைய இழிவுகளும் இன்னல்களும் பூடகமாக முக்கியத்துவம் பெறுகின்றன என்று தோன்றுகிறது.மேலும் மனிதன் எங்கு எப்படி இருந்தாலும் அவனுக்குள் கடவுள் ஓரிருவராகவும் சாத்தான்கள் அரக்கர்கள் வகையறாக்கள் பலராகவும் இருப்பதை நாவல் கதைமாந்தர்கள் காட்டி நிற்கிறார்கள்.அநீதியைக் கண்டும் காணாது போகிற அமீர் அநீதியைத் தன்னளவில் தாங்கிக் கொள்ள முடியாத கரீம் போன்றவர்கள் கருத்துக்களும் குரல்களும் இளைத்தே ஒலிக்கின்றன. சுருக்கமாக நிறவெறி, பெண்ணடிமைத்தனம், பொருளாதாரச் சுரண்டல், மதங்களின் கபடம் இவையே இந்த நாவலின் பாவிகம் எனலாம்.

நாவலாசிரியர் பற்றிய குறிப்பும் மொழிபெயர்ப்பாசிரியர் பற்றிய குறிப்பும், நாவலில் இடம்பெறும் இடப்பெயர்கள் இசுலாமியக் கலைச் சொற்கள் முதலியவற்றின் அகராதியும் கதைமாந்தர்களிடையே உள்ள உறவுமுறை விளக்கம் பற்றிய கிளைப்படமும் வாசகர்களுக்குப் பயன்படும். கதை நிகழும் இடங்களின் நிலப்படம் ஒன்றை இணைத்திருக்கலாம். பேரா.பஞ்சாங்கம் அவர்கள் முன்னுரை நாவலுக்கு ஒரு முன்னோட்டமாக அமைகிறது.

நாம் அறியாத இன்னொரு மனித இனத்தின் இருளடைந்த ஏடுகளை அறிந்து கொள்ள இந்த நாவலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ள வெங்கடசுப்புராய நாயகர் அவர்கள் பணியை எப்படி எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர் மொழிபெயர்ப்பு மொழி பெயர்ப்பு என்று தோன்றாதபடி பச்சைத் தமிழாகவே இருக்கிறது. மூலமொழியை அருமையான எளிய ஆழமான நடையில் ஆற்றொழுக்காக மரபு பிறழாமல் தமிழாக்கியிருக்கிறார். இதனால் தங்கு தடையின்றி நாம் வாசிக்க முடிகிறது. மொழி பெயர்ப்பு இனிமையானதாகவும் பெறுமொழியாளர்களாகிய தமிழர்களுக்கு நெருக்கமானதாகவும் கொணர்வதற்கு நாயகர் நன்கு உழைத்திருக்கிறார் என்பதை இதைப் படிக்கிற யாரும் உணர்வார்கள். நாயகர் அவர்கள் தாம் எதிர்கொண்ட மொழிபெயர்ப்புச் சிக்கல்கள், அதைத் தீர்க்கத் தாம் கையாண்ட மொழிபெயர்ப்பு உத்திகள் போன்றவற்றை ஒரு விரிவான கட்டுரையாக எழுதி வெளியிட்டால் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் பற்றிய கையேடு ஒன்றை உருவாக்கவும் பிரெஞ்சு தமிழ் மொழிபெயர்ப்புகள் பற்றிய கோட்பாடுகளை உருவாக்கவும் பெரிதும் உதவியாக இருக்கும்.

கதையில் பாத்திரங்கள் செயல்கள் ஒருமையில் சொன்னான் சொன்னாள் என்பது போல மொழிபெயர்க்கப்பட்டது ஏன் என்று என்னைக் குடைந்த கேள்விக்கு விடை தேடியபோது மூலமொழியான பிரெஞ்சில் அப்படி அமைந்திருக்க வாய்ப்பிருந்திருக்கும் என்று தோன்றியது. பிரெஞ்சில் தமிழில் போல (ர்) மரியாதைப் பலர்பால் உண்டா என்று எனக்குத் தெரியாது. இல்லை என்று நாயகர் உரையாடும்போது தெரிவித்தார். ஆனால் கதை சொல்லி கோஹா பார்வையில் அப்படிச் சொல்லியிருப்பார் என்று தோன்றியது. அந்த நுட்பத்தை ஆசிரியர் எடுத்துரைப்பில் கொண்டு வந்துள்ளது பொருத்தமானது.

**கீழே உள்ள நீண்ட வாக்கியத்தைப் பாருங்கள்.-**

*1.'வட ஆப்பிரிக்க பின் காலனித்துவ எழுத்தாளர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கும் ஜெலூன், பிரஞ்சு மொழியினைத் தாய்மொழியாய்க் கொள்ளாத எழுத்தாளர்களின் படைப்புகளில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட பெருமைக்குரியவர்.' பக்.1)*

இந்த வாக்கியத்தைப் பிழை என்று சொல்லமுடியாது. திருவள்ளுவரை மொழிபெயர்த்தவர் என்ற வாக்கியத்தில் திருவள்ளுவர் என்பது அவர் இயற்றிய திருக்குறளைச் சுட்டுவது போன்ற முதலாகுபெயர் வழக்கு இது.

ஆனால் இதுவே 'வட ஆப்பிரிக்க பின்காலனித்துவ எழுத்தாளர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கும் ஜெலூன், பிரெஞ்சு மொழியினைத் தாய்மொழியாய்க் கொள்ளாத எழுத்தாளர்களின் **படைப்புகளில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட படைப்புக்களுக்குரியவர் என்ற பெருமை பெற்றவர்.'**

என்றிருந்தால் கவர்பொருள் மயக்கம் ஏற்படாது.

இன்னும் சில எடுத்துக்காட்டுக்கள்-

*2.(ஹுசேன்)இளம்வயதில் தன் சகோதரன் ஹசனுக்கு நேர் எதிராகப் பெண்களை வளைப்பவனாக வலம் வந்தான் (பக்.191).*

என்ற வாக்கியம் கீழ்க்கண்டவாறெல்லாம் அமையலாம்.

*(ஹுசேன்)இளம்வயதில் தன் சகோதரன் ஹசனுக்கு நேர்மாறாகப் பெண்களை வளைப்பவனாக வலம் வந்தான்*

இது '(ஹுசேன்)இளம்வயதில் தன் சகோதரன் ஹசனிலிருந்து மாறுபட்டவனாய்ப் பெண்களை வளைப்பவனாக வலம் வந்தான்

*(ஹுசேன்)இளம்வயதில் தன் சகோதரன் ஹசனைப் போல் அல்லாமல் பெண்களை வளைப்பவனாக (வளைக்கிற கில்லாடியாக) வலம் வந்தான்*

*3.'உலகம் அழியப்போவது நிச்சயம். 1.தீய பழக்கங்களை விட்டுவிட்டு,எக்காலத்துக்குமான இறைத்தூதர் கற்றுத்தந்த தேவையான விழுமியங்களைக் கடைப்பிடித்து நல்வழிக்குத் திரும்ப வேண்டியது அவசியம்' என்று கூறினான். 2.தீமையினால் ஆக்கிரமிக்கப்பட்ட உடலினையும், மனதையும் கொண்ட தீய சமயப் பற்றாளர்களுக்கு உதவ முன்வருபவர் அவர் ஒருவரே என்றும் கத்தினான். பக். 193*

தீய பழக்கங்களை விட்டுவிட்டு, இறைத்தூதர் கற்றுத்தந்த **எக்காலத்துக்கும்** தேவையான விழுமியங்களை என்று தொடர் இடம் மாறி அமையின் நலம்.

**தீமை நிறைந்த உடலினையும்,மனதையும் உடைய தீய சமயப்** பற்றாளர்களுக்கு **அவர்கள் அதிலிருந்து மீளவதற்கு** உதவ முன்வருபவர் அவர் ஒருவரே என்றும் கத்தினான். இங்கே அவர்கள் **அவற்றிலிருந்து மீள்வதற்கு** என்ற தொடர் சேர்ப்பின் பொருள் தெளிவுபடும்.

செடிக்குத் தண்ணீர் என்றால் குகரம் 'வளர்ச்சி உண்டாதல் பொருட்டு' என்று பொருள் தரும். நோய்க்கு மருந்து என்றால் குகரம் 'நீங்குதல் பொருட்டு' என்று பொருள் தரும். 'பித்தத்திற்கு இஞ்சி' என்பதும் இப்படியே. இவ் வேறுபாடு நமக்குத் தெரிந்தாலும் சிலவேளை இது தெளிவாகாததால் பொருட்குழப்பம் ஏற்படும்.

**அறத்திற்கே அன்புசார்பு என்பர் அறிவிலார்**
**மறத்திற்கும் அஃதே துணை** (குறள்.76)

என்ற குறளிலும் இது போன்ற இரண்டு ஆட்சிகளைப் பார்க்கலாம். அறத்திற்குச் சார்பு என்பது அறத்தை ஆக்குதற்குத் துணை என்று பொருள்படும். மறத்திற்குத் துணை என்றால் மறத்தை நீக்குதற்குத் துணை என்று பொருள். நான்காம் வேற்றுமைக் குகர உருபின் நுட்பமான பொருள்வேறுபாட்டை உணர்ந்து' 'மறத்தை நீக்குதற்கு' என்று பரிமேலழகர்பொருள் கொள்வதைப் போல் பொருள் கொள்ளவேண்டும். அப்படிக் கொள்ளாமல் 'மறத்தை ஆக்குதற்கும் அறம் துணை செய்யும்' என்று பொருள் எழுதுவது பிறழ் பொருள் ஆகிவிடும். இங்கும் அப்படிப் பிறழ் பொருள் கொள்ளும்படி மயக்கம் தருகிறது. அந்த மயக்கத்தை நீக்கும்படி மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும்.

*4.இத்தகைய மிதமிஞ்சிய இனவெறியும், அடக்கு முறையும் ஆப்பிரிக்கர்களை விட அரேபியர்கள் மேல் நிலையில் உள்ளவர்கள் என்று கூறப்படும் காலனிய மனோபாவத்தால் நியாயப்படுத்தப்பட்டன (பக்.200)* என்ற பகுதியில் காரணத் தொடர்(1)முன்பும் செயப்பாட்டு வினை எழுவாய்த்தொடர் (2) தொடர்ந்தும் அமைந்தால் நன்றாக இருக்கும். இங்குக் கூறப்படும் என்னும் செயப்பாட்டுத் தொடர் கருதும் என்று செய்வினையாக அமைக்கலாம்.

***1.ஆப்பிரிக்கர்களை விட அரேபியர்கள் உயர்ந்தவர்கள் என்று கருதும் காலனிய மனோபாவத்தால் 2.இத்தகைய மிதமிஞ்சிய இனவெறியும், அடக்கு முறையும் நியாயப்படுத்தப்பட்டன.***

இப்பகுதியிலுள்ள முக்கியச் செயப்பாட்டுத் தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றினால் இன்னும் நன்றாக இருக்கும்.

***ஆப்பிரிக்கர்களை விட அரேபியர்கள் உயர்ந்தவர்கள் என்று கருதும் காலனிய மனோபாவம் இத்தகைய மிதமிஞ்சிய இனவெறியையும் அடக்கு முறையையும் நியாயப்படுத்திக் கொண்டன.***


இன்னும் நாயகர் மொழிபெயர்த்துள்ள லூயி பஸ்தேர் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலையும் படித்துக் கொண்டுள்ளேன். அதனையும் சுவையாக மொழியாக்கம் செய்துள்ளார் அவர். அது பற்றி எழுதினால் நீண்டுவிடும்.பிறகு பார்க்கலாம்.

கடந்த முப்பது ஆண்டுகளாகப் புதுவையில் பிரெஞ்சுப் பேராசிரியராகப் பணியாற்றும் பேரா.சு.ஆ.வெங்கடசுப்புராய நாயகர் பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம் என்று மூன்று மொழிகளுக்கிடையே ஆரவாரமின்றி மொழிபெயர்ப்புப் பணியிலும் இலக்கியப் பணியிலும் ஈடுபட்டு வருகிறார். இதுவரை நான்கு புதினங்களைப் பிரெஞ்சிலிருந்து நேரடியாகத் தமிழாக்கம் செய்துள்ளார். மேலும் பிரெஞ்சுச் சிறுகதைகளின் மொழியாக்கத் தொகுப்புகள் இரணடினையும் வெளியிட்டுள்ளார். தமிழிலிருந்து கதைகள், கவிதைகள் போன்றவற்றையும் பிரெஞ்சில் மொழியாக்கம் செய்துள்ளார்.அவர் பணிகளில் குறிப்பிடத்தக்கது சங்க இலக்கியங்களான குறுந்தொகை, ஐங்குறுநூறு இரண்டையும் முழுமையாகப் பிரெஞ்சில் மொழிபெயர்த்திருப்பதாகும்.மேலும் இவர் இடையிடையே பிரெஞ்சு அரசின் ஆதரவுடன் அந்நாட்டுக்குச் சென்று தங்கிப் பல மொழிபெயர்ப்புப் பணிகளையும் திட்டங்களையும் மேற்கொண்டுவருகிறார். கி.ரா.வும், பிரபஞ்சனும் இவருடைய பணிகளின் சிறப்பை உணர்ந்து பாராட்டிக் கொண்டாடுவார்கள்.

தமிழ் பிரெஞ்சு பிரெஞ்சு தமிழ் ஆங்கிலம் என்று மூன்று நிலையிலும் ஆற்றி வரும் பணிகள் அரியவை.பெரியவை. அவற்றை நாம் படிக்கவேண்டும். போற்றவேண்டும். அதுவே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறும் சிறப்பும். இந்த நூல்களைச் சிறப்பாக வெளியிட்டுள்ள தடாகம் பதிப்பகத்தாரையும் நாம் போற்றவேண்டும். ஆதரிக்க வேண்டும்.

●


நியூ செஞ்சுரி புதிய வெளியீடாக...




விலை: ரூ.145/-

வாய்மொழிக் கதைகள்

(வகைமை - சேகரிப்பு - பனுவலாக்கல்)

ஆ. சிவசுப்பிரமணியன்

சுருக்கமான அறிமுக நூலென்றாலும்
ஆய்வாளர்களைத் தூண்டும் ஆர்வமிக்க நூலாக
இது திகழ்கிறது. பண்பாட்டு ஆர்வலர்களுக்கும்,
தமிழியல் மாணவர்களுக்கும் இந்நூல் பெரிதும்
பயன்படும். வாய்மொழிக்குள் ஆழ்ந்திருக்கும்
வரலாற்றுக் கருத்துக்களையும், சமூகப் பண்பாட்டுக்
கருத்துக்களையும் எவ்வாறு அறிந்து கொள்வது
என்பதற்கும் இந்நூல் வழிகாட்டியாக அமைகிறது.
நாட்டார் வழக்காற்றியல் புலத்திற்கு
இந்நூல் ஓர் அருங்கொடை.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in


## முன் வெளியீட்டுத் திட்டம்

# தமிழில் மார்க்சிய செவ்வியல் நூல்கள் மொழிபெயர்ப்புத் திட்டம்

முதன்மைப் பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**



**பொதுவுடைமை - குழந்தைகளுக்காக**
பீனி அடம்லாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்: ஜேக்கப் புளுமென்ஃபெல்ட், சோஃபி லூவிஸ் | தமிழில் - எம். பாண்டியராஜன்




**இடதுசார் வெகுமக்களியத்தை நோக்கி**
சந்தால் மோஃபே | தமிழில்: பொன். சின்னதம்பி முருகேசன்



**சர்வாதிகாரம் குறித்து: இருபதாம் நூற்றாண்டிலிருந்து இருபது பாடங்கள்**
டிமோத்தி ஸ்னைடெர் | தமிழில்: ரமேஷ்




**அரசியலாகிற பண்பாடு**
கிறிஸ்டோபர் காட்வெல் பதிப்பாசிரியர்: டேவிட் மார்கோலியெஸ் தமிழில்: கமலாலயன்



**சொத்தின் வரலாறு - ஆதிகாலத்திலிருந்து நாகரிக காலம் வரை**
பால் லஃபார்க் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்




**லெனின் சந்தித்த நெருக்கடிகள்** (பயங்கரவாதம், போர், பேரரசு, காதல், புரட்சி)
தாரிக் அலி | தமிழில்: க.பூர்ணச்சந்திரன்



**கார்ல் மார்க்ஸ் - ஓர் ஆய்வு**
எர்னெஸ்ட் பிளாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: ஜான் மேக்ஸ்வெல் தமிழில்: பொன்.சின்னதம்பி முருகேசன்




**தொடக்கக் காலக் கிளர்ச்சியாளர்கள்**
எரிக் ஹாப்ஸ்பாம் தமிழில்: ரகு அந்தோணி



**மார்க்ஸ் : முதலாளியத்துக்கு மாற்று**
கியரென் ஆலென் | தமிழில்: சா.தேவதாஸ்



**ரோசா லக்சம்பர்கும் ஜனநாயக மீட்டுருவாக்கத்துக்கான போராட்டமும்**
ஜான் நிக்ஸன் | தமிழில்: சா.தேவதாஸ்




**சமூகம்சார் கொள்ளையர்கள்**
எரிக் ஹாப்ஸ்பாம் | தமிழில்: ரகு அந்தோணி



**கிராம்ஷியைப் பயன்படுத்துதல் - ஒரு புதிய அணுகுமுறை**
மைக்கேல் ஃபிலிப்பினி இத்தாலிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பேட்ரிக் ஜேபார் | தமிழில்: சே.கோச்சடை



**பாலியல் முதிர்ச்சிமிக்க கம்யூனிசப் பெண்ணின் தன்வரலாறு**
அலெக்சாண்டிரா கொலந்தாய் | ரஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: சல்வேதார் அத்தன்சியோ | தமிழில்: அ.மங்கை



**மார்க்சின் தத்துவம்**
எட்டியேன் பாலிபர் | பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: கிறிஸ் டர்னர் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்



**மார்க்சுக்கு ஆதரவாக**
லூயி அல்தூசர் | பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பென் புரூஸ்டெர் | தமிழில்: க. பூர்ணச்சந்திரன்

**15 நூல்கள்**
**சுமார் 4000 பக்கங்கள்**
**விலை இ.ரூ.5000/-**
**முன் வெளியீட்டுத் திட்டத்தில்**
**இ.ரூ.3000/-**
**மட்டுமே!**

**A5 அளவு,**
**தரமான தாள்,**
**அழகிய வடிவமைப்புடன்**

**கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.**

இலங்கையிலுள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள், வரலாற்றுத்துறை, தத்துவத் துறை, சமூகவியல் துறை மற்றும் மானுடவியல் துறைப் பேராசிரியர்கள், மாணவ - மாணவிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பெரிதும் பயன்படும் வகையில் தமிழில் 15 மார்க்சிய செவ்வியல் நூல்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன. இந்நூல்களை முன்வெளியீட்டுத் திட்டத்தில் பெற, இலங்கை கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>முகவரி</u>

**பூபாலசிங்கம் புத்தக சாலை,**
**202, செட்டியார் வீதி, கொழும்பு - 011, இலங்கை.**
**E.mail: poobalasingham202@gmail.com |**
**Ph: 011-2422321, 2435713**



கட்டுரை

# நமது நாட்டில் ஆசிரியர்களும் பள்ளி கல்வியும்: தேவைப்படும் மாற்றங்கள்

முனைவர் தி. ராஜ் பிரவின்

உலகம் முழுவதும் பள்ளி கல்வியில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது மற்றும் முதன்மையானதாகும். உலகளவில் பள்ளி கல்விக்கு முக்கியத்துவம் தரும் நாடுகள் அனைத்து தளங்களில் மிகவும் சிறந்து விளங்குகிறது. அண்மையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியீடு செய்து புள்ளி விவரங்களினபடி உலக அளவில்; மக்கள் தொகையில் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு (Child population) ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது நாடுகளிடையே மிகப்பெரிய அளவிலான வேறுபாடுகளை காண முடிகிறது. உலகின் பல வளர்ச்சிக் குறியீடுகளில் சிறந்து விளங்கும் டென்மார்க் நாட்டில் 1000 குழந்தைகளுக்கு 253 ஆசிரியர்கள் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. மறுபுறம் மனித வளர்ச்சிக் குறியீடுகளில் மிகவும் பின்தங்கிய டான்ஷானியா நாட்டில் 1000 குழந்தைகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர் என்று புள்ளி விபரங்கள் காட்டுகிறது. மேலும் உலகம் முழுவதும் அதிகம் மற்றும் மிகவும் குறைந்த ஆசிரியர்கள் கொண்ட நாடுகளின் பட்டியலும் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இதில் உலகில் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் குழந்தைகளின் எண்ணிக்கையை ஒப்பிடும் போது நமது பாரத நாடும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதைக் காண முடிகிறது. மேற்கண்ட நாடுகளின் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் எண்ணிக்கை புள்ளி விபரங்கள் நமக்கு பல உண்மைகளை வெளிக் காட்டுவதாக உள்ளது.

**உலகில் அதிக மற்றும் குறைந்த ஆசிரியர்கள் கொண்ட நாடுகளின் பட்டியல்**

| முதல் 10 நாடுகள் (Top 11 countries) | ஆசிரியர் எண்ணிக்கை / 15 வயதுக்குகீழ் உள்ளகுழந்தைகள் (1000க்கு) | கடைசி 10 நாடுகள் (Bottom 11 countries) | ஆசிரியர் எண்ணிக்கை / 15 வயதுக்குகீழ் உள்ளகுழந்தைகள் (1000க்கு) |
|---|---|---|---|
| டென்மார்க் | 253 | டான்ஷானியா | 2 |
| ஐஸ்லாந்து | 221 | காங்கோ | 4 |

| | | | |
|---|---|---|---|
| சுவிட்சர்லாந்து | 205 | போட்ஸ்வானா | 5 |
| நார்வே | 204 | பெரு | 10 |
| மால்டா | 190 | அங்கோலா | 11 |
| ஸ்லோவேனியா | 191 | செனிகல் (Senegal) | 13 |
| ஆஸ்டிரியா | 184 | மொஸாம்பிக் (Mozambique) | 13 |
| போர்ச்சுக்கல் | 178 | ஆப்கானிஸ்தான் | 14 |
| ரஷ்யா | 173 | இந்தியா | 14 |
| எஸ்டோனியா | 171 | எத்தியோபியா (Ethiopia) | 14 |

**தகவல்: சர்வதேச தொழிலாளர் அமைப்பின் புள்ளி விபரங்கள்**

மேற்கண்ட புள்ளி விபரங்களை ஆய்வு செய்து பார்க்கும் போது; நம்மை விட நிலப்பரப்பு, மக்கள் தொகை மற்றும் பொருளாதார அளவில் மிகச் சிறிய நாடுகள் கூட தங்களின் குழந்தைகளின் கல்வி நலன்களை, எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அதிக அளவு ஆசிரியர்களை நியமித்து செயல்படுவதைக் காண முடியும். மறுபுறம் ஆசிரியர் எண்ணிக்கைப் பட்டியலில் பின் தங்கியுள்ள நாடுகள் பட்டியலை பார்க்கும் போது இதில் இடம் பெற்றுள்ள பல நாடுகள் மிகவும் பின்தங்கிய நாடுகள் (Least developed countries) பட்டியலில் உள்ளவை. இவற்றில் பல வெகு ஆண்டுகளாக பல உள்நாட்டுப் போர்கள், கலகங்கள் காரணமாக பொருளாதாரத்திலும், உணவு பாதுகாப்பிலும், உள்நாட்டு சட்ட ஒழுங்கிலும் மிகவும் பின்தங்கிக் காணப்படும் நாடுகள். இவற்றின் வரிசையில் நமது நாடு ஆப்கானிஸ்தான் மற்றும் எத்தியோப்பியா போன்ற வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் காணப்படுவது மிகவும் வேதனையான மற்றும் கவலை தரும் விஷயமாகும். உலகிலேயே கல்விக்கு என்று தனியாக ஒரு செயற்கைக்கோள் (EDUSAT) அனுப்பிய பெருமை பெற்ற நமது நாட்டில் ஆசிரியர் நியமனங்களில் கோட்டை விடப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் நிச்சயம் பெரிய அளவிலான பாதிப்புகளை நமது நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் மக்கள்தொகை புள்ளி விபரங்களைக் (census) கொண்டு பார்க்கும் போது வருகின்ற 2050 ஆண்டில் உலகில் சீனாவை மிஞ்சி அதிக அளவு மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா இருக்கும் என்றும், இந்தியாவின் மக்கள்தொகை 1.65 பில்லியன் அளவிற்கு இருக்கும் என்று பல பொருளாதார மற்றும் சமூக கணிப்புகள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே உலகின் அதிகப்படியான ஊட்டச்சத்துக் குறைபாடுகள் (Malnourished Children) கொண்ட குழந்தைகள் உள்ள நமது நாட்டில் அவர்களின் நிகழ் மற்றும் எதிர்கால வளர்ச்சி மற்றும் நமது நாட்டின் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியை கருத்தில் கொண்டு அதிகப்படியான ஆசிரியர்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களில் நியமனம் செய்து நமது நாட்டின் குழந்தைகளின் எதிர்காலம் மற்றும் ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரையிலான கல்வி உரிமையை, நாட்டின் அனைத்து குடிமக்களுக்கு நிலைநாட்டச் செய்வது நமது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமையாகும். இதனைத் தவறும் பட்சத்தில் இந்தியாவின் வல்லரசு கனவு வெறும் கனவாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மேலும் குழந்தைகளின் பள்ளி கல்வி கனவை பாதுகாக்கத் தவறும் அரசுகள் நல்லரசாகக் கூட இருக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. எனவே இந்த இழிநிலை மேலும் தொடராமல் இருக்கவும் நமது பள்ளி கல்வியை பாதுகாக்கவும் அதிகளவு ஆசிரியர்களை நியமனம் செய்வோம், நமது குழந்தைகளின் கல்வி உரிமை மற்றும் நமது நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.




**பார்வைகள் (References):**


1. Countries with more Teachers,The Economic Times dated 7th October, 2019.
2. Ashutosh Kumar Tripathi, 2019. Re-Emergence of the ghost of Malthus. The Hindu Business Line dated 7th October, 2019.


●

# வாழ்க்கைக்கு மிக அருகில்...




அப்பாவின் விசில் சத்தம் (சிறுகதைகள்)
நாணற்காடன் / கீற்று வெளியீட்டகம்.
விலை: ரூ.70/- / அழகிய மண்டபம்,
குமரி மாவட்டம்- 629167
அலைபேசி 9791954174.

**இரா. காமராசு**

வாழ்வு வெளியின் விளைச்சல் எழுத்துக்கள். உயிரின் வதையும், வாதையும் வார்த்தைகளாகின்றன. மன வனப்பின் வசீகரம் தன்னை எழுத்து மணத்தால் நிரப்பிக்கொள்கின்றது. பாசாங்கற்ற, உண்மைக்கு மிகவும் நெருக்கமான உணர்வுப் பிழிவே இலக்கியம். எழுதுவதும், வாசிப்பதும் ஒரு வித போதைதான். மனிதர்கள் சக மனிதர்களுடனான உரையாடலை எழுத்துக்களால் சாத்தியப்படுத்துகின்றனர். பின்ன வாழ்வின் போதாமைகள் எண்ணங்களைக் கொண்டு தம்மை நிரப்பிக்கொள்கின்றன.

நாணற்காடன் கரும்பின் அடி நுனி போல் நற்கருணைச்சுவை மிக்கவர். எப்போதும் அவருக்கு வாழ்வு நுனிக்கரும்பாய்த் துவர்த்துப் போய்விடுகிறது. உயிர்களின் வேரில் தன் அகக்கண்ணைப் பொருத்திக்கொண்டு அலையும் இவர் அசல் கலைஞர். ஒப்பனை என்று படாத ஒப்பனை இவரது எழுத்துக்கள். புழுதி படிந்த சொற்கள் இவரின் மூலம். இவர் காட்டும் உலகம் நீங்களும் நானும் வாழ்வதுதான். இவர் சுட்டும் மனிதர்களும் சக இருதயர்கள்தாம்.

இந்த எளிமைக்குள் ஒளிந்துகிடக்கும் மனிதத்தை வாஞ்சையோடு வருடிக் கொடுக்கின்றன இவரது எழுத்துக்கள்.

பக்கவாத நோயில் விழுந்துவிட்ட அப்பா, வாழ்ந்து கெட்ட மனிதராகச் சுருங்கிப் போகிறார். காலப்போக்கில் குரலற்றுப்போன அவர் விசில் சத்தம் வழி தன் தேவைகளைச் சுட்டி மூச்சுவிடுகிறார். பல ஆண்டுகள் விசில் சத்தம் பழகி உண்ண, உடுக்க மட்டுமல்ல கழிவுகளை அள்ளவுமாக உரிமை உறவில் கரைந்து போகிறார் அம்மா. ஒரு கட்டத்தில் செத்துவிட மாட்டாரா என நினைக்கும் தருணத்தில் காலமாகிவிடுகிறார் அப்பா. தீரா நோயும், முதுமையும் அன்புப்பிணைப்பும் எதிரிணைகளாகி முட்டி மோதி வெடிக்கும் உணர்வுகளைப் பதிவு செய்கிறது கதை. ‘அப்பாவின் விசில் சத்தம்’ வாழ்தலின் குறியீடா அல்லது சாவை எதிர்நோக்கி விட்ட அழைப்பின் அடிச்சுவடா? இரண்டும்தான் என்பதில் அடங்கியிருக்கிறது நாணலின் எழுத்து.

உதிரி உழைப்பாளிகளின் வாழ்வு கோரமானது. ‘அன்றாடங்காய்ச்சி’ என்ற அடைக்குள் இருந்தாலும் அதிலும் ஆண், பெண் பேதம். மலைக்கோட்டையில் நானூறு படிகள் ஏறி கல் சுமந்து செல்லும் விதவையான பார்வதி... மாதவிடாய் வந்துவிடும் அச்சத்தில் உடல் உபாதை ஒருபுறம். கடவுள் இருக்கும் புனித இடம் தீட்டுப்பட்டுவிடக் கூடாது என்கிற மனத்துரத்தல். மறுபுறம் பாரம் சுமந்து படிகள் ஏறி இறங்கி துவண்டு போய் கீழே வருகிறாள். வேலைமுடியும் அந்தியில் எப்போது வருமோ என்ற அச்சச் சுமையை இறக்கி வைக்கிறாள். சம்பளம் அளக்கிறார்கள். ஆண்களுக்கு ஐந்து ஐம்பது ரூபாய்த் தாள்கள். பெண்களுக்கு மூன்று ஐம்பது ரூபாய்த் தாள்கள். “நாம்பளுந்தான் ரெண்டு மண்டபந்தூரம் சொமக்கிறோம். இந்த ஆண்களுக்கென்ன கொம்பா மொளச்சிருக்கு?”, என்கிறாள் சக சித்தாள் செல்லம்மா. கதை முடிகிறது ‘இறுக்கம்’.

எதிர்பாராத, ‘கொரோனா’ கால வாழ்க்கை மாதிரி ஓர் ஊரில் எழுத்துக்கள் மாயமாகின்றன. செய்தித்தாள்களில், பள்ளிக்கூடங்களில், அலுவலகங்களில், பேருந்துகளில் எங்கும் எதிலும் எழுத்துக்கள் மறைந்து போகின்றன. வேலைகளை காலி செய்து, யாருக்கு எது சொந்தம் என்ற எல்லைகளை விடுத்து அவரவர் ஆதி வாழ்க்கைக்கு- எழுத்தறிவற்ற நிலைக்கு- மாறுகிறார்கள். இப்படி ஊரே தலை கீழ் மாற்றமாவதை ‘ஊர் மாற்றம்’ கதை பதிவு செய்கிறது. இனிய கற்பனைதான் எண்ணும் எழுத்தும் சூதாய் மாறிவிட்ட சமூகத்தை முகத்தில் அறைகின்றன மறைந்து போகும் எழுத்துக்கள்.

ஓவியரான அப்பா மரணம். மகள் ‘சங்கவி’ அழகாய் வரைபவள். அம்மாவைக் காப்பாற்ற வேலைக்குச் செல்ல முயல்கிறாள். உள்ளூர் பள்ளியில் ஓர் ஓவிய ஆசிரியர் பணி. நேர்காணலுக்குச் செல்கிறாள். அழகழகாய் ஓவியங்களைத் தீட்டிக் காட்டுகிறாள். அவளது திறமை வியக்க வைக்கிறது. நேர்கண்ட நிர்வாகி சொல்கிறார் “ஒண்ணுமில்லைங்க சார்... அந்தப் பொண்ணு ரொம்ப கருப்பா இருக்கு. அதுவுமில்லாம பல்லுவேற தூக்கிட்டிருக்கு. சுருக்கமா சொன்னா அசிங்கமா இருக்கு. மிஸ்ஸுங்க அழகா இருந்தாத்தான் ஸ்டூடன்ட்ஸ்க்கு பிடிக்கும் சார். நாம வேற ஆள் தேடுவோம் சார்.” ‘அழகாய் வரைபவள்’ கதை இது.

தான் காதலித்தப் பெண் திருமணமாகிச் சென்று பல வருடங்கள் கழித்து அவளின் தோழியைச் சந்திக்கிறான். குழந்தைகளோடு வந்த அவள் இவனிடம் ஓவியம் கற்க தன் மகளைச் சேர்க்கிறாள். வீட்டில் இருந்த இன்னொரு குழந்தையை இவன் மகள் என அவள் நினைக்க, இது தங்கை மகள், தான் ‘பேச்சிலர்’ என்கிறான் அவன். இருவருக்கும் பேச்சு நின்று வாயடைத்துப் போகிறார்கள். ‘இது ஒரு காதல் கதை’.

பாலமுருகனை நாய் துரத்துகிறது. எதிர்த்த வீட்டுப் பெண்ணாக, காதலியாக, அக்காவாக பல நாட்கள் நாய்கள் துரத்திக் கொண்டே இருக்கின்றன. இவர்களின் முகம் நாய்களின் முகத்தில். ஒரு கட்டத்தில் ஓர் நாளில் இவன் முகமே நாயின் முகத்தில். “அந்த நாயின் முகத்தில் தெரிந்த பாலமுருகனின் கண்களில் ஏக்கங்களும், நிராதரவும் பெருகி வழிந்தன. அதன் கூரிய பற்கள் இவனைக் கடித்துக் குதறும் முனைப்போடிருந்தன. அதுவரை ஓடிக் கொண்டிருந்தவன் இப்போது துரத்துவது பற்றி யோசித்தான். நாய் திரும்ப ஓடத் தொடங்கியது”. இது ‘தன்னைத் தானே துரத்துபவன்’.

ஆறுமாதத்தில் அப்பா இறந்து போக, அம்மாவால் வளர்க்கப்படுகிறான். சைக்கிள் கடையில் வேலைக்குச் சேர்ந்து பின் பஞ்சாலைக்கு வேலைக்குப் போகிறான். அம்மா இறந்ததாக தகவல் வர ஊருக்குப் புறப்பட்டு வருகிறான். அவன் முன்பு வேலை பார்த்த மாரிமுத்து முதலாளி ‘கோழி’ என்று ஒரு நாள் அழைக்கிறார் (ஒரு நாள் இரவு கடைக்கு வெளியே தூங்கி விட்டதால்).

பின் அவன் பெயர் 'கோழி' என்றே நிலைக்கிறது. அம்மா இறந்த வீட்டில் எல்லோரும் அழுகிறார்கள். இவன் மட்டும் அழவில்லை. ஊரார் இவனை ஒரு மாதிரி பார்க்கிறார்கள். வளர்த்து ஆளாக்கிய தாய்க்கு ஒரு சொட்டு கண்ணீர் விடவில்லையே என்று. இடுகாட்டில் புதைத்து விட்டு வீடு திரும்பியதும் அம்மா பிணமாகக் கிடந்த இடத்தில் "ரஞ்சித்து ரஞ்சித்துன்னு கூப்பிடுவியே அம்மா. இனிமே யாரும்மா என்னை ரஞ்சித்துன்னு கூப்பிடுவாங்க" என்று அழுகையினூடே யாருக்கும் கேட்காதவாறு புலம்பினான் எல்லோராலும் கோழி என்றே கூப்பிடப்படுகிற அவன்". இது 'இருப்பின் இறப்பு'.

கைகூடாக் காதல். திகட்டத் திகட்டக் காதலிப்பவர்கள் நிரம்பிவழியும் காதல் கடிதங்களை மீளப் பெற்று காதலைத் துண்டாடி வாழ்வின் பெரு வெளியில் மீள் நினைவில் அவனும் அவளும் சந்திப்பது - தலைப்பு போல கதையே கவிதையாக - 'பழுத்த இலை சூல்'.

திருமணமாகி ஓரிரண்டு ஆண்டுகளாகியும் மகப்பேறு வாய்க்காத தங்கமுத்து ஆசை மனைவி சம்பியை அவளின் தோழி சித்ராவிடம் சென்று அவள் பிரசவித்த தொப்புள் கொடியை வாங்கிவர வலியுறுத்துகிறான். பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியைச் சாப்பிட்டால் குழந்தை உண்டாகும் என்ற நம்பிக்கை. சம்பிக்கு மனம் ஒப்பவில்லை. வேறு வழியின்றி போக சம்மதிக்கிறாள். அவள் கிளம்பிக் கொண்டிருக்கும்போது அவசரமாய் வீடு திரும்புகிற தங்கமுத்து மனம் திருந்தி அங்கு செல்ல வேண்டாம் என அவளோடு ஆசையோடு இணங்குகிறான். இது 'தொப்புள்கொடி'.

முடிதிருத்தும் வேலை செய்யும் அவனை டாஸ்மாக் வேலைக்கு அனுப்புகிறாள் மனைவி வானதி. முடி வெட்டி இரவு வரும் போது கெட்ட வாசனை வருவதாக, டாஸ்மாக் கடைக்கு வேலைக்குப் போன அவன் குடிக்கு அடிமையாகிறான். கணவன் மனைவிக்கு இடையே சச்சரவு. அவன் குடியை விட முடியாமல் தற்கொலைக்கு முயல்கிறான். இது 'வாசனை'.

பக்கத்து வீட்டில் தனிமைத் தாண்டவம். இசையும், நடனமும், பரவச முகமும் அவனை அலைக்கழிக்கின்றன. மொட்டை மாடியிலிருந்து பார்க்கிறான். யார், எப்படி அறிய முற்படுகிறான். பக்கத்து வீட்டிற்கு குடிவந்த கணவனும், மனைவியும், பிள்ளையையும் இவன் சந்திக்கிறான். 'நீங்கள் டான்ஸ் மாஸ்டரா?' என வினவ, அவள் கணவன் அவசரமாய் ' அவளுக்கு டான்ஸெல்லாம் தெரியாது' என்கிறான். மறு நாளிலிருந்து அவர்கள் வீட்டு ஜன்னல் சாத்தப்பட்டு, ஒரு சத்தமும் வருவதில்லை. இது 'மிதப்பவனின் நீர்குமிழி'.


அப்பாவின் முதல் திதிக்கு வரும் மகள் அண்ணன் வைத்துள்ள அப்பாவின் படத்தை விரும்பிக் கேட்கிறாள். அவனும் தர சம்மதிக்கிறான். அவள் கணவனோ 'இவ்வளவு பெரிய படத்தை மாட்ட இடம் இல்லை' என்று வேண்டாம் எடுத்து வராதே என்று சொல்லிவிடுகிறான். இது 'சுவர்கள் இல்லாத வீடு'.

மதி தாய் தந்தையை இழந்தவன். திருமணமாகி மனைவியும் தற்கொலையில் உயிர் விடுகிறாள். அப்பா, தாத்தா, மாமா, பக்கத்து வீட்டுக்காரர்... எனப் பலரின் மரணமும் துர்மரணங்களாக அமைகின்றன. மனைவி இறந்ததும், இவனை சுற்றி இருப்போர் ஒரு மாதிரி பார்க்கின்றனர். மறுமணத்திற்குப் பெண் தேடி எதுவும் அமையவில்லை. வாழ்வில் துரத்தப்பட்ட அவன் தற்கொலைக்கு ரயிலில் பாய முடிவெடுக்கிறான். ரயில் எதுவும் வராததால் தண்டவாளத்தில் இருந்து கிளம்பி கோயில் அருகில் கடைக்குச் செல்கிறான். சட்டைப்பையில் கொஞ்சம் பணம் இருக்கிறது. பசி புரட்டி எடுக்கிறது. பரோட்டா வாங்கி சாப்பிடுகிறான். "பரோட்டா துண்டுகளை சில்லென்றிருந்த குழம்பில் புரட்டி பசியைக் கொல்லத் தொடங்கினான். தூரத்தில் கூவியபடி சென்று கொண்டிருந்த இரயிலின் சத்தம் அப்போது அவன் காதில் விழவில்லை". இது 'விதுரன்'.

வாழ்வை, மனிதர்களை மிக அருகில் தரிசிப்பவை இக்கதைகள். சின்னஞ்சிறு கதைகள் மின்னல் தெறிப்புகள் போல கச்சிதமாய் அமைந்து விடுகின்றன. யதார்த்த வாழ்வின் சிறுதுளிகள் இவை. நாணற்காடன் கலை இரசிகர். தமிழ் மட்டுமல்ல, இந்தி முதலிய மொழிகளின் இலக்கியங்களையும் அறிந்தவர். எளிமையும் அழகும் கைகூடிய கதைகள் இவை. சில மனங்களைப் படிப்பவை. சில மனங்களைப் படைப்பவை. இவற்றின் அடித்தளம் நேயம். சக மனித அக்கறை. பசி, காதல், காமம், பாசம், உழைப்பு, நம்பிக்கை... என எல்லாவற்றுள்ளும் வாழ்வைத் தேடும் மனம் வாய்க்கப் பெற்றவராக நாணற்காடன். தமிழ் புனைவிலக்கியத்துக்கு இவரின் எழுத்தும் பலம் சேர்க்கும் என உறுதியாக நம்பலாம்.

●


# நியூ செஞ்சுரியின் புதிய நூல்கள்




**டிராகன் தேசம்**

சாய்ஜுன் - இளந்தமிழ்

₹ 275/-




**இந்திய ரயில் போக்குவரத்தின் சுவையான வரலாறு**

பேராசிரியர் பொ.முத்துக்குமரன்

பேராசிரியர் ம.சாலமன் பெர்னாட்ஷா


₹ 275/-




**தற்காலத் தமிழ்நாட்டு வரலாறு**

பேராசிரியர் அ.இராமசாமி

₹ 395/-





**மூளைக்குள் சுற்றுலா**

வெ.இறையன்பு

₹ 1500/-

# புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம்

க.பேபி




**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் காதல், போர், வீரம், கொடையை மட்டுமின்றி மனிதநேயத்தையும் சிறப்பித்துக் கூறுகின்றன. சங்ககாலப் புலவர்கள் நுண்ணறிவும், ஆழ்ந்த சிந்தனையும், மனித நேயம் கொண்டவர்களாகத் திகழ்ந்திருந்தனர். மனிதன் மற்ற உயிர்களிடத்தில் காட்டும் அன்பு மனிதநேயம். மனிதன் என்ற சொல்லானது மனம் என்ற வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். இத்தகைய மனதை உடையவன் தான் மனிதனாகிறான். மனதில் பலவகை எண்ணங்கள் தோன்றினாலும் நல்ல எண்ணங்கள் ஒருவனை மனிதனாக்குகின்றன. இத்தகைய சிறப்புப் பெற்ற மனிதனின் பண்புகளை வெளிப்படுத்துவது மனிதநேயம். சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை மனிதநேயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவ்வுலகத்தில் மனிதநேயம் பற்றிய எண்ணங்களும், மனிதநேயம் மிக்கவர்களாக வாழ வழிகாட்டும் சங்க இலக்கியத்தில் புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள மனித நேயம் பற்றிய செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மனித நேயம்**

மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் மற்றவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அன்புதான் இன்பத்தின் ஊற்றுக்கண். அவ்வின்ப ஊற்று மனித இனத்தில் படிந்துள்ள குற்றங்களைப் போக்கி மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில்

போற்றப்படுவது மனிதநேயம் ஆகும். மனம் என்ற சொல்லுக்கு நெஞ்சு, விரும்பு ஆகிய பொருள்களையும், நேயம் என்பதற்கு அன்பு, நன்மை, உறவு, பக்தி என்ற பொருள்களையும் தருகிறது. நாடு, மொழி, இனம், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றைக் கடந்து மேலோங்கி நிற்பது மனிதநேயம் என்று சிறப்பிக்கப்படுகிறது.

**வாழ்வியல் சிந்தனைகள்**

மனிதனின் வாழ்வும், தாழ்வும் நிலத்தைப் பொறுத்து அமைவது இல்லை. அந்நிலத்தில் வாழக்கூடிய நன்மக்களைக் கொண்டு அமைவது. மனிதனை மனிதனாக மதிக்கப் பெற்று மனித நேயம் மிக்கவனாக வாழ்கின்ற நிலம் நன்மை பயக்கும் என்று சங்ககாலப் புலவர்கள் அனைத்து காலத்திற்கும் பொருந்துமாறு தங்களுடைய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மனிதன் இவ்வுலகில் பொறுப்பு மிகுந்தவனாக இருக்க வேண்டுமென்பதை,

“நாடா கொன்றோ, காடா கொன்றோ
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே”

(புறம்: பா.எண்.187)

என்ற பாடலில் ஔவையார் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் மனிதன் பெரியோரையும், சிறியோரையும் வியத்தலும், இகழ்தலும் செய்யக் கூடாது என்ற பண்பையும், மனிதனின் வாழ்க்கை நெறியையும் கணியன் பூங்குன்றனார்,

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா...
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

(புறம். பா.எண் 192)

என்று மனித நேயத்திற்குப் புறம்பான செயல்கள் நடைபெறாது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் மக்களைத் துன்புறுத்தக் கூடியது. உலக உயிர்கள் வாழ உணவு தேவைப்படுகிறது. பாரகம் அடங்கலும் பசிப்பிணி நீங்க வேண்டும் என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளதை,

“பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியம் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி”

(சில. இ.வி ஊ.எ.கா 72-73)

இவ்வரிகள் உணர்த்துகின்றன.

**புலவர்களின் வறுமை நிலை**

புலவர்கள் வறுமை நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். இவர்கள் இடம் விட்டு இடம் பெயரக் கூடிய தன்மையுடையவர். புரவலன் வாழும் இடத்தைப் புகழ்ந்து பாடி பரிசு பெற்று தன்னுடைய வறுமையைப் போக்கிக் கொள்ளக் கூடியவர் என்பதை,

“ஈ என இரத்தலோ அரிதே, நீ அது
நல்கினும் நல்காய் ஆயினும் வெல்போர்
எறிபடைக்கு ஓடா ஆண்மை அறுவைத்...”

(புறம்: 154.8-10)

இப்பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகிறது. மேலும் வள்ளுவரும்,

வறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரது டைத்து (குறள்.221)

இக்குறள் மூலம் குறிப்பிடுகிறார். இது போன்றே சாத்தனாரும்,

“ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்..”

(மணி. 11:92)

இப்பாடல் மூலம் உணர்த்துகிறார். மேலும் புலவர்களின் வறுமை நிலையை,

“பசித்த ஒக்கல் பழங்கண் வீட
வீறுசால் நன்கலம் நல்குமதி பெரும்!”

(புறம்: பா.எண்389)

என்ற பாடலடிகளால் இலைமறையாகச் சுட்டப்படுகிறது.

**புரவலர்களின் பண்பு**

புரவலன் தன்னை நாடி வரும் அனைத்து இரவலர்களுக்கும் அளவில்லாது கொடுத்தனுப்பும் பண்பு நிறைந்தவன். போரில் பகைவர் யானை அணிந்திருந்த ஓடைப் பொன்னைக் கொண்டு வந்து தன்னிடம் வரும் பரிசிலர்களுக்கு வழங்கிய புரவலரின் மாண்பை,

“அருஞ்சமம் ததையத் தாக்கி, பெருஞ்சமத்து
அண்ணல் யானை அணிந்த
பொன் செய் ஓடைப் பெரும் பரிசிலனே”

(புறம்- பா.எண் 326)

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது. மேலும் மணிமேகலை கையில் இருக்கும் அமுதசுரபி தெய்வபாத்திரம் என்றும் அனைவருக்கும் இடையறாது பொருள்களை வழங்கக் கூடிய சிறந்த பண்புகளைப் பெற்றது என்பதை,

“ஐயக் கடிஞை அம்பல மருங்கோர்
தெய்வந் தந்தது திப்பிய மாயது”

(மணி. 19-150-151)

என்று மணிமேகலை குறிப்பிடுகிறது. இரவலர்களின் பசிபோக்கும் புரவலர்களின் சிறப்பை,

“பாண் உவப்பப் பசி தீர்த்தனன்”

(புறம்-பா.எண் 239)

என்ற பாடலடிகள் சிறப்பித்துக் காட்டுகின்றன.

**புரவலர்களின் கொடை**

புரவலர்கள் தங்களிடம் செல்வம் மிகுதியாக இருக்கும் சமயங்களில் இரவலர்களுக்கு மிகுதியான பொருள்களையும், வளம் இல்லாத காலங்களில் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்கும் தன்மையுடையவர்களாக விளங்கியுள்ளனர். தலைவன் ஒருவனின் சிறிய இல்லத்திற்கு நாடி வரும் இரவலர்களின் தகுதியறிந்து கொடை வழங்குவதில் வல்லவனாகத் திகழ்ந்தான் என்பதை,

"வரிசையின் அளிக்கவும் வல்லன், உரிதினின்
காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத்
தூவவும் வல்லன், அவன் தூவுங்காலே"
(புறம்.331)

என்ற பாடலடிகளால் அறியப்படுகிறது. வேந்தன் இரவலர்க்குப் பரிசாகத் தேரையும் கொடுத்தான் என்பதை,

"ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்டமாரி உறையினும் பலவே"
(புறம்: பா.எண்.123)

இப்பாடலில் மன்னனின் கொடைச்சிறப்பு வலியுறுத்தப்படுகிறது.

**புலவர்களின் நட்பு**

கோப்பெருஞ்சோழனோடு பிசிராந்தையார், பொத்தியார் ஆகியோர் உயர்ந்து கொண்டிருந்தனர். இச்சோழ மன்னன் பிசிராந்தையாரை, இகழ்விலன், இனியன், நெருங்கிய நட்பினை உடையவன், புகழ்அழிய வரும் பொய்மையை விரும்பாதவன் என்று புகழ்ந்துரைக்கிறார். இதிலிருந்து அவர்களும் புலவர்களும் மேன்மையான நட்பு கொண்டிருந்தனர் என்பதை,

"வருவன் என்ற கோனது பெருமையும்
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே"
(புறம்- பா.எண்.217)

என்று பொத்தியார் இவ்விருவரையும் வியந்து பாடுகிறார். மேலும் வள்ளுவரும்,

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் (குறள்-785)

இக்குறள் மூலம் புகழ்ந்துரைக்கிறார். நட்புச் செய்வதற்கு ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிப் பழகுதல் வேண்டியது இல்லை. இருவரிடமும் உள்ள ஒத்த உணர்ச்சிகளே நட்பு என்னும் உரிமையை வெளிப்படுத்துகிறது.

**புரவலர்களின் விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது புதியோர்க்கு உணவளித்தல் ஆகும். அரசர்கள் வரும் விருந்தினர்க்கு உணவு அளிப்பதற்கு முன்னதாக அவர்களின் அழுக்குடைய பழைய ஆடையை நீக்கிப் புதிய ஆடையை வழங்கி உண்ணுவதற்கு அறுசுவை உணவினை படைத்தளிப்பான் என்பதை,

"நீல்நிறச் சிதாஅர் களைந்து
வெளியது உடீஇ என் பசி களைந்தோனே"
(புறம்- பா.எண்.385)

என்ற புறநானூற்றுப் பாடலடிகளால் அறிய முடிகிறது. மேலும் நாலடியாரில்,

"உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழல் பயந்தா அங் கறப்பயனும்
தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்"
(நாலடி- பா.எண்.38)

இப்பாடலில் விருந்தோம்பும் பண்பு சிறப்பாகக் கூறப்படுகிறது.

**தொகுப்புரை**

- இயற்கையோடு வாழ்ந்த மனிதன் தன்னையும், தன்னைப் போன்ற பிற உயிர்களையும், அவ்வுயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தினை களைத்து நல்வழிப்படுத்துதல் மனிதநேயம்.
- மனிதன் மனிதனாக நன்மக்களைக் கொண்டு மனிதநேயம் மிக்கவனாக வாழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.
- புரவலர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்று தங்களுடைய வறுமையைப் போக்கினர் என்பதை புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.
- புரவலன் அளவில்லாது பொன்னும் பொருளும் கொடுத்து உதவும் பண்பு நிறைந்தவன் என்பது சுட்டப்படுகிறது.
- மன்னனின் அளவற்கரிய கொடைச்சிறப்பால் இரவலர்கள் மகிழ்ந்து புகழ்ந்து பாடியதை இப்புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.
- புலவர்களின் நட்பு மேன்மையுடையதாக இருந்துள்ளது. அரசர்களிடம் பரிசு பெறுவதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் அவர்களை நல்வழிப்படுத்துபவர்களாக புலவர்கள் இருந்துள்ளனர் என்பதை உணர முடிகிறது.
- அரசர்கள் இரவலர்களுக்கு புதிய ஆடையை உடுத்தக் கொடுத்து பொன் மற்றும் வெள்ளியாலான கலத்தில் ஊன் கலந்த உணவை உண்ணத் தந்துள்ளனர் என்பது புகழ்ந்துரைக்கப்படுகிறது. இதன் மூலம் மனிதநேயப் பண்புகள் புறநானூற்றுப் பாடல்களில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது.





# இந்தியாவில் உள்ள குழந்தை இலக்கிய ஆய்வு நிறுவனங்கள்

த. நிர்மல் கருணாகரன்

இலக்கியங்களில் அறிவியல் முறையிலான திறனாய்வு முறைகளும் ஆய்வு முறையியல்களும் வளர்ந்த பின்னர் ஆய்வு என்பது பரந்துபட்டதாகவும், உற்றுநோக்கக் கூடியதாகவும் அமைந்தது. துறைவாரியான ஆய்வு அணுகுமுறைகள் அதன் தனித்துவத்தையும், செயல்திறனையும் எடுத்துக் கூறுவதாக அமைகின்றன. ஆய்வு என்பது கலை, அறிவியல் இரண்டிற்கும் பொதுவானது என்றபோதிலும் கலையை அறிவியல் தன்மையில் ஆய்வதும், அறிவியலில் கலை அனுபவத்தை அடையாளங் காணுவதாகவும் உள்ளது. கலையியல் ஆய்வில் அறிவியல் தன்மையிலான அணுகுமுறைகள் அதன் நுட்பத்தை அணுகுவதற்கும் வழிகோலாக அமைகிறது. குழந்தை, குழந்தை இலக்கியம் என்றிரு தன்மை கலை, அறிவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தக் கூடியதாக உள்ளன. குழந்தைகளை உடலியல், அறிவுஇயல், உளவியல் போன்ற தன்மைத்தான ஆய்வுகளைச் செய்து வந்ததன்

தொடர்ச்சியாக குழந்தை இலக்கியத்திற்கான ஆய்வுகள் கலையின் அடிப்படையிலும், அறிவியல் அணுகுமுறைகளின் ஊடாக ஆய்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய இருநிலை தன்மையிலமைந்த ஆய்வுகளுக்கு அவை சார்ந்த நிறுவனங்களே முதன்மையாக அமைகின்றன. இந்தியாவில் மிகச்சில நிறுவனங்களே குழந்தை இலக்கிய ஆய்விற்காக இயங்குகின்றன. ஒரியா, கேரளம் முதலிய மாநிலங்களில் ஒரு நிறுவனமும், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் ஒரு நிறுவனமும் இருக்கின்றன. அவை பற்றி இங்குப் பார்ப்போம்.

**ஒரியா குழந்தை இலக்கிய ஆய்வு நிறுவனம்**

1979 ஆம் ஆண்டு உலக குழந்தைகள் தின ஆண்டாக அறிவிக்கப்பட்ட போது, அதே ஆண்டில் ஒரியா (Odisha) வில் பட்ராக் மாவட்டத்தில், நாயபஜாரில் குழந்தை இலக்கிய ஆய்வு நிறுவனம் (Research Institute of Odia Children's Literature (RIOCL)) ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. ஒரியா, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளை முதன்மையாகக் கொண்ட இம்மாநிலத்தில் தோன்றிய இந்நிறுவனம் இந்திய சமூக சட்டம் பதிவு எண் பி.எல்.எஸ் 2697 - 655 (1989- 1990) சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது.

இலக்கியத்தின் வழியாக குழந்தைகளையும், குழந்தை வளர்ப்பையும் வளப்படுத்தி, வளர்ச்சிப் பாதைக்கு இலக்கியத்தையும், அது சார்ந்த சமூகத்தையும் ஆராய்வதாகும். திட்டமிடுதல், செயல்படுத்துதல், கலந்துரையாடல், பயிலரங்குகள் நடத்துதல், குழந்தை இலக்கியத்திற்கான ஆய்வுகளைச் செம்மைப்படுத்துதல், அதனைக் கள ஆய்வு செய்தல் முதலான வளங்களில் நிதி ஒதுக்கீடு செய்வதும் ஊக்கப்படுத்துவதுமான பணிகளைச் செய்து வருகிறது.

நிறுவனம் தொடங்கி 31 ஆண்டுகளில் 21 பயிலரங்குகள் நடத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இது ஒரிசாவிலுள்ள பல்வேறு கல்வி, ஆராய்ச்சி சார்ந்த நிறுவனங்களைத் தொடர்புகொண்டு, அதன்வழி கருத்தரங்குகள், பயிலரங்குகளை நடத்தி வருகிறது. அத்தகைய தன்மையில் இதுவரை 20 கருத்தரங்குகள் நடத்தியுள்ளன. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்தலான (exchange programmes) நிகழ்வுகளை நிகழ்த்தியதன் மூலம் விஷ்வபாரதி (Vishwa Bharati), சாந்திநிகேதன் (Shantiniketan), சக்ராதர்பூர் (Chakradharpur) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து "Children's Writers of West Bengal, Bihar, Andhra Pradesh, Uttar Pradesh and Karnatak" ஆகிய தளங்களில் ஆய்வுகள் நிகழ்த்தி படைப்பாளர்களை இனம்காண்பதோடு, திறனாய்வையும் ஊக்கப்படுத்துகின்றன.

**நோக்கம்**

குழந்தை இலக்கிய எழுத்தாளர்களையும், குழந்தை இலக்கிய ஆய்வாளர்களையும் இனம்கண்டு அவர்களை உலகறியச் செய்தலே இந்நிறுவனத்தின் நோக்கமாக இருக்கிறது. குழந்தை இலக்கிய ஆய்வுத்துறையை ஊக்கப்படுத்துதல், குழந்தைகளின் எழுத்தைச் செம்மைப்படுத்துதல், குழந்தை இலக்கியத்தை கல்வியியல் மற்றும் உளவியல் முறைகளில் அளித்தல், கருத்தரங்கு நடத்துதல், குழந்தை இலக்கிய படைப்பாளர்களுக்குப் பயிலரங்கு நடத்துதல், புத்தகக் கண்காட்சி அமைத்தல், பெற்றோர்களைச் சந்தித்தல், அனைத்து இந்திய மொழிகளில் உள்ள குழந்தை இலக்கியத்தின் அடிப்படைகளை ஒன்றிணைத்தல், கிராமம், நகரம் சார்ந்த குழந்தைகள், அவர்களின் வாசிப்புத்திறனை ஊக்கப்படுத்துதல், அதிகரித்தல் போன்றவற்றை செவ்வனவே செய்து வருகிறது இந்நிறுவனம். உலக அளவிலான குழந்தை மற்றும் குழந்தை இலக்கிய ஆராய்ச்சிகளையும் இந்தியச் சூழலில் அறிமுகப்படுத்தியதோடு, உலக அளவிலான எழுத்தாளர்களையும், திறனாய்வாளர்கள், உளவியலாளர்களையும் இந்திய குழந்தை ஆராய்ச்சித் தளங்களோடு அறிமுகப்படுத்தி வருகிறது.

**நிறுவனத்தின் இயக்கமும் பரப்பளவும்**

குழந்தை இலக்கிய ஆய்வு நிறுவனம் (RIOCL) பதிவாளரைத் தலைவராகக் கொண்டு அவரின்கீழ் பணிபுரிய ஆறு இயக்குநர்கள், உதவிப்பதிவாளர், நிதியாளர், பத்து உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகின்றது. தற்போதைய பதிவாளராக டாக்டர் மகேந்திரமொகந்தி அவர்கள் பதவி வகிக்கிறார். ஒரிசா, மேற்கு வங்காளம், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களை ஒருங்கிணைப்பதாக இந்நிறுவனம் அமைகிறது.

**கேரள மாநில குழந்தை இலக்கிய நிறுவனம்**

1981 ஆம் ஆண்டு திருவாங்கூர் கொச்சி அறச்சிந்தனை சமுதாயச் சட்டம் 1956 இன் சட்டப்படி தோற்றுவிக்கப்பட்ட இந்நிறுவனம், மலையாள குழந்தை இலக்கியங்களை வளப்படுத்துவதற்கும், ஆய்வதற்கும் ஆரம்பிக்கப்பட்டதாகும். குழந்தை இலக்கிய நூல்களை வெளியிடுதல், குழந்தைகளின் வாசிப்புத்திறனை அதிகரித்தல், குழந்தைகளைப் பல்வேறு திறன் பயிற்சிகளுக்குத் தயார்படுத்துதல் போன்றவற்றைச் செய்து வருகிறது.

மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் பங்களிப்பு செய்து குழந்தைகளுக்குப் பயன்படும் தனித்துவமிக்க நிறுவனமாக இது இயங்கி வருகிறது. இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும். கேரள அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கி வருகின்றது. கேரள மாநிலக் கல்வி அமைச்சரே இதன் தலைவராக விளங்குகின்றார். பண்பாட்டு பிரிவின் செயலர் இதன் துணைத் தலைவராக விளங்குகின்றார். இவர்களே நிறுவனத்திற்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தினைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர். பெரும்பாலும் கல்விப்புலம் சார்ந்த பேராசிரியர்களையே உறுப்பினர்களாக நியமிக்கின்றனர்.

மலையாள மொழியில் சிறந்த நூல்களை வெளியிடுதல், குழந்தைகளுக்கான தளிர் இதழ் வெளியிட்டு குழந்தைகளிடையே பசுமையான நினைவுகளை ஏற்படுத்துதல், குழந்தைகளின்



வாசிப்புத்திறனைத் துளிர் இதழ் மூலம் ஏற்படுத்துதல், சிறந்த குழந்தை இலக்கியங்களுக்குப் பரிசு அளித்து ஊக்கப்படுத்துதல், கருத்தரங்குகள், குழந்தை இலக்கிய எழுத்தாளர்களுக்கானப் பயிலரங்குகள் முதலியவற்றை நடத்துதல், குழந்தைகளுக்கான நூல்கள், இதழ்கள், பருவஇதழ்கள் தாய்மொழியான மலையாள மொழியில் வெளியிடுதல் போன்ற பணிகளை கேரள மக்களின் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுகிறது.

குழந்தைகள் எளிமையான முறையிலும் மனமகிழ்வுடன் வாசிக்கும் நோக்கில் நூல்கள், குழந்தை இலக்கிய அகராதிகள், அறிவியல் நூல்கள், கலைக்களஞ்சியங்கள், பொதுஅறிவு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் போன்ற வகைகளில் குழந்தைகளின் வயது வாரியாக நான்கு வயது முதல் ஆறு வயது, ஆறு வயது முதல் ஒன்பது வயது, ஒன்பது வயது முதல் பன்னிரெண்டு வயது, பன்னிரெண்டு வயது முதல் பதினான்கு வயது என குழந்தைகளின் வயது முறைகளைப் பாகுபடுத்தி நூல்கள் வெளியிடப்படுகின்றது. குழந்தைகள் கலைக்களஞ்சியம் ஆறு தொகுதிகளில் பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாக கலை, கலாச்சாரம், விலங்குகளின் உலகம், இலக்கியம், உலக நடப்புகள், உலகத் தொழில்நுட்பம் போன்ற வகைகளில் வெளியிடப்பட்டுள்ளன.

சுயசரிதை வரிசையில் நூறு தனித்தன்மை வாய்ந்த மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டுள்ளது. சார்லஸ் டார்வின் பற்றி தனித் தொகுதியாக வெளியிட்டுள்ளது. நாராயணகுரு, பொய்கையில் யோகணன் போன்றவர்களின் நூல்கள் தனித்தனித் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இளையோர் வயதிற்கேற்றாற் போல் சிறந்த கவிஞர் ஓ.என்.வி. குரூப் அவர்களுக்குத் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மூலம் பல்வேறு மொழிகளில் உருவான கதைகளை மொழிபெயர்க்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுவீடன், பிரெஞ்சு மொழிகளில் தோன்றிய குழந்தைகளுக்கான கதைகளை மொழிபெயர்த்துள்ளனர். இந்திய மொழிகளின் நாட்டுப்புறக் கதைகளையும் மொழிபெயர்க்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்நிறுவனத்தில் குழந்தை இலக்கியத்திற்கான விருதுகள் வழங்கப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு முதல் பால சாகித்ய விருதும், கதை, நாவல் ஆகியவற்றிற்கு ஆபிரஹாம் ஜோஜப் விருதும், கவிதை, பாடல், அறிவியல் படைப்புகளுக்கு பி.டி.பாஸ்கரபணிக்கர் விருதும், தகவல் தொடர்பு இலக்கியம், வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, மொழிபெயர்ப்புகள், சிறந்த பாடப்புத்தகங்கள், குழந்தை இலக்கியப் படைப்பாளிகளுக்கு சி.சி. சாந்தகுமார் விருதும் (ரூபாய் 50,000) வழங்கப்படுகிறது.

குழந்தைகளுக்காக ஜவஹர்பால் பவனிலிருந்து தளிரு என்ற மாத இதழ் வெளியிடப்படுகிறது. இது மலையாள மொழியில் பழமையான இதழாகும். இதழின் முதன்மை ஆசிரியர் கேரள மாநில கவிஞர் சுகந்தகுமாரி ஆவார். இவ்விதழ் வாசித்தல், போட்டி வாசித்தல், குழு வாசித்தல் என்ற நிலைகளில் குழந்தைகளிடையே வாசிக்கும் திறனை

மேம்படுத்தும் நோக்கில் வெளியிடப்படுகிறது. தளிரு என்பது குழந்தை வாசிப்பை ஊக்கப்படுத்தும் ஓர் அமைப்பு போல செயல்பட்டு வருகிறது. பள்ளி, குடும்ப ஸ்ரீபாலசபா தளிரு வாசிப்புக் குழுவைக் கண்டறிந்து கிராம அளவில் வாசிப்பு விழா நடத்தும் அமைப்பிற்கு ரூபாய் பத்தாயிரம் வாசிப்பு குழுவிலிருந்து வழங்கப்படும் சேவையையும் செய்கிறது.

கேரள குழந்தை இலக்கிய நிறுவனத்தில் சிறந்த நூலகமும் இயங்கி வருகிறது. புத்தக வழங்கல் வரிசைமுறை, மின் புத்தகம், காப்புரிமை விற்பனை அனைத்தையும் பெற்ற நூலகமாக உள்ளது. இந்நூலகம் 1981 முதல் 2006 ஆம் ஆண்டு வரை பல சாதனைகளைப் புரிந்துள்ளது. 1981 ஆம் ஆண்டு முதல் இன்று வரை புத்தக விற்பனையில் மட்டும் ரூ.2.77 கோடி வருமானம் ஈட்டியுள்ளது. சர்வ சிக்ச அபியான் திட்டம், கல்வித்துறை, இலக்கிய அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து கண்காட்சிகள் நிகழ்த்துவதன் மூலம் புத்தகங்கள் விற்பனை செய்கிறது. மலையாளம் மட்டுமன்றி தமிழ், இந்தி, ஆங்கிலம், மராத்தி, தெலுங்கு, கன்னடம் முதலான இந்திய மொழிகளிலும் நூல்கள் வெளியிடும் சிறப்பு இந்நிறுவனத்திற்கு உண்டு.

**தேசிய குழந்தை இலக்கிய மையம் (National Centre for Children's Literature (NCCL))**

1993 ஆம் ஆண்டு "தேசிய புத்தக டிரஸ்ட், இந்தியா" என்றொரு மையத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் தன்னாட்சி பெற்ற அமைப்பாகத் தொடங்கியது மத்திய அரசு. இது மொழிபெயர்ப்பு நூல்களைப் படைப்பதற்கும், வெளியிடுவதற்கும் முன்னுரிமை அளிக்கிறது. உலகம் முழுவதும் உள்ள குழந்தை இலக்கிய நூல்களை வெளியிடுதல், குழந்தை இலக்கியப் பணிகளைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், வெளியிடுதல் ஆகிய பணிகளைச் செய்கின்றது.

உலக மொழிகளிலுள்ள சிறந்த பதிப்பகங்கள், வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் ஆகியவர்கள் மூலம் குழந்தை இலக்கியத்தினை வளர்ப்பதை முக்கியப் பணியாகக் கொண்டிருக்கிறது. இந்நிறுவனத்தின் செயல்திட்டங்களில் முதன்மையானவையாக விளங்குபவை, குழந்தை இலக்கியப் பயிற்சி அளித்தல், ஆய்வு செய்தல், தகவல் தொடர்பு மற்றும் ஆவணப்படுத்துதல், வாசகர் அமைப்பை ஏற்படுத்துதல், வாசகர் வட்டத்திலிருந்து ஆசிரியர்களுக்குக் குழந்தை பற்றிய சிறப்பு பயிற்சி அளித்தல், சிறப்பு முகாம் நடத்துதல், எழுத்தாளர்கள் கூட்டம் நடத்துதல், ஆய்வாளர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்துதல், பயிலரங்குகள் நடத்துதல், நுணுக்கமான ஆர்வமான செயற்பாட்டாளர்களைத் தேர்வுசெய்தல், குழந்தை இலக்கிய வல்லுநர்களை ஒருங்கிணைத்தல் முதலியனவாகும்.

வாசகர் இதழ் (Readers' Club Bulletin) என்ற பெயரில் மாதந்தோறும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் வெளிவருகிறது. இவ்விதழ் உலக முழுமைக்கும் செல்கின்றது. குழந்தைகளின் படைப்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

தேசிய குழந்தை அமைப்பின்கீழ் நூலகமும் ஆவண காப்பகமும் செயல்பட்டு வருகின்றது. நூல்களால் புகழ் பெற்றவர்கள், திறனாய்வாளர்கள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஆசிரியர்கள், குழந்தை இலக்கிய செயற்பாட்டாளர்கள் தரும் நூல்கள் உள்ளன.



நூலகம் மூன்று வகையான உறுப்பினர்களைக் கொண்டு விளங்குகிறது. சாதாரண உறுப்பினர்கள் (தில்லியைச் சார்ந்தவர்கள்) இவர்களுக்கு ஒருமுறை பதிவுக்கட்டணம் நூறு ரூபாயும், திருப்பித் தரும் பாதுகாப்பு பணமாக ரூபாய் ஐந்நூறும் பெற்று நூலகச் சேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இதனை இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டாம் நிலை உறுப்பினர்கள், தற்காலிக உறுப்பினர்கள் எனப்படுவர். குழந்தை இலக்கிய ஆராய்ச்சித் தேவைக்காக வேறு மாநிலத்திலிருந்தோ, வெளிநாட்டிலிருந்தோ புதுதில்லி வந்து நூலகத்தைப் பார்வையிட வந்தால் அவர்களுக்கு இந்த முறை உறுப்பினர் முறை கையாளப்படுகிறது. மூன்றாம் நிலை உறுப்பினர்கள் நேசனல் புத்தக டிரஸ்டில்

வேலை செய்யும் ஊழியர்களுக்கானது. தேசிய குழந்தை இலக்கிய மையத்தில் 18 இந்திய மொழிகளில் உருவான நூல்கள், 26 உலகமொழிகளில் உருவான நூல்கள் என மொத்தம் 15000 புத்தகங்கள் உள்ளன. குறிப்பு உதவி, ஆய்வு நோக்கத்திற்காக எடுத்தியம்புவதே முதன்மை ஆகும். இந்நூலகம் தற்பொழுது நேரு பவனில் இயங்கிவருகிறது. பல்வேறு வழிமுறைகளில் நூலகம் வளர்ச்சி அடைந்து வருகின்றது. நூலகத்தில் தானே இயங்கும் சாப்ட்வேர் CDS/ISIS இணைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பயன்பாட்டில் உள்ள கணினி பயன்பாட்டு சாப்ட்வேர் பயன்படுத்தப்படுகிறது. இந்திய மொழிகளுக்கு யூனிக்கோடு எழுத்துரு பயன்பாட்டில் செயல்படுத்தப்படுகின்றது. விர்டுர என்ற தகவல் தொடர்பு சாப்ட்வேர் முறைகளில் நவீனத்துவ சேவையுடன் நூலகம் அமைந்துள்ளது. இணையம் வழி நூல்களைத் தேடும் வசதிகளும் அமையப்பெற்றுள்ளது. குழந்தை இலக்கிய தரவுகள் பொது பயன்பாட்டிற்கு உள்ளது. அனைத்துத் துறைகளில் உள்ள மக்கள் அனைவரும் குழந்தை இலக்கிய அறிவைப் பெறும் நோக்கில் நூல்களும், பத்திரிகைகளும் பயன்பாட்டில் உள்ளது. தேசிய மற்றும் உலக அறிவை அளிப்பதற்காகத் தகவல் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு விளங்குகின்றது.

**குழந்தைகள் புத்தக மையம்**

1957-ஆம் ஆண்டு சங்கர்பிள்ளை என்பவரால் புதுதில்லியில் இவ்வமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இவர் 1902 ஆம் ஆண்டு கேரளத்தின் காயம்குளம் என்ற இடத்தில் பிறந்தார். இளங்கலை கல்வியை கேரள மகாராஜா கல்லூரியில் பயின்றுள்ளார். இவர் சித்திரப்படம் வரைவது பொழுதுபோக்காகக் கொண்டவர். 1932 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரை 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழில் கருத்துப்படம் வரையும் பணியில் பணிபுரிந்துள்ளார்.

1948 ஆம் ஆண்டு சங்கர் என்ற பெயரில் வாரப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். பத்திரிகை 1975ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. மாற்று சிந்தனையில் தோன்றியதன் விளைவே குழந்தைகள் புத்தக மையம். 1957 ஆம் ஆண்டு குழந்தைகள் புத்தக மையத்தைத் தோற்றுவித்து குழந்தைகள் புத்தக மையத்தின் நோக்கமாக இந்தியாவில் குழந்தைகள் நூல்களை வெளியிடுதல், சிறந்த குழந்தை இலக்கிய எழுத்துக்களை ஊக்கப்படுத்தி உயர்த்துதல், சிறந்த புகழ் பெற்ற சிறந்த வடிவமைப்பைப் பெற்ற குழந்தைகள் நூல்களை அனைத்து இந்திய குழந்தைகளுக்கும் கொண்டு சேர்த்தல்.

குழந்தைகள் புத்தக டிரஸ்டில் (பாதுகாப்பு மையம்) புகழ்பெற்ற மாத இதழை ஆங்கிலத்தில் குழந்தைகள் உலகம் என்ற பெயரில் வெளியிடுகிறது. சங்கர் குழந்தை மையம் உலக குழந்தை மையமாக சிறப்பாக இயங்கி வருகின்றது. மையத்தின் நோக்கம் குழந்தைகள் ஆய்வுத்திட்டங்கள் உள்ளன. படைப்புத்திறன் உள்ள உலகஅளவில் உள்ள குழந்தைகளை ஒருமுகப்படுத்தி ஒன்று கூட்டுதல்.

மையத்தில் பெரிய பொருட்காட்சி மற்றும் ஓவியக்கலைக் காட்சிக்கூடம், உலக நாடுகளில் உள்ள பல்வேறு ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. பொதுகாட்சிக் கூடம், சான்றாதாரம் மற்றும் ஆய்வு நூலகம், கருத்தரங்கு மற்றும் பயிலரங்கு அறைகள் வசதிகள் மேலை நாடுகளில் உள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற நடனம், ஓவியம், தச்சு வேலைகள், கடைசல் வேலைகள், தையல் மற்றும் பல பணிகள் நடைபெற்று வருகின்றது. அடுத்த நிலையில் வளர்ச்சி பெற்று தன்னம்பிக்கைத் திறன், குழந்தைகளின் சிறப்பு தேவைகளான யோகா மற்றும் தியானம், வாழ்க்கைத் தொழில் சார்ந்த வழிகாட்டல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் மையம் இங்கு உள்ளது.

●

**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT



# புத்தகம் இல்லாத உலகினை என்னால் கற்பனைகூட செய்ய முடியாது

## விமர்சகர் ந.முருகேசபாண்டியன்

**சந்திப்பு: சுதீர் செந்தில்**

**இன்றைக்கு தமிழ் இலக்கியப் பரப்பில் முக்கியமான விமர்சன ஆளுமையாக அறியப்படும் நீங்கள் சிறுபத்திரிகை உலகில் பிரவேசித்தது, தற்செயலானதா அல்லது திட்டமிட்டதா?**

யோசிக்கும்வேளையில் பல விஷயங்கள் தற்செயலானவைதான். எட்டு வயதுச் சிறுவனான நான் எங்கள் ஊரில் இருந்த கிளைநூலகத்தில் நுழைந்ததும், அங்கிருந்த அம்புலிமாமா, கண்ணன் பத்திரிகைகளை வாசித்ததும் விளையாட்டுப் போக்கில் நடந்தவை. 1973ஆம் ஆண்டில் கல்லூரி நூலகத்தில் தற்செயலாக வாசித்த கணையாழி, தீபம் பத்திரிகைகள் எனக்குப் பிடித்துப் போனதற்குத் தனிப்பட்ட காரணம் எதுவுமில்லை. அவை, சிறுபத்திரிகை என்பதுகூட எனக்குத் தெரியாது. நான் படித்த கல்லூரியில் என்.சி.பி.ஹெச். பதிப்பகம் நடத்திய

புத்தகக் கண்காட்சியில் ரஷிய நாவலாசிரியரான லெர்மன்தேவின் நம் காலத்து நாயகன் நாவலின் மொழிபெயர்ப்பை வாங்கியது தற்செயலானது. எங்கள் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் ஐ.சி.பி. எனப்படும் ஐ.சி.பாலசுந்தரத்தின் அறிமுகம், முக்கியமானது. அவரின் இலக்கியப் பேச்சுகள் எனக்குப் புதிய உலகத்தைக் காட்டின. கண்ணதாசன், சிகரம், செம்மலர், தாமரை, மனிதன் போன்ற பத்திரிகைகள் எனக்குப் பிடித்தமானவையாக இருந்தன. என்றாலும் எனது உலகம் நாவல்களை மையமிட்டு விரிந்து கொண்டிருந்தது. அசலான தமிழ் நாவல்களுடன் மொழிபெயர்ப்பு நாவல்களைப் பேய்த்தனமாக வாசித்தேன். ஐ.சி.பி. மூலம் வாசிக்கக் கிடைத்த கசடதபற, அஃக், சுவடு போன்ற பத்திரிகைகள், வித்தியாசமான நடை, வடிவம், விஷயம் காரணமாக என்னைக் கவர்ந்தன. அன்றைய காலகட்டத்தில் நாட்டில் அவசரநிலை அமலில் இருந்தது. நாகர்கோவிலில் இருந்து உமாபதி வெளியிட்ட தெறிகள், திருவனந்தபுரத்திலிருந்து ராஜமார்த்தாண்டனும் நண்பர்களும் வெளியிட்ட கோகயம் போன்ற பத்திரிகைகள், எனக்குள் ஆழமாக ஊடுருவின. இதுபோன்ற பத்திரிகைகளைத் தொடர்ந்து வாசித்ததனால் என்னை வித்தியாசமானவனாகக் கருதிக்கொண்டேன். என் பதின்ம வயதில் கவிஞர் பிரமிள் அரூப் சிவராமைப் பார்க்க ஐ.சி.பி. அழைத்துப் போனார். ஏறக்குறைய நான்கு மணி நேரம் பகடியான மொழியில் அவர் பேசுவதைக் கேட்டேன். எனது பிறந்த தேதி என்ன என்ற பிரமிள், 26 என்றவுடன், ஒருபோதும் இலக்கியத்தை விட்டு என்னால் மீள முடியாது என்றார். எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. புத்தகம் வாசிப்பதில் அளவுக்கதிகமான ஈடுபாடு இருந்ததுதவிர, அதிலேயே மூழ்கிப் போகும் மனநிலை எனக்கு அப்பொழுது இல்லை. அப்புறம் கோவில்பட்டிக்குப் போய்ப் பார்த்த தேவதச்சன், கௌரிசங்கர், ஜோதி விநாயகம் தொடங்கி வண்ணதாசன், கலாப்ரியா, மு.ராமசாமி ஆகியோருடன் பேசிய பேச்சுகள், எனக்குள் என்னமோ செய்தன. எதைப் பற்றியும் கறாராக விமர்சிக்கும் மனப்பாங்கு, பகடி, முரட்டுத்தனம், கொஞ்சம் புத்தர், ஜே.கே. தத்துவம், மார்க்சியம், கதர் ஜிப்பா, ஜோல்னா பை, விட்டேத்தியான மனநிலை, மூத்த எழுத்தாளரையும் பெயர் சொல்லிப் பேசுதல், செய்யது பீடி, நவீன ஓவியம், தேநீர், சார்மினார் சிகரெட், உலக இலக்கியம், நவீன நாடகம் என எப்படியோ நான் சிறுபத்திரிகை உலகினுக்குள் நுழைந்தது இயல்பாக நடந்தேறியது. எழுபதுகளில் அவ்வப்போது வெளியாகும் முக்கியமான பத்திரிகைகள், புத்தகங்களை வாசித்துவிட்டுப் பேச வேண்டியது, சிறுபத்திரிகை உலகில் அவசியம். ஒரு கவிதைகூட பிரசுரமாகா விட்டாலும், சீரியஸ் இலக்கியம் குறித்துப் பேசுவது முக்கியமானதாகக் கருதப்பட்டது. அது ஒருவகையான மனநிலை. நண்பர் அப்பாஸ் அடிக்கடி சொல்லுவார் "நாம எல்லாம் சிறுபத்திரிகைக்காரனுக பாண்டியன்" என்று. எனக்கு அப்படியான கூட்டத்தில் ஒருவனாக இருப்பது உற்சாகம் தந்தது. மற்றபடி சிறுபத்திரிகை உலகினுள் நுழைந்த செயல், புதைமணலில் காலை வைப்பதுபோல ஆளை உள்ளே இழுத்திட்டுப் போயிடுச்சு.

**பொதுவாக ஒருவரின் வாழ்க்கையில் வடிவமைப்பது இரண்டு காரணிகள். ஒன்று குடும்பம். மற்றது நட்பும் வெளியுலகத் தொடர்பும். உங்களுடைய இந்த இலக்கிய ஆர்வத்திற்கு குடும்பப் பின்னணியில் யாராவது இருந்தார்களா?**

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து எங்கள் வீட்டிற்குத் தினத்தந்தி நாளிதழ் வந்தது. அந்தக் காலகட்டத்தில் சமயநல்லூர் போன்ற கிராமத்தில் செய்தித்தாள் வாங்குவது பெரிய விஷயம். நான் இரண்டாம் வகுப்புப் படிக்கும்போது, தினத்தந்தி பத்திரிகையில் கன்னித்தீவு, சிரிப்பு பகுதிகளை ஆர்வத்துடன் வாசித்தேன். எனது தந்தையார் பெரிய எழுத்து விக்ரமாதித்யன் கதை, ராஜாஜி எழுதிய வியாசர் விருந்து போன்ற புத்தகங்களை தினமும் பகலில் தூங்குவதற்கு முன்னர் கொஞ்ச நேரம் வாசிப்பார். எனது அய்யாப்பா மூ.வடிவேல் அவர்கள் பெரியாரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, தினமும் விடுதலை நாளிதழ் வாசிப்பார். குடும்பத்தில் யாரும் இலக்கிய ஆர்வலர் இல்லை. எங்கள் ஊரில் தினமும் இரவுவேளையில் அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் வீட்டுத்திண்ணையில் அமர்ந்து வயதானவரான சுடலைமுத்து நாடார் பெரிய எழுத்து விக்ரமாதித்யன் கதையை ராகத்துடன் சத்தமாக வாசிப்பார். அவருக்கு முன்னால் இருந்து இருபது ஆட்களாவது ஆர்வத்துடன் கேட்பார்கள். நானும் கேட்டிருக்கிறேன். அவரது கதைசொல்லல், சிறுவனான எனக்கு ஆர்வத்தைத் தரவில்லை. இப்ப யோசிக்கும்போது கல்வியறிவு அற்ற கிராமத்தினருக்குப் புத்தகத்தைத் தினமும் வாசித்துக் கதைசொன்னவரின் உன்னதமான மனநிலை புலப்படுகின்றது. மற்றபடி எங்கள் கிராமத்தில் தீவிரமான இலக்கிய வாசகர் யாரும் இல்லை.

**இன்றைக்குச் சிறுபத்திரிகைகளும் நவீன இலக்கிய நூல்களும் எளிதாகக் கிடைப்பது போன்று எழுபதுகளில்**

**கிடைத்திருக்க வாய்ப்பில்லை. நீங்கள் எவ்வாறு அவற்றைக் கண்டடைந்தீர்கள். அரசு நூலகங்களே உங்களுக்குப் போதுமானதாக இருந்தனவா?**

எழுபதுகள் காலகட்டத்தில் பழைய புத்தகக் கடைகளில் அருமையான இலக்கியப் புத்தகங்களைக் குறைந்த விலையில் வாங்கலாம். எந்த ஊருக்குப் போனாலும் நண்பர்களுடன் பழைய புத்தகக் கடைக்குப் போவது வழக்கம். ஜோதி நிலையம் போன்ற பதிப்பகங்கள் வெளியிட்ட உலகத்து கிளாஸிக் நாவல்களின் மொழிபெயர்ப்புகளை அங்கிருந்துதான் வாங்கி வாசித்தேன். மதுரையிலிருந்து சென்னைக்குப் போகும்போது, நள்ளிரவில் திருச்சியில் இறங்கி ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் இருந்த பழைய புத்தகக் கடைகளை அலசிப் பார்த்துவிட்டுத்தான் போவேன். இரவு முழுக்கப் பழைய புத்தகக் கடைகள் திறந்து இருந்தன என்பது இன்றைக்கு ஆச்சரியமான விஷயம். மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகில் இருந்த பழைய புத்தகக் கடைக்காரருக்கு எனக்கு என்ன மாதிரி புத்தகங்கள் பிடிக்கும் என்பது தெரியும். என்னைப் பார்த்தவுடன் கடைக்குள் போய் இலக்கியப் புத்தகங்களாக அள்ளி வந்து தருவார். என்ன அப்பொழுது கையில் காசு கம்மி. இருந்தாலும் ஒரு புத்தகமாவது வாங்கி விடுவேன். இப்பப் பழைய புத்தகக் கடைகள் மாறிப்போய் விட்டன. அங்கு இலக்கியப் புத்தகங்கள் கிடைப்பதில்லை. அப்புறம் அரசின் கிளை நூலகங்கள் எனது வாசிப்பினுக்குச் செமையாகத் தீனி போட்டன. அங்கிருந்துதான் தமிழ்வாணன், ஆர்.சண்முகசுந்தரம், கல்கி, ஜெயகாந்தன், சாண்டில்யன், புதுமைப்பித்தன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளை வாசித்தேன். ஆனைமுத்து தொகுத்து வெளியிட்ட பெரியார் எழுத்துகள் மூன்று பாகங்களை என்னால் பதினெட்டு வயதில் வாசிக்க முடிந்தது, ஆவுடையப்பன் என்ற கிளை நூலகரின் உதவியினால்தான். ஏனெனில் பெரிய புத்தகங்களை இரவலாகத் தர மாட்டார்கள்.

**மறைந்த கவிஞர் அப்பாஸ் சொன்னதைப் போல 'சிறுபத்திரிகைக்காரங்க' என்கிற போதை இன்றும் உள்ளதா? அவ்வுணர்வு காலாவதியாகிவிட்டது என்கிற குரல்கள் ஒலிக்கின்றனவே.**

பழைய நினைப்பில் சிறுபத்திரிகைக்காரங்க என்ற போதையில் படைப்பாளர், வாசகர் பலரும் இன்றும்கூட கிறங்கியுள்ளனர். அவ்வளவு சீக்கிரம் அது மறைந்து விடாது. அது ஒருவகையான வாழ்க்கை, மனநிலை. கலாப்ரியா குற்றாலத்தில் நடத்திய பதிவுகள் கூட்டங்களில் கலந்துகொண்டவர்கள் பலரும் சிறுபத்திரிகைக்காரர்கள்தான். தேர்ந்த வாசகனை முக்கியமானவராக மதித்து நாள் முழுக்க இலக்கியம் பற்றிப் பேசிய நகுலன், தேவதச்சன், பிரபஞ்சன், சுந்தர ராமசாமி போன்ற ஆளுமைகளின் செயல்பாடுகள் அவ்வளவு எளிதில் போய்விடுமா என்ன? இலக்கியம் உருவாக்கிய உன்மத்த மனநிலையுடன் மிதந்து திரிகிறவனுக்குச் சக படைப்பாளியின் பேச்சும் சிநேகிதமும் இதமானவை. உறவினரைவிட இலக்கிய நண்பர்கள் நெருக்கமானவர்களாக மாறுவது சிறுபத்திரிகையினால்தான் சாத்தியம். கோணங்கியைச் சிறுபத்திரிகை மடத்தின் தம்பிரான் என்று சொல்லலாம். இன்று சிறுபத்திரிகை மரபு வேறுவகையில் மாற்றம் அடைந்துள்ளது. இணையத்தளம் பரவலாகி பிளாக்கர்ஸ் உருவான பின்னர், முகநூலில் தகவலை எழுதுகிறவர் எல்லாம் எழுத்தாளர் என்ற சூழல் உருவான பின்னர், இலக்கியத்தின் வீச்சு எங்கேயோ போய்விட்டது. தான் எழுதிய படைப்பினைவிட பொதுவான போக்குகள், புத்தகங்கள் பற்றிப் பேசுவது என்ற சிறுபத்திரிகை மரபு சிதலமாகிப்போனது வருத்தமாக இருக்கிறது. படைப்பாளி இறந்து விட்டான் என்ற குரல் ஓங்கி ஒலிக்கும் சூழலில், இன்று பலரும் தங்களது படைப்புகளைச் சீராட்டி, இதுவே தமிழின் உன்னதமான படைப்பு எனப் புளகாங்கிதம் அடைகின்றனர். அது அற்ப மனநிலை இல்லையா, செந்தில்?

**விமர்சனத் துறையில் உங்களுடைய முன்னோடிகள் யார்?**

நான் சிறுவனாக இருந்தபோது வாசித்த நூலகப் புத்தகங்களில் 'மகா அறுவை' என எழுதிச் சிறிய ரம்பப் படம் வரைந்திருப்பதைப் பார்த்தவுடன் எனக்கு வேடிக்கையாக இருக்கும். அது ஒருவகையில் கூர்மையான விமர்சனம். பொதுவாக எந்தவொரு விஷயம் குறித்தும் அபிப்ராயம் சொல்வது எல்லோரிடமும் உள்ளது. குறிப்பாக ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடுவது நம்மிடையே வழக்கினில் உள்ளது. எனது சீனியர் எழுத்தாளர்களுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்புகள் எதையும் கறாராக அணுகும் பார்வையை ஏற்படுத்தின. 1977ஆம் ஆண்டு என நினைக்கிறேன். கோவில்பட்டி நகருக்குப் போயிருந்தபோது, கவிஞர் தேவதச்சனின் இலக்கியம் குறித்த பேச்சு, எனக்குப் பிரமிப்பைத் தந்தது. ஒரு சாதாரண விஷயத்தையும் நுட்பமாகப் பார்க்கும் அவருடைய விமர்சனப் பார்வை, என்னைக் கவர்ந்தது. என்னவொரு ஆளுமை என்று தோன்றியது. இடைவிடாமல் வாசிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். அப்புறம்

நண்பர்களுடன் போன்றோருடன் இரவு முழுக்க நடந்த விவாதங்கள் எனக்குக் கொம்பு சீவி விட்டன. "கவிதை எழுதுகிறவனுக்குக் கோபம் வேணும். ரௌத்திரம் பழகுன்னு பாரதியார் சும்மாவா சொன்னார். இப்பக் கவிதை எழுதுகிறவங்களில் பலருக்குக் கோபமே இல்லையே... பின்னே எப்படி கவிஞர் என்று சொல்வது" என மட்டையடி அடித்த கௌரிசங்கர் பேச்சு, சுவாரசியமாக இருக்கும். அகிலனுக்குச் சித்திரப்பாவை நாவலுக்காக ஞானபீடம் விருது கொடுத்தபோது, 'தமிழ்ப் பீ' என விழிகள் பத்திரிகையில் எழுதிய மு.ராமசாமியின் தோழமை எனக்கு முக்கியமானது. எது பற்றியும் மனத்தடை இல்லாமல் எழுதவோ பேசவோ வேண்டுமென்பதை மு.ராமசாமியிடமிருந்து அறிந்தேன். எல்லாவற்றுக்கும் முன்னால் பேராசிரியர் ஐ.சி.பாலசுந்தரத்திடமிருந்து எதையும் எப்படி நுட்பமாக அணுக வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். மெல்லிய குரலில் அன்போடு பேசும் ஐ.சி.பி. விமர்சனம் என்றால் எவ்விதமான சலுகையும் காட்டாமல் நெற்றியடியாக தனது கருத்தினைச் சொல்வார். ஜெயகாந்தனின் அக்னிபிரவேசம் சிறுகதையை வாசித்துவிட்டு அற்புதம் என்று அவரிடம் சொன்னபோது, மாணவனான என்னிடம் அந்தக் கதையிலுள்ள எதிர்மறை அம்சங்களை நுட்பமாக விளக்கினார். முதன்முதலாகப் பாலியல் வல்லுறவிற்குள்ளாகும் இளம்பெண்ணின் உடலும் மனமும் அடையும் அவஸ்தைகள் பற்றி அந்தக் கதையில் குறிப்பு எதுவுமில்லையே எனத் தொடங்கி, வெறுமனே பரபரப்பினைத்தவிர அந்தக் கதையில் வேறு என்ன இருக்கு ? என்று கேள்வி எழுப்பினார். ஒரு சிறுகதை எழுதிக் கொண்டுபோய் அவரிடம் தந்தால், அதை வாசித்துவிட்டுக் "கிழித்துவிடு முருகேசா" எனப் புன்னகையுடன் சொல்வார். ஒரே கதையைப் பத்துத் தடவைகள் எழுதிப் பார்க்க வேண்டும் என்பார். எளிதில் எதையும் பாராட்டிச் சொல்ல மாட்டார். இலக்கியம் மட்டுமல்ல; உணவு, காதல், நட்பு, பெருந்தன்மை எனப் பல்வேறு விஷயங்களை நடைமுறையில் கற்றுத்தந்த ஐ.சி.பி.தான் எனது விமர்சனப் பார்வைக்கு வித்திட்டவர்.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் படித்தபோது சி.கனகசபாபதி, தி.சு.நடராசன், சு.வெங்கடராமன், முத்துச்சண்முகன் போன்ற பேராசிரியர்களின் கல்விப்புலம் சார்ந்த அணுகுமுறைகள் வேறொரு அணுகுமுறையை அறிமுகப்படுத்தின. குறிப்பாக எம்.ஃபில் ஆய்வேடு எழுதும்போது எனது மொழி ஆளுகை குறித்துப் புரிதலை ஏற்படுத்திய நெறியாளரான தி.சு.நடராசனின் வழிகாட்டுதல், எனக்குள் அழுத்தமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அன்றைய காலகட்டத்தில் இலக்கிய விமர்சனம் குறித்து அக்கறை கொண்டிருந்த பேராசிரியர்களிடம் வகுப்பறைக்கு வெளியேயும் எனக்கு இருந்த தோழமையும், பேச்சும் எனக்குக் கிடைத்த பெரும்பேறு. எழுபதுகளில் கொடிகட்டிப் பறந்த ஞானி,நா.வானமாமலை, வெங்கட் சாமிநாதன், தமிழவன், பிரமிள், கோ.கேசவன், க.நா.சு., நகுலன், எஸ்.வி.ராஜதுரை, க.கைலாசபதி, கா. சிவத்தம்பி எனப் பலரின் விமர்சனங்களை உற்சாகத்துடன் வாசித்தேன். இலக்கியத்தை முன்வைத்துக் குழுக்களாகப் பிரிந்து கடுமையாக வீசிக்கொண்ட விமர்சகர்களின் அம்புகள் கூர்மையானவை. 'மல்லு வேட்டி மைனர்' எனத் தமிழவனை வெங்கட்சாமிநாதன் கேலியாக எழுதியது இப்பவும் நினைவில் உள்ளது. விமர்சனத்தில் எனக்கு முன்னோடி என்றால் காத்திரமாக ஒரு விமர்சனக் கட்டுரை எழுதியவரும்தான்.

**உங்கள் கல்லூரிப் பேராசிரியர் ஐ.சி.பாலசுந்தரம் இடதுசாரி சிந்தனையாளரா? அவரது தாக்கம் உங்கள் எழுத்தில் உள்ளதா? உங்கள் எழுத்தில் இடதுசாரி சாய்வு தென்படுகின்றதே?**

ஐ.சி.பி. முழுக்க உன்னத இலக்கியம் பற்றிப் பேசுகிறவர்; எழுத்தில் மட்டுமல்ல உணவு, உடை, பழக்கவழக்கம் எல்லாவற்றிலும் உன்னதமான விஷயங்கள் பற்றிய பிரக்ஞையை எனக்குள் உருவாக்கியவர். மாணவனான என்னிடம் பாலியல் பற்றி வெளிப்படையாகப் பேசியதன்மூலம் எதுவும் மறைபொருள் அல்ல, புனிதமும் அல்ல என்பதை உணர்த்தினார். அற்புதமான விமர்சகரான அவர் ஒரு கட்டுரைகூட எழுதவில்லை. அவர் நிச்சயம் மார்க்சிஸ்ட் அல்ல. ரகுநாதன், வானமாமலை போன்றவர்கள் எழுதிய விமர்சனங்கள் மீது அவருக்கு மரியாதை இல்லை. சரி, அது போகட்டும். தமிழில் எழுதுகிற எல்லோருமே இடதுசாரி மனோபாவம் கொண்டவர்கள்தான். கம்யூனிச சித்தாந்தம் பற்றி அறியாமலே அதற்கு எதிரி என நம்புகின்றவர்கள்கூட, தங்களுடைய படைப்புகளில் இடதுசாரி சார்புடன்தான் எழுதுகின்றனர். இதற்கு நான் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாது. அடிப்படையில் நான் மார்க்சிஸ்ட்.


**மேற்கத்திய விமர்சன மரபுக்கும் தமிழக விமர்சன மரபுக்கும் பெருமளவில் வேறுபாடுகள் உள்ளன. இதை எப்படி அணுகுகிறீர்கள்?**

எந்த நாட்டு இலக்கியம் என்றாலும் படைப்பிலக்கியத்திற்குத்தான் முன்னுரிமை.

ஆனால் மேலைநாட்டைப் பொறுத்தவரையில் கோட்பாட்டாளர்கள் முன்னிலை வகிக்கின்றனர். புதிதுபுதிதாகக் கோட்பாடுகளும் சொல்லாடல்களும் உருவாக்கப்படுகின்றன. இலக்கியம், மனித வாழ்க்கையிலிருந்தும் சமூகப் பிரச்சினைகளில் இருந்தும் அந்நியப்படுகிறபோது, அது ஒருவகையான சோர்வும் வெறுமையும் அடைகிறது. அரசியலற்ற தன்மையில் உலகத்தைப் புரிந்துகொள்ள விழைகிற தத்துவவாதிகள், புதிய கோட்பாடுகள் மூலம் இலக்கியத்தை மறு விளக்கம் செய்ய முயலுகின்றனர். இதனால் விமர்சன முறையும் விமர்சன மொழியும் மாறிவிட்டது. புதிய கோட்பாடு, புதிய வியாக்கியானம் என்ற நிலையில், அதற்குப் பின்னால் ஓட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இத்தகு சூழல், தமிழக அறிவுஜீவிகளுக்கு நெருக்கடியைத் தந்துள்ளது. கோட்பாடுமயமாதல் என்ற நிலையில் கோட்பாடு என்பது சந்தைக்கான நுகர்பொருளாகி விட்டது. தமிழ் போன்ற இரண்டாயிரமாண்டு வளமான மொழியிலுள்ள படைப்புகளின் தகுதியைத் தீர்மானிப்பதாகக் கோட்பாடு மாறியது, மோசமானது. கோட்பாடுகளை உற்பத்தி செய்கிறவர்களும் சந்தைப்படுத்துகிறவர்களும் அதிகார மையமாகியுள்ளனர். பின் காலனியச் சூழலில் மேலைநாடு என்றால் மேன்மையானவை என்ற நிலையில் நகலெடுப்பது விமர்சனத்தளத்திலும் வந்துவிட்டது. மேலைநாட்டில் அவ்வப்போது புதிய மோஸ்தரில் பிரபலமாகும் தத்துவச் சொல்லாடல்களை அறிவுஜீவித்தனத்தின் உச்சம் என பாமரத்தனமாக நம்புவது தமிழிலக்கிய உலகிலும் நடைபெறுகிறது. காலனியாதிக்கத்தின் விளைவாகத்தான் தமிழில் விமர்சனம் உருவானது என்று நம்புமளவு சூழல் ஏற்பட்டுள்ளது. தொல்காப்பியரின் செய்யுளியல் விவரிக்கும் கவிதையியல், திணைக் கோட்பாடு, சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள நுட்பமான உரை, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்குச் சொல்லப்பட்டுள்ள உரை எனத் தமிழின் மரபு வழிப்பட்ட விமர்சன முறையின் தொடர்ச்சி இங்கு முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. தமிழ் விமர்சன முறை என்ற முறையியலை மீட்டெடுக்க வேண்டிய நேரமிது.

**நீங்கள் ஒரு படைப்பை ஆய்வுசெய்யும்போது எந்த அடிப்படையில் அதை செய்கிறீர்கள்?**

மீண்டும் சொல்கிறேன். அடிப்படையில் நான் வாசகன். பத்து வயதில் வாசித்த வாண்டுமாமாவின் 'சிறுத்தைச்சீனன்' நாவல், காந்தியின் 'சத்திய சோதனை' போன்ற புத்தகங்கள் எனக்குள்



ஏதோவொரு மாயத்தை உருவாக்கி விட்டன. அன்று தொடங்கிய வாசிப்பு, என்னை மீளாத சூழலுக்குள் இழுத்து விட்டது. புத்தகத்தின் மீதான வசீகரம் கூடிக்கொண்டே போகிறது. புதிதாக வெளியான முக்கியமான புத்தகத்தைப் பார்க்கும்போது எனக்குள் ஏற்படும் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாது. புத்தகம் இல்லாத உலகினை என்னால் கற்பனைகூட செய்ய முடியாது. எந்தவொரு புத்தகமும் எனது சுயம் சார்ந்த நிலையில்தான் என்னால் வாசிக்கப்படுகிறது. புத்தகம் பற்றிய நண்பர்களின் அபிப்ராயங்களை முன்கூட்டியே அறிந்திருந்தாலும், எவ்விதமான பாரபட்சம் இல்லாமல் வாசிப்பேன். எனக்கும் அந்தப் புத்தகத்திற்குமான அசலான உறவுதான் முக்கியம். ஒரு புத்தகம், வாசிப்பின் வழியே எனக்குள் உருவாக்கும் அனுபவங்களின் பின்புலத்தில் எனது மதிப்பீடுகள் உருவாகின்றன. ஒவ்வொரு படைப்பும் தனித்துவமானது என்ற நிலையில், அதை அணுகுவதற்கும் தனிப்பட்ட

அளவுகோல்கள் தேவைப்படுகின்றன. யார் என்ன சொன்னால் என்ன? எனக்கு அந்தப் படைப்பு தரும் அபிப்ராயம்தான் முக்கியம். ரஷிய நாவலாசிரியரான மீ.யூ.லெர்மன்தேவின் 'நம் காலத்து நாயகன்', ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி', ஹெமிங்வேயின் 'போரே நீ போ' போன்ற நாவல்களை ஏழெட்டுத் தடவைகள் வாசித்திருப்பேன். மனம் சோர்வாக இருக்கும்போது அவை வாசிப்பின் வழியே என்னை வேறு உலகினுக்குள் இட்டுச் செல்கின்றன. படைப்பு என்பது வெறுமனே வறண்ட காகிதக் கத்தை அல்ல; மனித ஆன்மாவின் சாரம். பொதுவாக விமர்சகர் எனத் தனிப்பட்ட வரையறைகளைக் கறாராக வைத்துக்கொள்வதில்லை. இந்தப் படைப்பு எனக்குப் பிடிச்சிருக்கு அல்லது பிடிக்கவில்லை என்பதிலிருந்து தொடங்கி பிடிப்பதற்கான காரணங்கள் அல்லது பிடிக்காமைக்கான காரணங்களைத் தருக்கரீதியில் விளக்குவதுதான் விமர்சனத்தின் ஆதாரம்.

**இன்றைக்கு புதிதாய் எழுத வருபவர்கள் அபுனைவை நோக்கியே மய்யம் கொள்வதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அபுனைவு என்பது தொடர்ச்சியறு எழுத்து. தமிழைப் பொறுத்தவரையில் கதைசொல்லலில் தொடர்ச்சியறு எழுத்துமுறை, பல்லாண்டுகளாக வழக்கினில் உள்ளது. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் கதையாடல், தொடர்ச்சியற்றுத்தான் சொல்லப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் கதை ஆக்கத்தில் நேர்த்தி, துல்லியம் என வரையறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டன. செய்நேர்த்தியுடன் எழுதப்பட்ட பிரதிகளில் வாசகரின் கற்பனைக்கு இடமில்லை. எப்படியோ தமிழவன், கோணங்கி, சாருநிவேதிதா, எம்.ஜி.சுரேஷ், பிரேம் ரமேஷ் தொடங்கி வைத்த நவீன எழுத்துமுறை, இன்று பரவலாகி விட்டது. இதனால் யதார்த்த கதைசொல்லல் இன்னும் கூடுதலான சவால்களை எதிர்கொண்டுள்ளது. குமாரசெல்வாவின் குன்னிமுத்து நாவல் போல யதார்த்தமாக எழுதினால் நிலை பெற முடியும். மற்றபடி மூன்று தலைமுறைக் கதை என மொக்கையாக 700 பக்கங்களுக்கு நாவல் எழுதினால், அது 500 பிரதிகள் அச்சடிக்கப்படுவதற்காக வெட்டப்பட்ட மரங்களை நினைக்கும்போது, வருத்தமாக இருக்கிறது. ஒருபுறம் நாவலை வாசிக்க வேண்டி வாசகர்மீது செலுத்தும் வன்முறை, இன்னொருபுறம் சுற்றுச்சூழல் நாசம் என இரு குற்றங்கள் நிகழ்கின்றன. இன்று மீண்டும் அபுனைவை நோக்கி இளைஞர்கள் பயணப்படுவது நல்ல விஷயம்தான்.

**விமர்சனம் என்பது ஒருவகையில் சார்புநிலையில்தான் இயங்க முடியும். என்றாலும் அதற்கென ஓர் அறம் உண்டு. இன்றைக்கு அது மீறப்பட்டு போலியான மதிப்பீடுகள் உருவாக்கப்படுகின்றன இல்லையா?**

நீங்கள் சொல்வது சரி. நடுநிலைமை என எதுவும் இருக்க வாய்ப்பில்லை. அப்படி யாராவது சொன்னால் அது டுபாக்கூர் பேச்சு. அறம் என எதுவும் கறாராக இருக்க முடியுமா? யோசிக்க வேண்டும். தனிமனித அறம், சமூக அறம் என நம்பிக்கை இல்லாவிட்டால் அடிப்படையே ஆட்டங்கண்டு விடும். தமிழகத்தில் அரசியல் அறம் என எதுவும் இல்லாமல் போய்விட்ட சூழலில், விமர்சன அறம் மட்டும் இருக்க முடியுமா? எப்படி முட்டுக்கொடுத்துத் தூக்கினாலும் ஒரு படைப்பை நிலை நிறுத்த முடியாது. இதற்கு நிரம்ப உதாரணங்களைச் சொல்ல முடியும். இது பவண்டோகளின் காலம். இலக்கியத்தில் மட்டும் அறத்தை எதிர்பார்க்க முடியுமா? போய் பவண்டோ குடிக்கலாம் செந்தில்.

**பரந்த வாசிப்பு இல்லையெனில் விமர்சனத் துறையில் சுடரவியலாது; உங்களுடைய வாசிப்பு பரப்பை எவ்வாறு விரிவாக்கிக்கொள்கிறீர்கள்?**

பரந்துபட்ட வாசிப்பு மிகவும் அவசியம். எப்பவும் விழிப்போடிருக்க வேண்டியுள்ளது. எண்பதுகள் வரையிலும் தமிழில் என்னென்ன முக்கியமான படைப்புகள் வெளியாகின்றன என்பது குறித்துக் கவனமாக இருக்க முடிந்தது. ஏதோவொரு பத்திரிகையில் புதிதாகக் கதை எழுதியவரின் பெயரும் கதையும்கூட ஞாபகத்தில் இருந்தன. சிறுபத்திரிகை வட்டாரத்தில் புழங்குகிறவர்கள் பற்றி மங்கலாகவாவது படம் தெரிந்தது. இன்று சூழல் முழுக்க மாறிவிட்டது. இடைநிலை இதழ்களின் காலம் இது. உயிர்மை, உங்கள் நூலகம், புத்தகம் பேசுது, காலச்சுவடு, அம்ருதா, தீராநதி, நிலவெளி, காக்கைச் சிறகினிலே போன்ற பத்திரிகைகளை வாசிப்பதிலே இரு வாரங்கள் ஆகிவிடுகிறது. அப்புறம் ஏ-4 அளவில் 200 பக்கங்களுக்கும் கூடுதலாகப் பிரசுரமாகும் 'கல்குதிரை, மணல் வீடு தொடங்கி சங்கு, செங்காந்தள், அகவிழி' போன்ற பத்திரிகைகள் அவ்வப்போது களம் இறக்கப்படுகின்றன. சீரியஸான வாசகர் பத்திரிகைகள் பின்னால் ஒரே ஓட்டமாக ஓட வேண்டியுள்ளது. இப்பொழுது எங்கிருந்தோ திடீரென ஒருவர் முக்கியமான ஒரு புத்தகத்தைக் களம் இறக்குகிறார். அதைத் தேடிக் கண்டுபிடித்து வாசிப்பதே பெரிய வேலை. சமீபத்தில் சரவணன் சந்திரனின் லகுடு, லஷ்மி சரவணக்குமாரின் கொமோரா,

தமிழ்ப் பிரபாவின் பேட்டை,போகன் சங்கரின் ஆயிரம் நாமங்கள்,சைலபதியின் தேவன் மனிதன் லூசிபஃர், பிரியா விஜயராகவனின் அற்றவைகளால் நிரம்பியவள், சிவபாலன் இளங்கோவனின் உயிர்நீட்சி, அருணா ராஜின் கறுப்பி, இளங்கோவின் மெக்ஸிக்கோ, ஆத்மார்த்தியின் ஏந்திழை எனப் புதிய படைப்புகள். இன்னொருபுறம் மொழிபெயர்ப்பு நாவல்கள், பல்துறை சார்ந்த கட்டுரை நூல்கள். இன்று எப்படிப் பார்த்தாலும் தீவிரமாக கவிதை எழுதுகிற கவிஞர்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டும். அப்புறம் இணையத்தளத்தில் எழுதுகிறவர்களின் உலகம் விரிந்துகொண்டே போகிறது. இப்படியான சூழலில் முக்கியமான புத்தகங்களை எப்படி அப்டேட் செய்வது என்பது ஒருவகையில் சவால். இலக்கியப் படைப்புகளுடன் காத்திரமாக எழுதப்பட்டுள்ள கட்டுரைப் புத்தகங்களை வாசிக்கும்போதுதான் விமர்சன மனம் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது. எப்படிப் பார்த்தாலும் தீவிரமான வாசிப்பைத்தவிர வேறு குறுக்கு வழி எதுவுமில்லை.

**இன்றைக்கு எழுத வரும் படைப்பாளிகளுக்குப் பரந்த வாசிப்பு இருப்பதாகக் கருதுகிறீர்களா? அல்லது படைப்பாளருக்கு அது தேவை இல்லையா?**

எண்பதுகளுடன் ஒப்பிடும்போது இன்று காத்திரமான புத்தகங்கள் நிரம்ப வெளிவருகின்றன. புதிதாக எழுதவரும் எழுத்தாளர்கள் நிரம்ப வாசிக்க வேண்டியுள்ளது. ஒரு படைப்பாளிக்குப் பரந்துபட்ட வாசிப்பு அவசியம். வாசிப்பதைத் தவம் மாதிரி செய்கிற இளம் படைப்பாளர்கள் உள்ளனர். இணையத்தில் அதிக அளவில் நேரம் செலவானால், புத்தக வாசிப்பு குறைந்துவிட வாய்ப்புண்டு. அதிகமாக வாசிக்க முடியாதது தவறு என்று சொல்ல முடியாது. வேலை, குடும்பச் சூழல் காரணமாகப் பலருக்கு வாசிக்க நேரம் கிடைக்காமல் போய்விடலாம். ஆனால் எல்லாம் தெரிந்தது மாதிரி பில்டப் செய்வதும், தனது படைப்புதான் சிகரம் எனப் பேசுவதும் சின்னப் பிள்ளைத்தனமானது. இதனால் இன்று இலக்கிய உலகில் போலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இருண்மையான மொழியில் கொஞ்சம் கவிதைகளை எழுதிவிட்டு, எனது கொடி வானில் பறக்கிறது, எனக்கு நிகராக யாரும் இல்லை என்று சோடி போட்டுச் சிலர் கொக்கரிப்பது, இலக்கியத்திற்குப் புறம்பானது.

**எதை வாசிக்க வேண்டும் எனத் தேர்வு செய்வதில் உங்கள் வழிகாட்டுதல் என்ன?**

மேயப் போகிற மாடு கொம்பில் புல்லைக் கட்டிக் கொண்டா போகும்? என்ற கிராமத்துச் சொலவடை நினைவுக்கு வருகின்றது. தமிழறிஞர் உ.வே.சா. 'என் கதை' யில் சொன்னதுபோல ஒத்த கருத்துடைய நண்பர்களுடன் இலக்கிய சல்லாபம் செய்ய வேண்டும். எப்பவும் திறந்த செவியுடன் குழுவாகப் படைப்புகள் பற்றிப் பேசத் தொடங்கினாலே எவை உடனடியாக வாசிக்கவேண்டிய புத்தகங்கள் என்பது உங்களுக்குப் புலப்பட்டு விடும். யாராவது ஒருவர் திடீரென பிரியா எழுதிய காலநதி என்ற நாவலைப் பற்றி நேர்மறையாகச் சொன்னால், அதைத் தேட வேண்டியதுதான். இடைவிடாமல் சிறந்த புத்தகத்தைத் தேடி, விமர்சனப் பார்வையுடன் வாசிப்பது அவசியம்.


**நீங்கள் ஒரு படைப்பு குறித்து முதல் வாசிப்பில் சொன்ன கருத்துகளைப் பின்னர் அதே படைப்பை மீள் வாசிப்பு செய்தபோது மறுதலித்த அனுபவம் உண்டா?**

முதல் வாசிப்பு, மீள் வாசிப்பு என்று இல்லை. கருத்தியல்ரீதியில் வளர்ச்சி அடையும்போது எனது கருத்துகள் இயல்பாகவே மாற்றம் அடைகின்றன. எழுபதுகளில் வாசித்தபோது லா.ச.ராமாமிர்தம், மௌனியின் கதைகளுக்கு நிகராகச் சொல்ல எதுவுமில்லை எனக் கருதினேன். அவர்களின் படைப்பு மொழி கட்டமைத்த வசீகரத்துக்குள் மூழ்கி, லஹரி உணர்வில் இருந்தேன். இன்று அப்படிச் சொல்ல முடியாது. ஜானகிராமன், கு.ப.ரா. எழுதிய ஆண் பெண் உறவு பற்றிய கதைகளை முன்னர் கொண்டாடினேன். இன்று அத்தகைய மனநிலை இல்லை. பதின்பருவத்தில் என்னைப் போன்றோரை அறிவுஜீவி சொல்லாடல் மூலம் கவர்ந்த ஜெயகாந்தனின் நாவல்கள் பற்றிய இன்றைய எனது மதிப்பீடுகள் வேறு. புதுமைப்பித்தன் தமிழின் முக்கியமான ஆளுமை எனப் புல்லரித்துப் போயிருந்த எனக்கு இன்று அவருடைய சிறுகதைகளில் பல நவீன வாசிப்பினுக்குத் தாக்குப் பிடிக்காது என்று தோன்றுகிறது. தாஸ்தாயேவ்ஸ்கியின் 'வெண்ணிற இரவுகள்' கதையை எத்தனை முறை வாசித்தாலும், அது புதிதாக உருவாக்கும் உணர்வுகளுக்கு அளவேது? கோணங்கியின் தொடக்ககாலச் சிறுகதைகளை இப்பொழுது வாசித்தாலும் முக்கியமானவை என்று தோன்றுகிறது. நவீன இலக்கியம் சார்ந்த அதீத பிரேமையினால் சங்க இலக்கியம், ஆண்டாளின் படைப்புகள் குறித்துப் புறக்கணிப்பு மனநிலை முன்னர் எனக்கு இருந்தது. தொண்ணூறுகளுக்குப் பின்னர் மரபிலக்கியம் மீதான எனது அக்கறை விரிந்தது. மிகப்புதியதில் தென்படும் மிகப்பழையதின் சாயல் வியப்பைத் தருகிறது. வாசிப்பின் தரத்தினுக்கேற்ப மறுதலிப்பு

நடைபெறாவிடில், வாசிப்பையே சந்தேகப்பட வேண்டும். அந்தவகையில் சரியான திசைவழியில் செல்வதாக நம்புகிறேன்.

**பாண்டியன் நீங்கள் சொல்வது சரிதான். அப்படியென்றால் எழுதப்பட்ட புத்தகம் அப்படியே உள்ளது. வாசக மனம்தான் மாறிக்கொண்டிருக்கிறதெனில், அந்தப் புத்தகம் காலாவதியாகி விட்டது என்று ஆகி விடாதா?**

புத்தகம் மாறவில்லை. வாசிப்புமனம் மாறுவது இயற்கைதான். ஒரு காலத்தில் அருமையானது என்று கொண்டாடப்பட்ட புத்தகம் காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு



மறக்கடிக்கப்படுவது தவிர்க்க இயலாதது. படைப்பாளியே செத்துப்போன பின்னர், அவனது படைப்பு மட்டும் காலங்கடந்து நிலைத்து நிற்க வேண்டுமென எதிர்பார்ப்பது ஒருவகையில் பேராசைதான். அராஜகமும்கூட. எழுத்தாளரின் ஆவி, அவர் எழுதிய புத்தகங்களுடன் உலாவும் என்பது சுவாரசியமான நம்பிக்கை. எந்தவொரு எழுத்தும் எழுதப்படுவதற்கு ஏதோவொரு நோக்கம் உள்ளது. அது நிறைவேறியவுடன், மலர் வாடி உதிர்வதுபோல படைப்பும் செல்வாக்கிழந்து விடுகிறது. என்ன சில புத்தகங்கள் பிரசுரமான சில ஆண்டுகளில், எழுத்தாளர் வாழும் காலத்திலே மறைந்து போகும்போது, நீங்கள் சொல்வதுபோல காலாவதியாகி விட்டது என்றும் சொல்லலாம். காத்திரமான படைப்பு என்றால், ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி' நாவல் போலக் காலத்தை மீறி, மீண்டும் மீண்டும் வாசிக்கப்படும்.

**உங்கள் சக நண்பர்கள் ஏதோ ஒருவகையில் புனைவிலக்கியவாதியாக இருக்கும்போது நீங்கள் மட்டும் விமர்சனத்துறையைத் தேர்ந்தெடுத்ததற்குச் சிறப்பான காரணங்கள் உள்ளனவா?**

இலக்கியப் படைப்புகளைத் தீவிரமாக வாசிக்கும்போது கவிதை எழுதுவதற்கான மனநிலை ஒருவருக்குத் தானாக உருவாகும். நாலு வரி கவிதை எழுதாத ஒருத்தர் படைப்பாளியாக இருந்தால் அதிசயம். என் பதின் பருவத்தில் வாசித்த புத்தகங்கள் ஏதாவது எழுது என என்னைத் தூண்டிக்கொண்டிருந்தன. சில கவிதைகள், சிறுகதைகள் எழுதிவிட்டு, எழுத்துலகில் ஏதோ சாதிக்கப் போவதாக நம்பினேன். எனது தலை காற்றில் மிதந்தது. இப்படியான சூழலில் டால்ஸ்டாய், தாஸ்தாயேவ்ஸ்கி, எமிலி ஜோலா, மாப்பசான், செல்மா லாகர்லெவ், பால்சாக், கார்க்கி, ஆல்பர்ட் காமு என உலகத்தின் மாஸ்டர்களின் எழுத்துகளை வாசிக்கத் தொடங்கினேன். 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே ரஷிய இலக்கிய மேதைகள் லெர்மன்தேவ், புஷ்கின், செகாவ் என்ன மாதிரி எழுதியிருக்கிறார்கள் எனப் பிரமிப்பு அடைந்தேன். ஜாக் லண்டனின் ஒரு சிறுகதையைத் தாண்டி ஒருபோதும் என்னால் எழுத முடியாது என்ற உண்மையைக் கண்டறிந்தேன். அதே காலகட்டத்தில் மார்க்சிய ஆசான்களான மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின். மாவோ எழுதிய அரசியல் புத்தகங்களை ஆர்வத்துடன் வாசித்தேன். சி.பி.எம். கட்சியின் அமைப்பான சோசலிஸ்ட் வாலிபர் முன்னணியில் உறுப்பினராகி அமைப்பு வேலைகளில் பங்கெடுத்தேன். அந்த அமைப்பிலிருந்து விலகி, மக்கள் கலை இலக்கியக் கழகத்தில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றினேன். மதுரையில் மு.ராமசாமி, மணா, லயனல் போன்றோரும் அதே அமைப்பில் இருந்தனர். புரட்சிக்கான கனவுடன் ஆயுதம் தாங்கிய வர்க்கப் போராட்டம் விரைவில் வந்து விடும் என நம்பினோம். எழுத்தாளன், பல்லும் திருகாணியுமாகச் செயல்பட முடியும் என நம்பினேன். என்றாலும், அமைப்பிலிருந்து தாக்குப்பிடிக்க முடியாமல் வெளியேறும் சூழல் ஏற்பட்டது. இடதுசாரி அரசியல், தத்துவம், கலை, இலக்கியம் ஏற்படுத்திய தாக்கத்தினால் எந்தவொரு விஷயத்தையும் அலசி ஆராய்கின்றவனாக மாறிப்போனேன். அப்புறம் உன்னத இலக்கியம் பற்றிய எனது கனவு கலைந்து போனது. உலகத்து இலக்கிய மேதைகளின் மேன்மையான படைப்புகள் ஒருபுறம், இடதுசாரி

அரசியல் மனநிலை இன்னொருபுறம் எனத் தவித்த என்னால் ஒருபோதும் படைப்பாளியாக முடியாது எனத் தோன்றியது. எனது சக நண்பர்களுக்குப் படைப்பு மனம் வாய்த்திருப்பது பெரிய விஷயம் அல்லவா? அப்புறம் நான் விமர்சனத்துறையைத் தேர்ந்தெடுத்ததுகூட தற்செயலானது. எனது 36வது வயதில் விமர்சனம் எழுதத் தொடங்கியது நண்பர்கள் ராஜமார்த்தாண்டன், காலச்சுவடு கண்ணன் தந்த நெருக்கடிகளின் விளைவு என்று சொல்லலாம். படைப்பாக்கத்தில் தோற்றுப்போன படைப்பாளி விமர்சகராக மாறுவார் என்பது ஓரளவு சரி.

**அப்படியென்றால் ஒரு சிறுகதைத் தொகுப்பு போடுமளவு உங்களால் சிறுகதைகள் எழுத முடிந்தது எப்படி? அதை கலகமாகப் பார்க்கலாமா?**

கல்லூரி மாணவனாக இருந்தபோது, ஆண்டுமலருக்குச் சிறுகதை எழுதியபோதும், 1981இல் செம்மலர் பத்திரிகையில் எனது சிறுகதை பிரசுரமானபோதும் எனக்கு லட்சியம் இருந்தது. செகாவ், ஜாக் லண்டன் எழுதிய சிறுகதைகளை வாசித்தபோது, சிறுகதை என்பது ரொம்ப சீரியஸான விஷயம் எனப் புரிந்தது. எனக்குள் இருக்கும் கேலியும், தெனாவட்டும் எதையும் பகடியாகப் பார்த்தது. அந்த மனநிலை எதிலும் மையம்கொள்ளச் செய்யாமல் என்னை வேறுதளத்திற்கு இட்டுச் சென்றது. மற்றபடி அவ்வப்போது சிறுகதைகள் எழுதியது, சூழலின் வெக்கை தாங்காமல்தான். இப்பக்கூட நாவல் எழுது என ஆழ்மனம் நச்சரிக்கிறது.

**ம.க.இ.க. கலை இலக்கியம் பேசும் பண்பாட்டு அமைப்பு. அங்கு நீங்கள் தீவிரமாக இயங்கியதை அறிய முடிகிறது. படைப்பாளியாவதற்கு அமைப்பு தடையாகி விட்டதா?**

ஆயுதம் தாங்கிய எழுச்சியின் மூலம் புதிய ஜனநாயகப் புரட்சியை நோக்கமாகக்கொண்ட மார்க்சிய லெனினிய கட்சியின் வெகுஜன அமைப்பான ம.க.இ.க.விற்கெனத் தனித்த அரசியல் நோக்கம் உள்ளது. எழுபதுகளில் இந்தியாவெங்கும் இளைஞர்கள், மாணவர்களிடம் நக்சலைட் இயக்கம் தீவிரமாகப் பரவிக்கொண்டிருந்தது. அப்பொழுது மக்களுக்கான கலை இலக்கியம் எனப் பிரச்சாரம் வலுவடைந்தபோது, நானும் ம.க.இ.க. அமைப்பில் போய்ச் சேர்ந்தேன். அமைப்பின் உடனடி வேலைத்திட்டத்திற்காகச் செயல்படுவதற்கும், படைப்புகள் படைப்பது பற்றிய மனநிலைக்கும் இடையிலான முரணைச் சரியாக எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. எனது குட்டிப்பூர்ஷுவா மனநிலை, தீவிரமான இலக்கிய வாசிப்பு காரணமாக அமைப்பிலிருந்து வெளியேற நேர்ந்தது. அரசியலையும் இலக்கியத்தையும் சரியாகக் கையாள முடியாதது, ஒருவகையில் பலவீனம்தான்.

**எண்பதுகளில் மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட் என்று ஒருவர் தன்னை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள மாட்டார். இன்று வெளிப்படையாகச் சொல்ல முடிகிறது. மா–லெ சித்தாந்தம் நீர்த்துப் போய்விட்டதா?**

ஆயுதம் தாங்கிய புரட்சியின்மீது நம்பிக்கைகொண்டுள்ள மார்க்சிய லெனினிய அமைப்புகள் எப்பொழுதும் வெளிப்படையாக இயங்க முடியாது. அவற்றின் வெகுஜன அமைப்புகளில் செயல்படுகிறவர்களில் சிலர் வெளிப்படையாக உள்ளனர். நக்சலைட் கருத்தியலுக்குச் சார்பாகப் பேசுவது வேறு, நக்சலைட்டாகச் செயல்படுவது வேறு. எண்பதுகளுடன் ஒப்பிடும்போது, இன்று மா-லெ. அமைப்புகள் கருத்தியல்ரீதியில் பரவலாகி உள்ளன. இத்தகைய அமைப்புகளின் வெகுஜன அமைப்பில் சிறிது காலம் செயல்பட்டவர்கள், அதிலிருந்து வெளியேறி, முன்னர் தான் ஒரு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் என்று சொல்கிறார்கள். அவர்களால் அரசு இயந்திரத்திற்கு ஒரு பிரச்சினையும் இல்லை. எனவே விட்டு வைத்திருக்கிறது. 1981இல் திருப்பத்தூர் பகுதியில் 22 தோழர்களை நக்சலைட் என்பதற்காகச் சுட்டுக் கொன்ற தேவாரம் தலைமையிலான போலீஸின் கொடூரம் மீண்டும் திரும்பும் என்பது தோழர்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டில் மாவோயிஸ்ட் மையம் அமைப்பு அறிமுகமாகும் நிலையில் இருக்கும்போதே, நக்சலைட்களைத் தேடி க்யூ பிராஞ்ச் போலீசார், அவ்வப்போது மலைகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபடுவது தொலைக்காட்சியில் காட்டப்படுகிறது. பீதியைக் கிளப்புவதன்மூலம் மக்களைப் பயத்திற்குள்ளாக்குவது தொடர்ந்து நடைபெறுகிறது. தமிழகத்தில் எப்பொழுதும் போலீஸ் ராஜ்ஜியம்தான். மார்க்சிய லெனினிய தத்துவத்தை நடைமுறைப்படுத்த முயலும் கட்சி இருக்கும்வரை, அது நீர்த்துப்போகாது.

**உன்னத இலக்கியம் என ஒன்று இருக்க முடியுமா? அப்படியெனில் அது எப்படி?**

சிறுபத்திரிகை சூழலில் எண்பதுகள் வரைக்கும் உன்னத இலக்கியம் என்ற கருத்தியல் வலுவாக இருந்தது. இலக்கியத்தில் துளிகூட பிரச்சாரம் கூடவே கூடாது என்று நம்பியவர்கள் கணிசமாக இருந்தனர். படைப்பு என்பது பளிங்கு போல இருக்க வேண்டுமெனக் கருதியவர்களில் நானும்

ஒருவன். ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைப் பதிவாக்கிய படைப்புகளைப் பிரச்சார இலக்கியம் என்று சொல்லி, சிவப்புக் குறித்த அலர்ஜியினால் அவதிப்பட்டவர்களால் உன்னதம் என்ற சொல் மாற்றாக வைக்கப்பட்டது. குறிப்பாக ஐம்பதுகளில் எழுத்து பத்திரிகை உருவாக்கிய உன்னதம், கலையில் தூய்மை போன்ற கருத்தியலின் பின்புலத்தில் திராவிட இயக்கத்திற்கு எதிரான பார்ப்பனிய மேட்டிமைவாதமும், சநாதனமும் பொதிந்திருந்தன. தூய்மையான, பளிங்கு போல படைப்புகளை அணுகியவர்கள் இலக்கியத்திற்கு அதீத முக்கியத்துவம் தந்தனர். புனிதப் பொருளாக இலக்கியத்தை நம்பியவர்களிடம் போய், மௌனி கதைகளில் நான்குதான் தேறும்; புதுமைப்பித்தன் எழுதியவற்றில் இருபது கதைகள் நிலைத்து நிற்கும் எனச் சொன்னால், ஆத்திரத்துடன் சிலிர்த்து எழுந்து விடுவார்கள். உன்னதம் என்பது சார்பு நிலையிலானது. சிலரைத் தொடர்ந்து பீடத்தில் ஏற்றி வைப்பதற்கு உன்னத இலக்கியம் என்ற கோட்பாடு பயன்பட்டது. இன்று பின் நவீனத்துவ அணுகுமுறை பீடங்களைத் தகர்த்துவிட்டது.

**பீடங்கள் தகர்த்துவிட்டதாகச் சொல்கிறீர்கள். பாரதி, புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி எனத் தீவிரமாகப் பீடங்களை உபாசனை செய்வது தொடர்கிறதே...**

பீடங்கள் காலத்தினால் உருவாக்கப்படுவது. சமகாலச் சமய, அரசியல், பொருளாதார நிலைமைகளினால் பீடம் புதிதுபுதிதாக உருவாகும். சிறிது நாட்களுக்குப் பின்னர் பீடங்களைத் தகர்க்கிற சூழல், தானாகவே ஏற்படும். மீண்டும் புதிய பீடம் உபாசனைக்குள்ளாகும். பீட வழிபாட்டிற்கு அப்பால் மேன்மையான படைப்புகள் வாசகரால் அடையாளங் கண்டறியப்படும். திரை போட்டு மறைத்தால் என்ன? தெரியாமல் போய் விடுமா? இலக்கியத்தின் முன்னோடிகளை அடையாளங்கண்டு அவர்களுடைய படைப்புகளை மீண்டும் வாசிப்பது உலகமெங்கும் நடைபெறுகிறது. ஹோமர், அரிஸ்டாட்டில் பற்றிச் சொல்லாமல், மேலை இலக்கிய வாசிப்புத் தொடங்காது. ஔவை, கபிலர், இளங்கோ, காரைக்காலம்மையார், ஆண்டாள், கம்பர், வள்ளலார், பாரதி, பாரதிதாசன் எனத் தொடரும் தமிழ்ப் பாரம்பரியத்தில் நவீன கவிஞனால் தன்னை இணைத்துக்கொள்ள முடியும். சுந்தர ராமசாமியுடன் நெருங்கிய தொடர்புடையவன் என்ற முறையில் என்னால் சொல்ல முடியும். அவர் பீட வழிபாட்டிற்கு எதிரானவர். இன்றைய காலகட்டத்தில் நவீன இலக்கியத்தின் பீடமாக யாரையாவது கட்டமைக்க முயலுவது, ஒருவகையில் அபத்தம்.

**உங்களுடைய சிறுகதைத் தொகுதி ஒன்று வெளியாகியுள்ளது. பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்க கவிதைகள் எழுதியுள்ளீர்கள். உங்களுக்குப் படைப்பாளி என அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது குறித்த வருத்தம் உள்ளதா?**

கவிதை எழுதுவது வேறு, தன்னைக் கவிஞராக உணர்வது வேறு. எனக்கு எனது எல்லைகள் தெரியும். இந்தப் பாதை எங்கே போகிறது என்பது தெரிந்தபிறகு வேறு எதுவும் செய்ய முடியாது. விமர்சனம் என்பது மறுபடைப்பு எனச் சொல்வது ஏற்புடையதுதானா? யோசிக்க வேண்டும். நான் ஒரு படைப்பாளி எனக் கொடியைப் பறக்கவிடும் முயற்சி எனக்கு இல்லை. தனது படைப்புகளுக்கு வக்காலத்து வாங்கிடவும், புரமோட் பண்ணவும் எனது நண்பர்கள் படுகின்ற பாடுகள் எனக்குத் தெரியும். அந்தப் பட்டியலில் எனது பெயரும் இடம் பெற வேண்டியது இல்லை.

**பாண்டியன் உங்களுடைய நண்பர்களில் பலரும் தீவிரமாக இலக்கியத்தளத்தில் இயங்குகின்றனர். சிறுபத்திரிகை மரபில் சண்டைகளும் சச்சரவுகளும் யதார்த்தம். குழு மனப்பான்மை தவிர்க்க முடியாதது. உங்களுடன் பலரும் அன்புடனும் இணக்கத்துடனும் பழகுகின்றனரே?**

இலக்கியத்தினால் உருவான நட்பு அற்புதமானது. பொதுவாக இலக்கியத்தில் சாதனையாளர்கள் எல்லோரும் எளிமையானவர்கள்தான். அன்பானவர்களும்கூட. போலியாகச் செயல்படுகிறவர்கள் நாளடைவில் காணாமல் போய் விடுவார்கள். படைப்பாளர் ஒருவரை மூன்று ஆண்டுகள் கழித்துப் பார்த்தாலும், நேற்று மாலையில் சந்தித்துப் பிரிந்தது போன்று பேச்சு தொடங்கும். உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரிதல் புலவர் தொழில். மதிப்பீடு சார்ந்து உருவாகும் பேச்சுகளில் முரண்பாடு தவிர்க்க முடியாதது. எல்லாம் கருத்தியல் மோதுதல்தான். பிரபஞ்சன், நகுலன், தேவதச்சன், கந்தர்வன், கோணங்கி ஜெயமோகன், சாருநிவேதிதா, நாஞ்சில்நாடன், மனுஷ்யபுத்திரன், எஸ்.ராமகிருஷ்ணன், இராஜமார்த்தாண்டன், வெ.இறையன்பு, யவனிகா ஸ்ரீராம், சுதீர் செந்தில், சரவணன் சந்திரன் போன்ற இலக்கிய ஆளுமைகளுடன் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். அவர்களுடன் கருத்து முரண்பாடுகள் நிச்சயம் ஏற்படும். ஆனால் பேசி முடித்த பின்னர் மனம் ஆற்றலாக உணரும். இப்ப மதுவைக் குப்பிக்குப்பியாகக் காலி செய்துவிட்டு, தான் சொல்வது மட்டும்தான் உண்மை எனத் தீர்க்கதரிசிகளைப் போல ஓங்கிக் கத்துகிறவர்களுக்குக் காதுகள் இல்லை. இலக்கியம்

அற்ற வெற்றுச் சவடால்களினால் என்ன பயன்? எங்கோ இருக்கும் வன்மத்தைக் கொட்டும் இடமாக இலக்கியப் பேச்சுகளை மாற்றுவது அருவருப்பானது. ஒவ்வொரு ஆண்டும் வெளியாகும் முக்கியமான புத்தகங்களை வாசிக்காமல், என்ன வேண்டுமானாலும் பேசுவேன்... இதுதாண்டா இலக்கியம் என கச்சை கட்டுகிறவர்கள், ஒருவகையில் விஷக்கிருமிகள்.

**இந்தப் போக்குக்கு இலக்கியத்தில் குடிக் கலாச்சாரம் பெருகிவிட்டது காரணமாக இருக்கலாம் எனக் கருதுகிறீர்களா?**

அப்படிச் சொல்ல முடியாது. புதிய படைப்புகளை வாசிக்கும் பழக்கம் குறைந்து கொண்டிருக்கிறது. இதனால் சுயமாக உருவாகும் கருத்தியல் போக்குகள், வறண்டுவிட்டன. யாராவது பேச்சில் சொல்லும் ஒற்றை வரி அபிப்ராயங்களைச் சொந்தக் கருத்துப் போலப் பிறரிடம் சொல்வது அதிகரித்துவிட்டது. தீவிரமான இலக்கிய உலகில் மொத்தம் 5,000 பேர் இருந்தாலே அதிகம். அரசாங்கம் நடத்தும் 6,500 டாஸ்மாக் கடைகளில் தினமும் மது அருந்தும் தமிழர்களின் எண்ணிக்கையுடன், தமிழ் இலக்கியவாதிகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டால் ஒன்றுமில்லை என்று சொல்லலாம். ஒருசில படைப்பாளிகள் மதுவின் துணையுடன் தங்களுடைய சொந்த வாழ்க்கையின் அவலங்களையும் நெருக்கடிகளையும் மறப்பதற்காகச் சலம்புகின்றனர். நான்தான் மகாகவி எனப் போதையில் ஆவேசமாக முழங்குகிறவர்கள் பரிதாபமானவர்கள். எல்லோருடனும் வம்பிழுத்துத் தான் பெரிய இலக்கிய ஆகிருதி என நிரூபிக்க முயலுகிறவரிடம் பேசுவதற்கு எதுவுமில்லை. எல்லாம் கொஞ்ச காலம்தான். அப்புறம் அப்படிப்பட்டவர் தனிமைப்பட்டு விடுவார். அவ்வளவுதான்.

**சிறுபத்திரிகை மரபில் தன்னை அடையாளப் படுத்திக்கொள்ளும் படைப்பாளர்கள் சிலர் பொருளாதாரத்தில் கவனம் செலுத்துவதில்லை. அவர்களுடைய குடும்பம் பாதிப்படைகிறது. இது என்னவகையான மனநிலை?**

நாள் முழுக்கக் கடுமையான உடலுழைப்பில் ஈடுபடுகின்றவர்கள்கூட மாலையில் டாஸ்மாக் கடையில் சம்பளத்தைச் செலவழித்துவிட்டு, வெறுங்கையுடன் வீட்டிற்குப் போகின்றனர். குழந்தைகள், மனைவி மீது அக்கறையற்ற ஆண்கள், இன்றைக்குத் தமிழகத்தில் பெருகிக் கொண்டிருக்கின்றனர். இதில் சிறுபத்திரிகைக்காரர்கள் விதிவிலக்கு ஆக முடியாது. மேன்மையான இலக்கியப் படைப்பு, மனித மனதைச் செழுமைப்படுத்தும் என்பது பொதுவான நம்பிக்கையா? யோசிக்க வேண்டும்.

**படைப்பாளிகளைச் சமூகம் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

படைப்பாளர், தங்கக்கோபுரத்தில் வாழ்கின்றவர் என நினைக்கிறீர்களா? படைப்பாளருக்குக் கைகள் இருக்கும்போது அவரை ஏன் சமூகம் பாதுகாக்க வேண்டும்? புதிய சமூகம் படைத்திட அக்கறையுடன் படைக்கின்ற படைப்பாளர்கள், சமூகப் பாதுகாப்பினை எதிர்பார்ப்பதில்லை. பாரதிதாசன் பாடியதுபோல கெட்ட போரிடும் உலகினை வேரோடு சாய்த்துப் புதியதோர் உலகம் செய்கின்ற படைப்பாளர், மிகப்பெரிய ஆளுமை அல்லவா?

**பாண்டியன், உங்களுடைய பதில் ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் படைப்பாளர்களுடன் அன்பாக இருப்பவர்; உதவி செய்பவர். ஏன் ஒரு படைப்பாளியைச் சமூகம் பார்த்துக்கொள்ளக்கூடாது? வரலாற்றில் எழுத்தாளரைப் போற்றிய சம்பவங்கள் நிரம்ப உள்ளனவே?**


படைப்பாளிக்கு எனத் தனியே கிரீடம் எதுவுமில்லை. எந்தவொரு படைப்பினுக்கும் ஒளி வட்டம் எதுவுமில்லை. இந்த யுகத்தின் மாபெரும் படைப்பு எனத் தனது படைப்பினுக்குப் படைப்பாளி வக்காலத்து வாங்குவது அருவருப்பானது. இலக்கியத்திற்கு என ஓர் எல்லை அல்லது வரையறை இருக்கிறது. சாகாவரம் பெற்ற படைப்புபோல நிமிர்ந்து நிற்கும் கங்கைகொண்ட சோழபுரம் கோவிலைக் கட்டிய சிற்பிகளுடன் ஒப்பிடும்போது, நமது எழுத்தாளர்களின் நிலையைப் புரிந்துகொள்ள முடியும். சரி, அதை விடுங்கள். ஒரு மனித உயிரைக் காப்பாற்றுவதற்காக எட்டு மணி நேரம் தொடர்ந்து அறுவைச்சிகிச்சை செய்யும் மருத்துவர், மேன்மையானவர் இல்லையா? அவரைப் போற்ற வேண்டாமா?நாம் வாழ்கிற சமூகத்தின் செழுமைக்காகப் பல்வேறு தரப்பினரும் இணைந்து உழைக்க வேண்டியுள்ளது. ஏன் இருண்மையான கவிதைகள் மட்டும் எழுதுகிற நொய்மையான கவிஞன், சமூக மாற்றத்திற்காக என்ன செய்தான் எனத் திரும்பிக் கேட்க முடியாதா? சமூகத்தைவிட்டு விலகி, தனித்த உலகில் தன்னையும் ஒதுக்கிக்கிட்டு தான் ஒரு மாபெரும் படைப்பாளி என claim செய்கிற படைப்பாளி எந்தவகையில் ஒஸ்தி? கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோ, எழுத்தாளர் மார்க்குயூஸுக்குத் தந்த மரியாதை, சாதாரணமானது அல்ல. மாபெரும் சபைதனில் நடக்கும்போது சிறந்த எழுத்தாளனுக்கு மாலைகள், தானாக நிச்சயம் கழுத்தில் விழும். அது போதாதா, செந்தில்.

●

# நெஸ்லிங் புதிய வெளியீடுகள்




₹ 65.00




₹ 45.00




₹ 70.00





₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00





₹ 70.00







₹ 100/-
(இரண்டு புத்தகங்களும் சேர்த்து)




₹ 70.00

**தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்**
**சிறார்களுக்கான நூல்களை வெளியிடும் சிறந்ததொரு புத்தக நிறுவனம்**

## நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050
☎: 044- 26251968, 26258410, 48601884,
Email: nestlingbooks@gmail.com | www.ncbhpublisher.in



கட்டுரை

# தமிழக மெய்யியல்

## கி.பி.1880-க்கு முன்னர்

முப்பால்மணி

*1800* காலப்பகுதியில் இருந்து தொடங்கலாம். சைவத் துறையில் அப்போது கடந்த நூற்றாண்டுகளின் பரிமாணங்களே நிலவின. பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர் பற்றிய போற்றி உணர்வுகளும், தத்துவராயர், சிவஞான முனிவர் உணர்ந்த மெய்யுணர்வுகளும் பயிற்சியில் விளங்கின. வீரசைவமும், லகுலீச பாசுபதமும் குறிப்பிட்ட இடங்களில் கைக்கொள்ளப்பட்டு நிலவின. 13-ஆம் நூற்றாண்டு மெய்கண்டாரது சித்தாந்த நெறியும், 16-ஆம் நூற்றாண்டுத் தத்துவராயரது வேதாந்த நெறியும் சைவத் துறையில் வேர் ஊன்றி நிலவின. சித்தாந்த நெறியானது 18-ஆம் மாதவ சிவஞான முனிவரால் வீறார்ந்த வளம் பெற்றது. அவர் வேதம் மற்றும் ஆகமங்கள் வழி நின்று உபநிடதங்கள், பேருரைகளை உடன் கொண்டு மெய்கண்டாரது சிவஞான போதத்திற்கு மாபாடியம் கண்டு வளப்படுத்தினார். மேலும், நான்கு வேதங்கள், ரௌரவம், மிருகேந்திர ஆகமங்கள் மற்றும் பவுட்கரம், மதங்கம் ஆகமங்களையும், சுபாலம், சாந்தோக்கியம், சுவேதாச்சுவதரம் உபநிடதங்களையும், நீலகண்ட சிவாச்சாரியார், அப்பைய தீட்சிதர், சிவாக்கிர யோகிகள் ஆகியோரது பேருரைகளையும் போற்றிக் கொண்டார். அந்த ஞானத்தில் பதி, பசு, பாசம் முப்பொருளுக்கு விளக்கம் கண்டார். ஆனால் அப்போது வேதாந்த நெறியினுக்கு இது போன்று விளக்க நூல்கள் எழுதவில்லை. வைராக்கிய நூல்களே பயிற்சியில் நிலவின. இந்த நெறி பரமாத்துவிதம் எனவும் தத்துவராயரால் குறிப்பிடப்பட்டது. வேதம், ஆகமம், உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியனவற்றை இது பிரமாணங்களாகக் கொண்டு நின்றது. பிரம்ம சூத்திரத்தை அனுசரிப்பது இல்லை. பொதுவாகவே, சைவத் துறைகள் பிரம்ம சூத்திரத்தை அனுசரிப்பது இல்லை. மெய்கண்டார் மற்றும் தத்துவராயர் நெறிகள் ஒரு தெய்வக் கோட்பாட்டை விளக்கின. உலகு, தனி ஆத்மாக்களை உண்மை என ஏற்று

இருந்தன. மெய்கண்டார் நெறியானது மாயை என்ற ஒன்றைத் தனிப் பொருளாக ஏற்று இருந்தது. தத்துவராயர் நெறியானது மாயை என்ற ஒன்றை எந்த வகையிலும் ஏற்கவில்லை. மெய்கண்டார் சித்தாந்தமானது ஒவ்வொரு உடலிலும் ஆன்மா உண்டு எனப் பல ஆத்மாக்களை எடுத்துக் காட்டியது. தத்துவராயர் வேதாந்தமானது ஏகமான பிரம்மம் ஒவ்வொரு உடலினுள்ளும் அநுப்பிரவேசித்துத் தனித் தனி ஆத்மாக்களாக இருக்கை கொள்ளுகிறது என எடுத்துக் காட்டியது. இந்த நெறிக்காகத் தத்துவராயர் பெருந்திரட்டு, குறுந்திரட்டு என நூல்களைத் தொகுத்தார். சூதசம்ஹிதையையும், அதன் ஒரு பகுதியாகிய பிரம்மகீதையையும் சேர்த்து மொழி பெயர்த்தார். மேலும், வீரை. ஆளவந்தார் எழுதிய வமல ராமாயணம் என்ற ஞான வாசிட்டம் வைராக்கிய நூலாகப் போற்றப்பட்டது. இவை எல்லாம் சைவத் துறையுள் வேதாந்த நூல்களாகக் கொள்ளப் பட்டன. இந்த இரண்டு நெறிகளும் சங்கர அத்வைதத்தை மாயா வாதம் என மதிப்பிட்டன. மேலும், பஞ்சராத்திரம், பௌத்தம், சமணம், உலகாயதம் ஆகியனவற்றையும் இந்த நெறிகள் நிராகரித்தன. அப்போது இங்கு ஆட்சியில் இருந்த இஸ்லாத்தையும், ஆட்சிக்கு வந்து கொண்டு இருந்த கிறித்தவத்தையும் இவை பேசவில்லை. வீரசைவத்தை அனுசரித்த சிவப்பிரகாசர் இயேசு சமயத்தை நிராகரணம் செய்தார். கி. பி. 1839-1898 இல் வாழ்ந்த மகான் வண்ணச்சரபம் முருகதாச சுவாமிகள் தமது ஆங்கிலியரந்தாதி நூலினில் ஆங்கிலேயர் சமயத்தைப் பொய் மதம், வாதம் எனக் கண்டித்தார் (50).

19-ஆம் நூற்றாண்டில் சைவத்தின் தொடர்ச்சியை அறிவது என்ற வகையினில், அதன் 18-ஆம் நூற்றாண்டுச் சிறப்பு அமைதியை ஏற்புடையது ஆகும். அதன் பொருட்டுச் சிவஞான முனிவரது மாபாடியத்துள் அடிக்கோடு இடத்தக்கச் சிறப்பு அமைதிகளைக் காண்பது உகந்தது ஆகும். 18-ஆம் நூற்றாண்டில் அவர் வாழ்ந்த போது தத்துவத் துறையினில் பிரம்மம் முதல் மண் ஈராகக் கருதப் பட்ட முப்பத்து ஆறு பதார்த்தங்கள் பேசப்படும் போதே பொருள், காலம், இடம், நிகழ்ச்சி, இயக்கம் என்ற சிந்தனைமுறை முன்னிலைக்கு வந்து கொண்டு இருந்தது. இதே சமயம் ஐரோப்பிய அறிவியல் வளர்ச்சிப் பின்புலத்தினில் தனது சமய சிந்தனையைத் தக அமைத்துக் கொண்ட லூத்ரன் சபை குருமார்கள் ஜேர்மானிய ஹாலே நகரத்து குருத்துப் பள்ளியில் திருச்சபைப் பயிற்சி பெற்று தரங்கம்பாடி வந்து இறங்கி, சென்னை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் நகரங்களில் சமயப் பணி புரிந்தனர். கத்தோலிக்கச் சபையினர் கோவா நகரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு மதுரை, திருநெல்வேலி, தெற்குக்கரை பகுதிகளில் பணி புரிந்தனர். அர்ச். சேவியர், ஆண்ட்ரிக் பிரிட்டோ , இராபர்ட் டி நோபிலி பணிக்கு பின்னர் சீகன்பால்கு, புளுச்சோ, சூல்ட்ஸ், பெப்ரீசியஸ், வால்ட் சுவார்ச் மற்றும் கான்ஸ்டன்டைன் பெஸ்கி ஆகியோர் அந்தச் சபை பணிகளை மேற்கொண்டனர். உறுதிப் பொறுப்பான நிறுவனம், செயல் கண்டிப்பு, பணி புரியும் களம் பற்றிய நுட்பமான மதிப்பீடு அவர்கள் இடையே உலவியது. அந்த இரண்டு சபைமார்கள் தமக்குள் விரோதம் கொண்டு வாழ்ந்தனர். போட்டி போட்டுக் கொண்டனர். ஆனாலும் தமது பொறுப்புகளில் சுயநினைவுடனேயே இயங்கினர். காசி முதல் இராமேஸ்வரம் வரையான சிந்து ராஜ்ஜியத்தினில் அடங்கிய மலபார் எனப்பட்ட இந்தத் தேன் தமிழ் பகுதியில் வாழும் மக்களிடையே ஊழியம் புரிந்தனர். 1715-1726 காலப் பகுதியில் தமது விருமறையான பைபிளைத் தமிழில் தந்தனர். 1726-இல் விக்கிரகாராதனை எதிர்ப்பை வெளியிட்டனர். இது ஆவிகளை வணங்குதல், தனித் தனிக் கடவுளர்களை நம்புதல், முன்னோரை வழிபடல், உலகியல் பொருள்களைத் தொழுதல் மற்றும் பலி, படையல் இட்டு வரம் வேண்டுதல் ஆகியனவற்றை எதிர்ப்பதை உட்கொண்டது ஆகும். மேலும், உலகப் படைப்பு, மனிதப் படைப்பு, ஒரே தெய்வம் பற்றியும், ஆத்ம சுதந்தரம், சித்தத்தின் சுயாதீனம் ஆகியனவற்றை வலியுறுத்தியும், மறுபிறப்பு, வினைத் தொடர்ச்சிகளை நிராகரித்தனர். பிரபஞ்சம், உலகம், இயற்கைப் பொருள்கள் ஆகியனவற்றினில் உட்கலந்து நிலவாது, இவற்றிற்கு அப்பால் தனியாக உள்ள அருவமான கடவுளை உறுதிப்படுத்தியும் தமது உபதேசங்களை போதித்தனர். அப்போது ஐரோப்பாவில் அறியப்பட்டு இருந்த அறிவியல் கண்டுபிடிப்புகளையும் தெரிந்து நடமாடினர். இந்த வரலாற்றுப் பகைப்புலனில் சிவஞான முனிவரைக் காண்பது உசிதமாகும். இவர் காலத்தை ஒன்று எனக் கொண்டு இருந்தார். மற்றபடி, ஆண்டு, அயனம், மாதம், நாள், நாழிகை, சூநாடி எனக் கொள்ளுவது செயற்கை. அதாவது நமது வசதிக்காக நாம் ஏற்படுத்திக் கொண்டது என்றார் (சூ.2. அதி.2). நீருக்குள் இருந்தும் உயிர்களுக்கு நீரானது இடம் அளிக்கின்றது. ஆதலால் நீருக்குள் இடம் உண்டு என்றார் (சூ.8, அதி.2). விடயமானது எது என்றால் எந்த உணர்வு நிகழும்போது எது விளங்குகின்றதோ அது விடயம். விளங்குதல் விடயத்தின் உரிமை (சூ.2 அதி.2). அதாவது புறநிலையில் திகழும் விடயமானது உணர்வினில்

விளக்கம் கொள்ளுகின்றது. அஃது அதனது உரிமை என்ற உலை நூதனமானது. மேலும், புனர் உற்பவத்தினை விளக்கும் போது "பிரபஞ்சம் அநாதியாகலின், ஆம்முதற்கோடி நம்மனோரான் அறியவாராமையின்'' என்று கூறி, முதற்கோடி என உணர்த்த விழையும் கருத்தியலானது, பிரகிருதி, அசுத்த மாயை என்ற தத்துவ விவரிப்புக்குள் அடங்காதது. வரலாற்றுப் பூர்வமான தொடக்கத்தை அறிய முயல்வது ஆகும். அப்போது தமிழகத்தில் அஃது இயலவில்லை . ஏனெனில், அவர் சூரிய மையத்தை அறியாத நிலையில், பூமி மையத்தை நம்பியபடிப் பிரபஞ்சத் தோற்றத்திற்கு விளக்கம் கொண்டு நின்றார். அதோடு, நவகோள்களும் அந்தரத்தில் இயங்குவதாகம் அறிந்து விளக்கினார். ஆனால் கிரகண விவரங்கள் அறிந்தாரில்லை (சூ,2 அதி.3, சூ.6. அதி.3). சுட்டி அறியப்படும் உலகு என்பது சைவமரபு காணப்படும் உலகு என்றும் இவர் குறித்தார் (சூத்.1.உரை). இது visible world என்ற ஐரோப்பியா மற்றும் விவிலிய வழக்குக்கு இணையானது. இதற்கு இது பொருள் என்று இயலுலகப் பதார்த்தங்கள் உள்ளன என்ற கருத்தானது, வஸ்துக்கள் கண்டிப்பு என்ற தன்மையை உடையன என்ற கிறித்தவ உரையோடு ஒப்பமைதி கொண்டது. வினை பற்றிய விளக்கத்தில் "வினைகள் சடமாகலின் சென்று அணைய மாட்டாது. ஆன்மாக்கள் சேதனமாகலின் அவைகளே வினைப் பயன்களை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரும். இதற்கு ஒரு முதல்வன் வேண்டா'' என்ற ஒரு தடை ஐயத்தைச் சுட்டிக் காட்டினார் (சூ.2 அதி.2). இது கிறித்தவக் கருத்திற்கு இணையானது. ஆத்மாக்கள் பாப புண்ணியங்களைப் பகுத்து அறியும் சுதந்தரம் உடையன என்பது திருச்சபையினர் கருத்தியல் (சத்திய வேத பரிட்சை.112). சிவஞான முனிவர் உரைக்கும் அறிந்தெடுத்தலும், கிறித்தவர் சொல்லும் மனச் சுதந்தரமும் ஒரே பொருள் கொண்டவை. இவை சித்தத்தின் பகுத்தறிவு, சுயாதீனம் ஆகியனவற்றோடு ஒப்புடையவையும் கூட. ஆத்மா சுதந்தரம் அற்றது என்பது சைவமரபு. அதோடு அறிந்து எடுத்து நுகரும் என்ற கருத்தைச் சுட்டிக் காட்டி நிராகரிப்பது சமகாலத் தன்மையது ஆகும். சரியையாளர் நுண்ணுணர்வு அற்றவர். உருவ மேனியாகிய தூலவடிவத்தைப் பொருள் எனக் கொண்டு வழிபடுபவர் (சூ.8. அதி.1). நுண்ணுணர்வு என்பது தூலவடிவைக் கொண்டு சூக்கும உட்பொருளை உணரும் தன்மையாகும். பகுத்தறிவு அன்று. ஆனாலும் அப்படி வழிபடுவது சிவஞான முனிவரால் ஏற்கப்பட்டது. இது விக்கிரகாராதனையைப் போற்றுவதுவும் ஆகும்.

பொருட்களின் ஒரு பகுதியே இன்னொரு பொருள் வடிவை அடைகிறது. முழுசக்தியும் அடைவது இல்லை. அப்படி முழுவதுவும் இன்னொன்றாகக் காரியப்பட்டால் சக்தி அழியும் பொருளாக, அநித்தியப் பொருளாக ஆகிவிடும் (சூ.2. அதி.4). சிவஞான முனிவருடைய சக்தி வாதக் கருத்தியல் சற்காரிய வாத வழிப்பட்டது. என்றாலும், பொருளின் சக்தி நித்தியமானது என்ற கருத்தமைதி பொலிந்தது.

அதிகாலை, இங்குப் பேசப் பட்டு, பரவி இருந்த கிறித்தவ இன்னொரு கருத்தமைதி விதந்து சுட்டுவதற்கு உரியது. காலம் ஒன்றே என நிகழ் காலத்தை மட்டும் ஏகமாக உள்ளது என உரைத்தனர். மற்றபடி காலக் குறிப்புச் சொற்கள் நமது புத்தியில் மட்டும் உண்டாக்கிக் கொண்டது ஆகும்.

வஸ்துக்களுக்கு ஸ்தலம், இடம், உண்டு. உலகு, பொருள்கள் துவக்கம், கண்டிப்பு, பகுப்பு, மாற்றம் ஆகியனவற்றை சுயஇயல்பாகக் கொண்டு நிலவுவன என்றனர். இவை இறைவனால் படைக்கப்பட்டவை. மரங்கள், தானியதவசங்களது விளைவுகளில், மனிதர், பட்சிகள், மச்சங்கள், மிருகங்கள் முதலிய வஸ்துக்களின் உருவத்திலும், உறுப்புகளிலும் பொருத்தமும், இணக்கமும், கிரமமும் உண்டு. ஆனால், இவைகளில் கடவுளுடைய சொரூபமோ, அம்சமோ இல்லை. இவை கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் மட்டுமே. மேலும், இவை எல்லாம் ஒன்றும் இல்லாமையில் இருந்து உண்டாக்கப்பட்டவை. இவை எல்லாம் மனிதனுடைய வாழ்வியல் பிரயோசனத்திற்காகக் கடவுளால் படைக்கப் பட்டவை. மனிதன் அவைகளுக்கு எல்லாம் அரசன். இப்படியான கருத்துநிலை கிறித்தவத் தந்தைமார்களது நெஞ்சங்களில் திகழ்ந்தது. இந்த நிலையில் இருந்து "இந்தச் சிந்து இராச்சியத்து சாஸ்திரிகளிலே சிலர் தங்கள் எண்ணத்தில், மேலான தெய்வீக சுபாவத்தைத் தாழ்த்தி உலகத்தினது இயல்பை உயர்த்தி இரண்டும் ஒன்றுதான் என்று சாதித்துத் தெய்வமும் உலகமும் சரிசமம் என்றும், உலகம் எல்லாம் தெய்வசுபாவச் சாயல் என்றும், தெய்வீகத்தின் உருவும், உடலும் என்றும் சொல்லிக் கொண்டு வாழ்கிறார்கள். ஆனால், இது புத்திக்கும், மெய்ஞ்ஞானத்துக்கும் ஒவ்வாத தப்பறையே அல்லாமல் வேறல்ல" என மதிப்பிட்டனர் (சத்திய வேத பரிட்சை. 91). இது கிறித்தவர் நோக்கினில் அனைத்திறைக் கொள்கை. வைணவ ஆழ்வார்கள், ஆச்சாரியர், சூஃபிஸ ஞானிகள், பரமாத்துவித சைவ அநுபூதியாளர் தத்தம் வழியினில் போற்றிய

மெய்யியல்களைக் கிறித்தவ அருட் தந்தையர் இதில் அடக்கிப் பேசினர். அடுத்து, "அப்படியே தெய்வமானது தமது அளவில்லாத சுபாவத்தின் இயல்பினால் எங்கும் வியாபித்தபடி இருந்தாலும் சகல வஸ்துக்களும் அவரிடத்தில் அடங்கினாலும், அவர் அதுகளில் நிறைந்தாலும், அதுகளோடு ஒன்றாகாததைப் பற்றி அவருனடய சர்வ வியாபகம் அந்த வஸ்துக்களின் சுபாவத்தை மாறுபடுத்துகிறதும் இல்லை. அதுகளை மேன்மைப்படுத்துகிறதும் இல்லை. ஆதலால், சர்வேசுவரன் எங்கும் வியாபித்து இருப்பதால் மண்ணு, கல்லு, மிருகம் முதலிய படைப்புண்ட வஸ்துக்களின் ஈனமான சுபாவம் மாறாது இருக்கின்றமையாலும் அதுகளோடு அவர் ஒன்று ஆகாததினாலும் அதுகளை வணங்கி ஆராதிக்கலாகாது (சத்திய வேத பரிட்சை.46)". இதனைச் சித்தாந்த சைவத்துடன் வைத்து எண்ணத் தக்கது. மாயையானது வியாபகமாய் இருக்க, முதல்வன் வியாப்பியமாக உள்ளான். மனித உயிர்கள் இடத்திலும் முதல்வன் வியாப்பியமாக உள்ளான் என்பது அதன் மையக் கருத்தியல். "மனிதனுக்குத் துவக்கமும், சாவும் அவனுடைய தத்துவத் தொழில் முதலிய எல்லாவற்றுக்கும் மட்டும் (எல்லை), அளவு இருக்கின்ற அவன் எவ்வந்தஸ்திலாவது, எக்குலத்திலாவது பிறந்தாலும், எவ்வளவோ கீர்த்திப் பிரதாப சோபனத்தைக் கொண்டாலும், எவ்வளவோ வல்லமை அதிகாரத்தோடு ஒட்டோலகனாய்த் திரிந்தாலும், ஞானத்தாலும், கல்வியாலும் எவ்வளவோ சமர்த்தனாய் போனாலும், ஆஸ்தியினாலாவது, தர்மத்தினாலாவது, வேறு எந்த வகையினாலாவது எவ்வளவோ பெரியவனானாலும் தெய்வ சுபாவம் அவனுக்குப் பரிச்சேதமும் இராது. ஆனபடியினால் இராசாக்கள், பிராமணர், லிங்கதாரிகள், தாதர், பூர்வ பிதிர்கள் முதலியவர்களுக்குத் தேவலட்சணங்கள் பரிச்சேதம் இல்லை. ஆதலால் அவர்களைத் தேவர்கள் என்று சொல்லவும், கருதவும் கூடாது'' (சத்தியவேத பரிட்சை .15) . "அநேக கோடி தேவர், பஞ்சபூதம், வேல் முதலான ஆயுதங்கள் எழுத்தாணி, புஸ்தகங்கள், தறி, வெள்ளாவிப் பானை இப்படி அந்தந்தத் தொழிலாளிகள் தங்கள் தங்கள் ஆயுதங்களை நமஸ்கரிக்கிறார்கள். ஸ்திரீகளானவர் முறம், கூடை, குடம், சட்டி, குடுவைகளுக்குப் பூசை செய்வர். மீளவும், துளசி, அரசு, வேம்பு முதலான செடி, மரங்களை வணங்குகிறார்கள். பசு, எருது, குதிரை, யானை, குரங்கு, பருந்து, பாம்பு முதலான அற்ப சீவசந்துக்களை வணங்குகிறார்கள்" (தெய்வ பரிட்சை.7) "அந்தப் புத்தியீனத்துக்குக் குருட்டு நியாயமாக அவர்கள் சொல்லுகிறது ஏதெனில் தெய்வம் சவைந்தரியாமி ஆகையால் எங்கும் வியாபகமாய் நிறைந்து இருக்கிறது என்றும், ஆதலால் அந்தந்த வஸ்துக்களுக்குச் செய்கிற பூசை, நமஸ்காரம் தெய்வத்திற்குச் செல்லும் என்றும் சொல்லுகிறார்கள்" (தெய்வ பரிட்சை.7). கம்மாளர் செய்யும் பஞ்சலோக, மரபு, கருங்கல் சிலைகளுக்கு வேத பிராமணர் வந்து மந்திர வல்லமையால் அதுக்குத் தேவகலையும், சத்தியும் கொடுக்கவே அது மெய்யான தேவன் ஆயிற்று என்பார்கள் (தெய்வ பரிட்சை.11). "பெய் தேவர்கள் உண்டாக்கப் புலவர்களுடைய உரூபிகார சத்தியும் காரணமாகும். இத்தேசத்துப் புலவர்கள் விசேஷமாய் இப்படிச் சகலத்தையும் தங்களுக் கிஷ்டமானபடி பாவித்து வருணித்துக் கட்டுக் கதைகளைப் பெரும் பிரபந்தங்களாகத் தந்தார்கள். அரச சரித்திரங்களை மனிதர் முதலிய அற்ப சிருஷ்டிகளைத் தெய்வமாக உயர்த்தினார்கள்'' (சத்தியவேத பரிட்சை.205). இந்தத் தேசத்துச் சாஸ்திரிகள் எழுதின புராணம், பிரபந்தங்கள், சாஸ்திரங்கள், போற்றப்பட்ட மரபுகள், வேதபாராயணம் ஆகியனவற்றை இதற்காகவே மேற்கொண்டு உள்ளனர் எனக் கத்தோலிக்கத் திருச்சபையினர் உரைத்தனர்.

தரங்கம்பாடி லூத்தரன் மற்றும் புராட்டஸ்டண்ட் சபையினரும் இப்படியே பேசினர். தீய ஆவிகளையும், முன்னோர் ஆவிகளையும் இயற்கைப் பொருள்களில், சிலைகளில் மந்திரத்தால் ஏற்றினால் அந்தப் பொருள்களில் அவை புகும் என்பதுவும், இது சார்ந்த பாடல், ஆடல், விழாக்கள் கீழ்நிலைப் பழங்கால நாகரீக மக்களிடையே தான் நிலவும். அவர்களுக்கு இயற்கையைப் பற்றிய அறிவும் குறைவு. இவர்கள் தாழ்வானவர்கள். பல தெய்வங்களையும், உலகத் தோற்றம், இருப்பு, அழிவுகளுக்குத் தனித்தனி தெய்வம். மேலும், உலகப் பொருள்களில், மனிதரில் கடவுள் கலந்து நின்று, அவைகளைக் கடவுளது அங்கமாக, பகுதிகளாகக் கொண்டு உள்ளது என்ற கருத்தியலும், இது சார்ந்த சாஸ்திரங்கள், புராணங்கள், பிரபந்தங்கள், மரபுகள், நம்பிக்கைகள், ஆடல், பாடல், வழிபாடுகள், விழாக்கள் சற்று நாகரிகம் அடைந்தவர்களால் மேற்கொள்ளப்படும். இஃது அனைத்திறைக் கருத்தியல். ஒரே கடவுள், அவரே படைப்பாளர், ஆணை செலுத்தி ஒழுங்கு, கிரமம், இணக்கம் உடைய இந்த உலகை நடத்துபவர். மனிதன் சுயசுதந்திரம் உடையவன். பொருள்கள் அவனுக்காக, அவனது பிரயோசனத்திற்காக உள்ளன. பொருள்களது சுயஇருப்பு, இயக்கம், நியதி உடையவை என்ற கருத்தியலும், அது சார்ந்த மெய்யியல், வரலாறுகள், வழிபாடுகள், விழாக்கள்,

சபைகள் என்பன உயர்நாகரிகம் உடையவர்களால் கொள்ளப் படுவன. இப்படியாக அருட்தந்தையர் இந்தத் தேசத்து மக்களை அணுகினர். தம்மை ஒரே கடவுள் உடையவர்களாக மதித்துக் கொண்டு, இந்த தேசத்து சமயங்களை, மெய்யியல்களைப் பரிசீலித்தனர். மதிப்பீடு செய்தனர். இதோடு மட்டும் அல்லாது காசி முதல் இராமேசுவரம் வரை உள்ள சிந்திராச்சியத்தில் நிலவிய குழந்தை மணம், உடன்கட்டை ஏறுதல், கோவில்களில் நடன மாதர் ஆடும் சதிர் நடனம், சக்கி பூசைகளில் மது, கள், அருந்துதல், ஆண், பெண் குழு புணர்ச்சி, சகுனம், நிமித்தம், ஜாதகம் எழுதுவது, ஜோதிடம் பார்த்தல் ஆகியனவும் அருட் தந்தையரால் நிராகரிக்கப் பட்டன.

இந்த உலகினில் நான்கு கண்டங்களிலும் கிறித்தவம் பரவிய காலை, இந்தத் துணைக் கண்டத்திலும் வந்து இறங்கியது. ஆவி வணக்கம், அனைத்திறைக் கருத்தியல் பொலிந்த சமய நெறிகள் எல்லாக் கண்டங்களிலேயும் நிலவின. விவிலிய வரலாறு, கிரேக்க, ரோமானிய நாகரிகங்களைத் தம்முடைய நெறிக்குத் திருப்பிய அனுபவம், அப்போதைய அறிவியல் வளர்ச்சி, பொருளாதார, அரசு ஆதிக்க வேட்கை, வந்து இறங்கிய நிலங்களின் செழிப்பான வளங்களின் மீது உதித்த பேராவல் ஆகியனவற்றோடு, தாங்களே ஒரே மெய்யான ஏகதெய்வம் கடவுள் கொண்ட உயர் நெறியினர் என்ற மேம்பாட்டு உயர்வோடு அங்கங்கு விளங்கிய சித்தாந்த, வேதாந்தங்களைக் கிறித்தவத் தந்தைமார் எதிர் கொண்டனர். இந்தச் சிந்திராச்சியம் உலகின் நூற்று நாற்பதில் ஒரு பகுதி. இதனை மனித சுயாதீனம், சித்த சுதந்தரம் உபதேசித்து அகப் படுத்த விழைந்தனர். வரலாற்று நிலையில், போர்ச்சுகீசிய ஆதிக்கம் இறங்கு முகமான பின்னர், வோவினைத் தலைமை இடமாகக் கொண்டு கத்தோலிக்கத் திருச்சபையாளர் 18-ஆம் நூற்றாண்டு இறுதியில் மிகவும் சோர்வு கண்டனர். சுயமாகச் சபை இல்லாமலும், இந்திய மயம் ஆகாமலும் இருந்த தரங்கம்பாடி லூத்ரன் திருச்சபையாளர்கூட மிகவும் சோர்ந்து விட்டனர். மைசூர் திப்பு சுல்தான் மேல் பெற்ற இராணுவ வெற்றிகள் ஆங்கிலேயத் திருச்சபையாளருக்கு ஊக்கம் அளித்தன. தரங்கம்பாடி தேவாலயச் சபை சார்ந்த அருட் தந்தையர் இருபதினாயிரம் சுதேசி மக்களைத் திருப்பிக் கொண்டு முன்னேறினர்.

கிறித்தவத் துறையினருக்கு அபேதுபாய், புக்கானன் இருந்தது போன்று சைவ சித்தாந்த, வேதாந்தத் துறையினருக்குத் தத்தம் நெறியினில் உரியவர் யாரும் அப்போது விளக்கம் கொண்டு இருக்கவில்லை. ஆனாலும் சிவனே எல்லாமான முதல்வன் என்று ஒரு கடவுள் தன்மையைச் சித்தாந்த சைவமும், பிரம்மமே எல்லாமாக உள்ளது என்று பரமாத்துவித சைவமும் நிறுவும் வரலாற்று இயக்கம் இடையற வில்லை . ஏனெனில், பல தெய்வக் கருத்தியலை மறுப்போம் எனக் கிறித்தவ சபைகள் திரிமூர்த்திகளை, பிரம்மத்தை நிராகரித்தே வந்தன.

1813-இல் விக்டோரியா ஆட்சியில் கிழக்கு இந்தியா கம்பெனியின் வியாபரப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர், திருச்சபைகளுக்கு இருந்த தடை நீங்கியது. 1815--1833 வரையான காலத்தில் ஆங்கிலிக்கன், கத்தோலிக்கன், அமெரிக்கன் திருச்சபைகள் உற்சாகம் கொண்டன. கிறித்தவ கிராமங்கள், சங்கங்கள், இதழ்கள் தம்தம் சமயப் பணிகளில் முளைத்தன. திருச்சபை சார்ந்த ஆங்கிலக் கல்வி, அதனால் அரசு உத்யோகப் பணிகள் மேற்குல மக்களுக்கு வேட்கையை ஊட்டின. சமய மாற்றத்திற்கு ஆளானால் சமூக உயர்வும், பாதுகாப்பும் கிட்டும் என்ற அவா பஞ்சம குல மக்களைத் தூண்டியது. சரிசம பதவி அமர்வை எட்டினாலும், சாதி முரண்களைக் களைய இயலவில்லை. திருச்சபை மக்களிடையேயும் தொடர்ந்து வீறுடன் நின்றது. இராணுவத்தினர், ஆட்சியாளர், வணிகர், தோட்ட உரிமையாளர் என வாழ்ந்த ஆங்கிலேயக் கிறித்தவர் ஆங்கிலோ இந்தியர், தமிழ் மேல்சாதிக் கிறித்தவர், ஆதிதிராவிடக் கிறித்தவர் என அப்போது திருச்சபைகளில் இருந்தனர். திருச்சபை அதிகாரிகளில் ஆங்கிலேயரே மிகுதி. இந்திக் கிறித்தவர் மிகவும் சொற்பமே. இவர்களும் ஆங்கிலப் பின்புலத்தை மனதினில் சுமந்தவர்கள். அறிவியல், சமூகவியல், பொருளாயத மற்றும் ஆன்மிக நினைப்புகளோடு சமயவியல், இறையியல் பயிற்சியில் உவகை பூத்தவர்கள். இரேனியஸ், ஸ்நார், ஷமிட், ஹென்ரி பவர், ஜி.யு. போப், சார்ஜெண்ட், கால்டுவெல், பெர்சிவல் போன்ற அருட்தந்தையர் ஊழியம் புரிந்த காலம் இது. அனைவரும் கடற்பயணங்களும், தரைப் பயணங்களும் அளித்த விவரங்களாலும், இயந்தரவியல், ஒளியியல், வேதியியல், உடலியல் தந்த தகவல்களாலும் வளம் பெற்றவர். இரேனியஸ் தாழ்த்தப்பட்ட மக்களையும் கிறித்தவ சமயத்தில் சேர்த்துக் கொள்வதே கிறித்தவ தர்மமாகும் என்ற வேட்கை கொண்டு இருந்தார். இது புரட்சிகரமானது என விவிலிய வரலாற்றாளர் மதிப்பிடுகின்றனர் (விவிலியமும், தமிழும்.102). மேலும், இதன் பொருட்டு இவர் வரலாறு, பூகோளம், பொது

அறிவு நூல்களை எழுதினார். துண்டுப் பிரசுர முறையை ஏற்படுத்தித் தனது சமயக் கருத்துக்களை வினியோகித்தார்.

சிந்துராச்சியம் என்பது இந்து தேசம் என அழைக்கப்பட்டு, ஆங்கிலத்தில் இந்தியா எனவும், பர்சிய மொழியில் இந்துஸ்தான் எனவும் குறிக்கப் படுவது தொடங்கியது. 18-ஆம் நூற்றாண்டு இறுதிநாட்கள் விவரப்படி சிந்து இராச்சிய மக்கள் "இவ்வுலகத்தின் தேசங்களை முதலாய் நன்றாய் அறிய மாட்டார்கள். இலங்கைத் தீவு, சீனதேசம். அபிசீனிய தேசம், பார்சியா தேசம் இன்னின்ன திசையில் இருக்கும் என்று சொல்லுவது இவர்களுக்கு அருமையாய் இருக்கிறது. அல்லாமல், அப்பால் இருக்கிற தேசங்களின் பேரையும் அறிய மாட்டார்கள்'' (சத்தியவேத பரிட்சை.140). அப்போது சிந்து சமயம் என இந்த இராச்சிய மக்களது சமயமானது குறிப்பிடப்படவில்லை. 1840க்கு முன்தான் இந்து தேசம், இந்தியா என்ற வழக்கீடு தொடங்கியது. அதோடு இம்மக்களது சமயமும் இந்து சமயம் என்று வழங்கப்பட்டது. அப்போதைய இந்து தேசத்திற்கு வடக்கில் தாத்தார் தேசம், கிழக்கில் அசம் தேசம், தெற்கில் இந்து சமுத்திரம், மேற்கில் பார்சுவ தேசம் ஆகியன எல்லைகள் ஆகும். இங்கிலிஷ்காரர் வடஇந்து தேசம் என பகுப்பாகக் கொண்டனர். தென் இந்து தேசம், பங்காளம், பிகார், அல்லாபாத், ஆக்ரா நாடுகள் கிழக்கிலும், காபோல், காந்தார், லாகோர், காஷ்மீர், மாநிலத்தின் சிந்து, அச்சிமிர், சூராட்டு, மாளுவ நாடுகள் வடமேற்கிலும் உண்டு. இவை வடஇந்து தேசங்கள். காதேசம், பேரார், உடிசியா, தவுலதாபாத், விசைய நாடு, கோல்கொண்டா, தெக்காணம் என்ற வடசர்க்கார், சென்னப் பட்டணம், ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தரங்கம்பாடி முதலிய இடங்களையும் உடைய கருநாடு, மைசூர், தஞ்சாவூர், பாண்டிநாடு, திருநெல்வேலி, சேரநாடு, மலையாளம் முதலிய நாடுகள் தென் இந்திய தேசமாகும். மக்கள் அப்போது பத்துக் கோடி. இதில் ஒரு கோடிப் பேர்கள் முகமது மார்க்கத்தினர். சில லட்சம் பேர்கள் கிறித்தவர்கள். மற்ற யாவரும் விக்கிரகாராதனைக்காரர். இந்துக்கள் சதுர் வருணத்தவர். இந்துக்களின் பூர்வ பாஷை சமஸ்கிருதம் எனத் தோன்றுவதாகவும், பிராகிருதம், பாலி, சிந்து அதில் இருந்து பிறந்ததாகவும் திருச்சபையினர் நினைத்தனர்.

மேலும், அப்போது இந்துஸ்தான் பங்காளி, காஷ்மிர், தொகுரா, ஒச்சு, கச்சு, சிந்து, குசிராத்தி, கொங்கணி, பஞ்சாபி, பிகானிர், மார்வார, சேய்பூர், ஒடியப்பூர், ஆரோத்தி, மால்வா, பிரசு, பண்டல்கண்ட், மாராஷ்ட, மகத, கோசல, மாதிலா, நேபால், ஒடிசா, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகியன பிரதான பாஷைகள். அறுபத்து நான்கு கலைகள் வழக்கில் நிலவின. இந்துக்களின் முனிவர்கள் அகத்தியன், ஆங்கிரசன், காசிபன், கௌதமன், நாரதன், பதஞ்சலி, பராசரன், வசிட்டன், விசுவாமித்திரர், வியாசன், தமிழ்நாடு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு, வைகை ஆற்றின் தெற்கு, மருத ஆற்றின் வடக்கு. இதனைச் சூழ்ந்த தென் பாண்டி, குடம், குட்டம் ஆகியன கொடுந்தமிழ் நாடுகள். தமிழ்நாட்டில் சங்கம் நடந்தது. அதில், இறையனார், கபிலர், பரணர், நக்கீரர், ஆலங்குடி வங்கனார் ஆகிய புலவர்கள் விளங்கினர் (வேத அகராதி.43-45).

முன்பு எப்போதும் இல்லாத முறையினில், இந்து தேச சரித்திரத்தைத் திருச்சபையினர் வடிவமைத்தனர். பூர்வீக சரித்திரம், மகமது மார்க்கத்தாருடைய துரைத்தனம், ஐரோப்பா கண்டத்தார் தேசத்தைப் பிடித்துக் கொண்டு ஆளுகின்ற சரித்திரம் என்ற மூன்று பகுப்பாய் அமைத்தனர். இந்தியாவினது பூர்வீக சரித்திரத்திற்குத் தகுதியான நூல்கள் அப்போது இல்லை. ஒரு மலைப்பு சூழ்ந்து இருந்தது. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் மகா பாரதப் போர், அதன் பின்னர் சிசோஸ்திரில், திரியு இஸதாஸ்பீஸ், அலெக்சாண்டர், சிலுகஸ், அந்தியோகஸ் ஆகியோர் ஆண்டனர். மகத வம்சத்தினர், விக்கிரமாதித்தன், ஆந்திரர் மகதத்தை ஆண்டனர். பின்னர் வங்காளம் சிறப்பு எய்தியது. பிறகு பல இராசாக்கள் அங்கிருந்து இந்தியாவில் ஆட்சி செலுத்தினர். இந்தப் பூர்வீக சரித்திரத்தோடு மூவாயிரத்து எழுநூற்று ஐந்தில் எகிப்திய பிதோலேமேயன் தன்னுடைய தாயார் பெயரில் செங்கடல் முகத்துவாரத்தில் ஒரு துறைமுகத்தை நிர்மாணித்து இந்துஸ்தானத்தோடு வணிகம் தொடங்கினான். அப்போது இருந்து போச்சுகீசியர் வரும் வரை இந்தியச் சரக்குகள் அலெக்சாண்டிரியா வழியாகச் சீமை எங்கும் விலைப்பட்டன. கி. பி. 940-க்குப் பின்னர் மகமது மார்க்கத்தார் பரவினர், கிஸ்னி தேசத்து மாமூது, செங்கிஸ்கான் படையெடுப்புகள், தைமூர் முதல் ஔரங்கசீப் வரையான மொகலாயர் ஆட்சி, நாதிர்ஷாவினது வெற்றி, பின்னர் சிற்றரசர்களது ஆட்சி என ஐரோப்பியருக்கு முந்திய சரித்திரம் நடந்தது.

கி.பி.1498 முதல் வாஸ்கோடகாமா முதல் திப்பு சுல்தான் மீது பெற்ற வெற்றியுடன் தொடர்ந்த கம்பெனி ஆட்சி வரையான காலத்தில் ஐரோப்பியர் பெற்ற வெற்றிகள் கொண்ட சரித்திரம்.

இப்படியான ஒரு சரித்திரம் இந்து தேசத்திற்குத் திருச்சபையினர் எழுதிக் கொண்டனர்.

அது வரைக்கும், இந்தத் தேசத்தில் இருந்த இந்துக்களுடைய சமயம் சம்பந்தமான விவரங்களை தொகுப்பாகத் தமிழ் பாஷையில் எவரும் எழுதி வைத்திருக்க வில்லை.

இந்துக்களது மதக் கருத்தியலை அறிய, அதை மூன்று விஷயங்களாக வைத்துத் திருச்சபையினர் விவரித்தனர். தேவர்களது சரித்திரம், நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணங்களது வரலாறு, சமயக் கருத்தியல்கள் என விரித்துப் பரிசீலித்தனர். தேவர் சரித்திரத்தில் மும்மூர்த்திகளது சரித்திரம், விநாயகன், வயிரவன், வீரபத்திரன், திக்குபாலர், விசுவகர்மன், மன்மதன், தருமசீலி, மன்னார்சாமி, பெண் தேவதைகள், சாமானிய தேவர்கள் பற்றி எழுதினர். இவர்களைப் பற்றிய புராணங்கள், பாகவதம், கந்தபுராணம், திருவிளையாடல், பாரதம் முதலிய புத்தகங்கள் கூறுகின்றன. இந்தத் தேவர்கள், தேவதைகள் மட்டும் அன்றி மிருகங்கள், பட்சிகள், மச்சங்கள், விருட்சங்கள், ஆறுகள், கிரகங்கள், ஆயுதங்கள், கற்கள் ஆகியனவற்றையும் இந்துக்கள் வணங்குகின்றனர் என்று சுட்டிக் காட்டினர். நான்கு வேதங்கள் மனுவினது காலத்தில் வித்துவான்களால் எழுதப்பட்டு இருக்க வேண்டும். இருக்கு வேதத்தைப் பாலி என்பவனுக்கும், எசுர் வேதத்தை வைசமபாயனன் என்பவனுக்கும், சாம வேதத்தைச் சயமுனி என்பவனுக்கும், அதர்வண வேதத்தைச் சோமனன் என்பவனுக்கும் வியாசர் போதித்தார். வேதத்தில் மந்திரங்கள், உபதேசப் பிரமாணங்கள் உள்ளன. இவை பிராமணர் ஆற்ற வேண்டிய பூசை, மந்திரங்கள், உபதேசங்கள், சடங்குகள் பற்றிக் கற்பிக்கின்றன. வேதமானது எங்கும் உள்ள பிரம்மம், அது மும்மூர்த்திகளை உண்டாக்கியது, எந்தப் பொருளும் அதனது தோற்றம், பிரம்மத்தை தியானிப்பது உணர்வான ஞானம், உலகமானது மாயை எனப் பகர்கின்றது. மனுஷர்கள் அந்தப் பிரம்மத்தைப் பிரத்தியட்சமாக அறியக் கூடாமையால் மும்மூர்த்திகளையும், தேவர்களையும் அக்கினியையும், பஞ்சபூதங்களையும், விக்கிரகங்களையும் வைத்து நமஸ்கரிக்க வேண்டும் என வேதமானது கற்பிக்கின்றது.

வேதங்களில் ஆத்மாவானது நித்தியமானது எனச் சில இடங்களிலும், காத்திரமான ஒரு பகுதி எனச் சில இடங்களிலும் காட்டப்படுகின்றது. ஆத்மாவானது தான் செய்த பாவ, புண்ணியங்களின் படியே ஒரு உடலை விட்டு இன்னொரு உடலுக்குள் பாய்கின்றது எனவும் கூறுகின்றன. வேதத்தில் உலக சிருஷ்டிப்பைப் பற்றிப் பல விதமாகச் சொல்லப் பட்டு உள்ளது. கூடவே, மேல் உலகு ஏழு, கீழ்உலகு ஏழு எனவும் சித்தரிக்கின்றது.

இருக்கு என்பதற்குபட்ட பெருமை, ஸ்துதி என்றும் எசுர் என்பதற்கு ஸ்தோத்திரம் என்றும், சாமம் என்பதற்குச் சங்காரம் என்றும், அதர்வணம் என்பதற்கு அழித்தல் என்றும் அருத்தம் என்பதாகத் திருச்சபையினர் குறிப்பிட்டனர்.

நாலு வேத உபதேசப் பிரமாணங்களில் இருந்து முப்பத்து இரண்டு உபநிடதங்கள் பிறந்தன. உபநிடதம் என்றால் வேதநுட்பம் என அவர்கள் பொருள் உரைத்தனர். வேதம் பிறந்து வந்த வரலாற்றில் கபிலர் அகவலிலே சொல்லி இருக்கிறதைக் காண்பித்தனர். இதைக் கொண்டு கபிலர் அகவல் பாடலும் பெருவழக்கானது. வேதவியாசன் தன்னுடைய தகப்பன் பிரசங்கித்த வேதத்தைத் தானும் சிலகாலம் பிரசங்கித்து இறுதியில் பார்ப்பாருக்குக் கொடுத்தார் என்றும், வேதம் ஒன்றாய் இருந்தும் நாலு ரிஷிகளது தலைமுறைப்படி போதித்து வந்ததால் அதனை நாலு வேதமாக ஆக்கினார்கள். இப்படியான ஒரு நிரலா வரிசையைக் கூறிச் சரித்திரமாகச் சொன்னார்கள். வசிஷ்டர் அருந்ததி என்ற மாதை மணந்து, எல்லா மனிதரும் சாதிபேதம் இன்றி ஒன்றாய் இருந்து சகலவிதமான மாமிசமும் சாப்பிடலாம் என்று பிரசங்கம் செய்தது, இவர்கள் மகன் காசிபன் ஒரு பறைப் பெண்ணை மணந்து தந்தை போலவே பிரசங்கித்தது, இவர் மகன் பராசரன் அப்படியே பிரசங்கித்தார். அதோடு மச்ச கந்தியை மணந்து வியாசரைப் பெற்றார். பராபர வஸ்து ஒன்று, வேதம் ஒன்று, சாதி வித்தியாசம் இன்றி ஒன்றாய் இருந்து மாமிசம் சாப்பிடலாம் என்ற பிரசங்கம், இதில் இருந்து வேதமானது பார்ப்பனர் தொடர்பு பெற்ற பின்னர் நாலு வேதமாக ஆனது என்ற கருத்தமைப்பு குறிப்பிடத் தக்கது. திருச்சபையினரது விவிலியத்தினது சாயலானது.

இந்துக்களது சாஸ்திரம் இரண்டு வகுப்பாய் உள்ளன. சாங்கியம், பதஞ்சலியம் வேதாந்தம், ஒரு வகுப்பு. இதில் சாங்கியம் இருபத்தைந்து தத்துவம் கூறுவது. இவையன்றி உலகு எனப் பிறிது ஒன்று இல்லை. உலகினது உண்மையை அறிதல் அறிவு ஆகும். இதைக்கூறியவர்கபிலர். முத்தொழிலும் மூலப் பிரகிருதியாகிய மாயையின் இடத்தில் உண்டாயின. பதஞ்சலியியம் அஷ்டயோகம் உரைப்பது. பதஞ்சலி என்ற முனிவரால் சொல்லப்பட்டது. இவன் கபிலருடைய கருத்தியல்களை உடையவனாய் இருந்தான். கடவுள் குணமும், செய்கையும் இல்லாதவர் என்றும், சடப் பொருள் மேல் அசைவு தொன்றியதால் சிருஷ்டி உண்டாயிற்று என்றும் சொன்னான். வேதாந்தமானது வேதத்தின் முடிவு. வியாசரால் உரைக்கப்பட்டது. உபநிடதங்களில்

இருக்கிற வேத உபதேசர் பிரமாணங்களை மாத்திரம் ஒழுங்காய்ச் சொல்லியது. சங்கரர் இதிலே பரப்பிரம்மம் சர்வலோகத்துக்கும் ஆத்மா என்றும், சகல வஸ்துக்களோடும் ஐக்கியமாக இருக்கிறது என்றும், பலவிதமான தேவர்கள் உண்டு என்றும், பூலோகமானது பஞ்சபூதங்களால் உண்டாக்கப் பட்டது என்றும் சொன்னான். இன்னொரு வகுப்பில் வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வ மீமாம்சை, உத்திர மீமாம்சை என ஆறு இருப்பதாகக் கூறினர். இதில் வேதாந்தம் வியாசரால் உண்டாக்கப்பட்டது. வைசேடிகமானது ஒழுக்கத்தையும், தர்க்கத்தையும், பாட்டமானது காவியக் கவிதைகளையும், பிரபாகரமானது குற்றவியல் விதிகளையும், பூர்வ மீமாம்சை பழமை, சரித்திர, சடங்குகளையும், உத்திர மீமாம்சையானது தர்க்கத்தையும், ஞான காண்ட உபதேசப் பரமாணங்களையும், மகாஆத்மாவைக் குறித்தும் எழுதப்பட்ட சாஸ்திரங்கள் எனத் திருச்சபையினர் அப்போது எழுதினர்.

இந்துக்களுடைய புராணங்கள் மும்மூர்த்திகளது சரித்திரத்தை உடையது. மகாபாரதம், இராமாயணம், பாகவதம் ஆகியனவற்றைப் புராணங்கள் எனத் திருச்சபையினர் சொல்லினர். விஷ்ணு புராணத்தோடு சேர்த்து இந்த மூன்றையும் விசேஷித்தவையாக மதிப்பிட்டனர். பதினெட்டு புராணங்கள், உபபுராணங்கள் பற்றி அறிந்து இருந்தனர். இவற்றில் கந்தபுராணத்தில் சுக்கிர பகவான் சூரபத்மனுக்கு உரைக்கும் அண்டகோச வரலாற்றைக் குறிப்பிட்டு விதந்து எடுத்துப் பேசினர். இதில் புவனம், அதைச் சூழ்ந்து உள்ள அண்ட லோகங்கள், அவைகளுக்கு இடையே உள்ள பிரம்மாண்டமான யோசனை தூரங்கள், புவனத்தில் உள்ள கடல்கள், தீவுகள் பற்றிய விவரங்கள் கூறப் படுகின்றன. கோப்பர்நிக்கஸ், லாப்லாஸ் ஆகியோரால் உரைத்த அண்டகோசத்தோடும், தொலைநோக்கி மூலம் அப்போது அறியப்பட்டு இருந்த சூரியன், பூமி தவிர பிற ஏழு கோள்கள் பற்றி அறிந்தவராகத் திருச்சபையினர், கந்தபுராணம் விவரித்த அண்டகோச வரலாற்றைக் கீழ்மையாக எடுத்துப் பேசினர். இந்து சமயத்தில் சைவம், வைணவத்தோடு சைனம், பௌத்தம், சார்வாகம், உலகாயதமும் இருப்பதாக அப்போதைய திருச்சபையாளர் நினைத்தனர். ஆனால், சார்வாகமும், உலகாயதமும் இந்தத் தேசத்தில் விசேஷமாய் இல்லை எனச் சொல்லி வந்தனர்.

சைவத்தில் பதின் ஆறு பிரிவுகளைக் கண்டனர். சிவபூசையின் இயல்பாகச் சரியை, கிரியை, யோகம், ஞானங்களைக் கண்டனர். இதில் ஞானயோகம் இரண்டு வகையாகும். அவை துவைதம், அத்வைதம் எனக் கூறிய வியப்பிற்கு உரியது.

இந்துக்களில் ஞானிகள் உண்டு. ஆனால் மெய்ஞ்ஞானத்தை முற்ற அறியாதவர்கள். இருந்தாலும், ஞானம் உதயமாகி இந்துக்களுடைய கருத்தியல்களை விரோதித்துப் பலப்பல விதமாகப் பொய்யும், மெய்யும் கலந்து பாடி உள்ளனர். அவர்கள் பட்டினத்துப் பிள்ளை, கொங்கணர், அகப்பேய்ச் சித்தர், சிவவாக்கியர். திருச் சபையினர் இவர்களைக் குறிப்பிட்டதற்குக் காரணம் இவர்கள் நாலு வேதங்களை நிராகரித்தனர். எந்தக் கடவுளையும் தொழவில்லை. சற்குருவை ஏற்கவில்லை. மறுபிறப்பு என்பதை நிராகரித்தனர். தன்னைத் தானே அறிவதைப் போற்றியபடி, மனம் ஒன்றி இருத்தலைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் போற்றினர்.

சைவர்கள் இந்து தேசத்தில் தெற்கே அதிகம். இந்து சமயக் கடவுளர்கள் உடல் கொண்டு இருப்பவர்கள். மனிதர்கள் போல் பெண்ணை மணந்து, புணர்ந்து வாழ்பவர்கள். இப்படிப் பட்டவர்கள் மெய்யான கடவுளர் அல்லர். திருத்தந்தையர் இதனைப் பண்ணிப் பண்ணி எடுத்து உரைத்தனர். இப்படிப்பட்ட கடவுளருடைய வரலாறு கூறும் புராணங்கள் அபத்தம், ஆபாசமான தப்பறை எனப் பிரசங்கித்தனர். பிரம்மம், ஆன்மா, உலகம் பற்றிய தத்துவங்கள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவை. அஞ்ஞானம் என பேசி வந்தனர் (வேத அகராதி).

இந்துக்களுடைய விக்கிரகாராதனை பந்நிப் பரக்கவும், உறுதியாகவும் இடைவிடாது வந்ததில் இருந்து சதா பிரசங்கித்தனர். இதன் பொருட்டுத் திருச்சபை சரித்திரம், சிந்து தேச மார்க்கம் ஆகிய நூல்களில் எழுதினர். நோவவின் சந்ததியார் உலகம் எங்கும் பரவிய காலை விக்கிரகாராதனை உண்டானது என விவிலியம் கூறுகிறது. யூத மதத்தின் சிதைவுகள் இந்து மதத்தில் இருப்பதாக ஹென்ரி பவர் எழுதி வைத்தார். தேசத்திற்குத் தேசம், காலத்திற்குக் காலம் மாறுபட்டாலும் விக்கிரகாராதனையானது ஒரே தன்மையுடனே நிலவுகிறது. தேவர் மற்றும் வணங்கும் முறை மாறுபட்டாலும் அதன் ஆதாரம், இயல்பு, குணம், பலன் ஒன்றே எனத் திருச்சபையினர் விவரித்தனர். 1800-க்கு முன்னர் இப்படி அணுகவில்லை . 1840 களில் இப்படி அணுகினர். விக்கிரகாராதனை என்பது ஒரு பொதுச் சொல், பெயர். அவபக்தியை,

உண்மை , மெய், சுத்தியம் அல்லாத போக்கினைக் குறிப்பிடுவது. ஒரு வஸ்துவைக் காட்டும் சொரூபம், பத்தி உள்ள, புத்தி இல்லாத சிருஷ்டி, மனிதர் இதயத்தில் உள்ள தகாத இச்சை, குணம் மற்றும் ஒன்றும் இல்லாத வெறும் தோற்றம், பேய்கள் ஆகியன விக்கிரகம் என்று திருச்சபையினர் கொள்கை விளக்கம் சொல்லினர். இதன்படி எந்த ஒரு உயிருக்காவது, பொருளுக்காவது பக்தி, வணக்கம், கிரியைகள் செலுத்தப்படுமானால் அதுவே விக்கிரகாராதனை. ஏனெனில், மனிதன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்வது கூடாது.

பராபரன்பால் இருந்து காப்பது விக்கிரகம். மெய்க் கடவுள் ஒருவரைக் கைவிட்டுப் பலவிதமான தேவர்களைச் சிலையாக வடித்து அதனை வணக்கம் செய்வது அவபக்தி. மெய்த்தேவனை ஏறெடுக்காமல் வழுவிப் போய்த் தங்களது மனம் போனபடியான சுயேச்சைப்படி பருப் பொருளை பக்தி செலுத்துவது தாழ்வானது. தேவன் படைத்த சிருஷ்டிகள் எல்லாம் தேவனைக் குறிக்கின்றன என நினைத்து அவைகளை வணங்குவது இது. இது மாமிச இச்சைகளுக்கும், பிரபஞ்ச சிற்றின்பங்களுக்கும் இடம் தரும். மனித ஆத்மாவானது ஒரு விசை தன் சிலையாகிய பராபரனை விட்டுப் பிரிந்தால் அது அவபக்தியிலும், அமார்க்கத்திலும் படிப்படியாய் ஏறிப் போகும். இது ஆத்மாவினது சுபாவம் என்பது திருமறை வேத அகராதியின் விளக்கம்.

மெய்யான கடவுளை விட்டு, படைப்புண்ட பொருள்களாகப் பத்து பகுப்புகளை ஹென்ரி பவர் விக்கிரகாராதனைக்கு உரியனவாக அவதானித்து எழுதினார். 1. சம்மனசுகள், பேய்கள், குலதேவதைகள், வீட்டுத் தேவதைகள், கிராமத் தேவதைகள், இறந்தவர் ஆத்மா, 2. மனிதர், தருமவான்கள்,வீரர், அரசர், தபசிகள், பத்தினிகள். 3. மனிதருக்குரிய இச்சை, குணம், வியாதி, சுகம் சார்ந்த தெய்வங்கள், செல்வம், கல்வி, காமம், பிறப்புகளுக்கு முறையே லட்சுமி, சரஸ்வதி, மன்மதன், லிங்கம் என இவைகளுக்கான தெய்வங்கள். 5. பூதங்களான நிலம், நீர்நிலைகள், நதிகள், அக்னி, வாயு. 6.மரம், தெடிகளான அரசு, வேம்பு, வில்வம், துளசி. 7. நீர் வாழ்வன. 8. ஊர்வன பாம்பு. 9. பறப்பதான கருடன் . 10. மிருகங்களான பசு, அனுமன். இப்படிக் கடவுளர் பெருகப் பெருக உற்சவம், விழாக்கள், ஆடம்பரம், ஆடல், பாடல் பெருகும். அரசர், குருக்கள், வித்துவான்கள், புலன்களுக்கு விஷயமான பொருள்களிடத்தில் ஆசை பெருகும். சத்தியத்தைக் காட்டிலும் கட்டுக் கதைகளில் விருப்பம், வெளிவேஷம் ஆகியனவற்றால் விக்கிரகாராதனை உள்ளது.

இஃது ஆத்ம சுவாதீனத்தை அழிப்பது. சன்மார்க்கத்தை அடக்குவது. மேலும், சோசியம், கௌளி, சர, சகுன, சாமுத்திரிக , துடி, தும்மல், பட்சி, மாந்திரிக சாஸ்திரங்களும் விக்கிரகாராதனையின் பாற்பட்டு சித்த சுதந்திரத்தைக் கெடுப்பது.

விக்கிரக பக்தியினால் சாதி வேற்றுமை ஏற்பட்டதாகவும், ஆண், பெண் கற்பின்மையும், நோயும், பழமை மீது மோகம், சுதேச அபிமானம் இன்மை, சுஜன அபிமானம் இன்மை, அசத்தியம் மற்றும் அயோக்கியப் பெருக்கம் ஏற்பட்டதாக திருச்சபையினர் எடுத்துப் பேசினர். இதனால், ஆண்களிடத்தில் ஒருமை, தீரம், சுறுசுறுப்பு, சலிப்பின்மை காண்பது அரிதாக இருந்ததாகக் கண்டனர் (வேத அகராதி).

சத்திய ஒளி இன்மையால் கடவுளை நிர்குணர் எனவும், சமஸ்தமும் பிரம்மம், பிரம்மம் சமஸ்தமாக உள்ளது. கண்டது எல்லாம் கடவுள், மும்மூர்த்திகள் இவர் தொடர்பான சரித்திரம், புராணம், சாஸ்திரங்கள் கொண்டும் பிராமணர்கள் பிழைக்கவும் நீச சிருஷ்டிகள் மலிந்து உள்ளதாகப் பிரசங்கித்தனர்.

உயிர்க் கொலை, உடன்கட்டை ஏறுதல், கரு அழித்தல், இளம் விதவை நிலை, சாதிக் கட்டுப்பாடு, ஆண்களது பலதார மணம், பெண் கல்வி இன்மை யாதிகளால் தாழ்நிலையில் இருப்பதாகக் காட்டினர்.

இப்படியாக இந்து மதத்தின் கடவுளர்கள், வேதசாஸ்திரங்கள், புராணங்கள், அவதார நம்பிக்கைகள், விக்கிரகாராதனை ஆகியன ஆழமான மறுப்புக்கு கிறித்தவத்தினால் உட்படுத்தப்பட்டன. கூடவே, கல்வி சம்பந்தமான பாடநூல்களும் வெளியிடப்பட்டன. 1820 களில் இரேனியஸ் காலநூல், பூத சாஸ்திரம், வான சாஸ்திரம், சூரிய மண்டலம், மனுகுல வரலாறு, இயற்கை, சரித்திரம், தமிழ் மற்றும் பிரெஞ்சு இலக்கணம், அளவையியல் ஆகிய பள்ளி நூல்களைத் தயாரித்தார். திருச்சபைக்கு மதம் மாறிய எல்லா சாதி மக்களுக்கும் கற்பித்தார். 1839 இல் அருட்திரு. ஜாய்ஸ் மனித அறிவினை மேன்மைப்படுத்திய இயந்திரவியல், காலவியல், அளவையியல், தொன்மம், ஆடியியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கு முன்னுரையாக இயற்கைத் தத்துவம் என்ற நூலினை முன் வைத்தார். இவைகளை முன்னிட்டு நியூட்டன், லாக்கே, லீப்னீட்ஸ், பேகன் ஆகியோரது கருத்தியல்களை

அடிநிலையாகக் கொண்டார். 1843 இல் ஜி. யு. போப் விவிலியப் பள்ளியை நிறுவி ஆங்கிலம், கிரேக்கம், லத்தீன் மொழிகளைப் படிப்பித்தார். கூடவே, தத்துவம், கணிதம், தர்க்கம், பௌதீகம் ஆகியனவற்றையும் இணைத்தார். 1843 இல் கடாட்சபுரத்தில் பெண்களைப் பயிற்றுவிக்க ஒரு நார்மல் பள்ளியானது மிஷினெரியைச் சேர்ந்த ஐரோப்பியப் பெண்களால் தொடங்கப்பட்டது. 1860 இல் ஆறுமுக நாவலர் பூகோள நூல், அங்க கணிதம், வீச கணிதம், க்ஷேத்திர கணிதம் ஆகிய நூல்களைக் கற்கும் படியாக சைவத் துறை பாலகர்களுக்கு அறிவுறுத்தினார் (பிரபந்தத் திரட்டு.26).

சமயத் துறைக்குப் புறம்பே கல்வித் துறையில் 1860 களில் மூலகங்கள், பரிணாமம் பற்றிய பாடங்கள் இணைக்கப்பட்டன. இயற்கை அதாகவே இயங்குகிறது. தனது செயல் என்ற நிலையில் சுயஆற்றல், சுயதீர்மானம் ஆகிய தன்மைகள் பொலிந்தது. இறைத் தன்மை கொண்டது அன்று. பொருளும் மனித சித்தமும் வேறு, வேறு. பொருள்களது இயக்கமானது இயந்திரத் தன்மையானது. இப்படி இயலுலகு முழுதும் அளாவிய கருத்தியல் அறிவுத் துறையில் நிலவியது. இந்த நிலையில் ஆற்றலானது நித்தியமானது என்ற கருத்தை ஆங்கிலேயர் மட்டும் அறிந்து இருந்தனர். இந்த விவரங்கள் மட்டும் அல்லாது, சமூகம் பற்றிய அறிவும் இங்குப் பரவியது. தனிச் சொத்து, அரசு பற்றியும், தொல் கால இனக்குழு வாழ்வு, வேட்டை வாழ்வு, கால்நடை மேய்ப்பு வாழ்வு, உழவு வாழ்வு ஆகிய கட்டங்களைச் சமூகம் கடந்து வந்ததாகக் கற்பிக்கப்பட்டது. தனிச்சொத்து, அரசுமுறை பற்றிய ஆதரவான நோக்குடனேயே கற்றனர்.

1835 இல் இங்கிலாந்தில் உருவாகி இருந்த நேர்க் காட்சி வாதம் இங்கு அதிகாரிகள், கல்வியாளர் அளவில் இருந்து இந்தியப் படிப்பாளிகள் இடையேயும் பரவியது. இஷ்ட சித்தி, அநிஷ்ட நிவர்த்தி, அதாவது தனக்கான சொந்த நலன், ஆவல், ஆசை நடந்தேற வேண்டும். தனக்கு ஆகாதவைகள் நீங்க வேண்டும் என்று தன்னை, தனிமனித நலத்தை, தன்னலத்தை மையப் படுத்திய நேர்க் காட்சி வாதக் கருத்தியல்கள் இங்கு வேர் ஊன்றின. 1862 இல் ஹெர்பர்ட் ஸ்பென்சர் வெளியிட்ட First Principles என்ற நூலை இங்கு 1867 இல் மாநிலக் கல்லூரி பேராசிரியர் டேவிட் டன்கன் பதிப்பித்தார். ஆகவே, ஹெர்பர்ட் ஸ்பென்சரது பரிணாம நோக்கு உறுதியுடன் பரவியது. பரிணாமம் எல்லாக் காலத்திலும் இருப்பது, இப்போதும்கூட. வடிவமும், கண்டிப்பும் அற்ற ஒரே ஏகநிலையில் இருந்து, இப்போது உள்ள வடிவமும், கண்டிப்பும் கொண்ட பன்மைத் தன்மையான பிரபஞ்சமானது உண்டாகிக் கொண்டு உள்ளது என ஒன்று பலவாகிய காட்சியை அவரது கருத்தியல் புலப்படுத்தியது. கூடவே, பொருள், ஆற்றல், இயக்கம், காலம், இடம் பற்றிக்கூறிப் பொருளினது அழியாமை, ஆற்றலின் நிலைப்புத் தன்மை, பொருளினது செறிவு, இயக்கத்தின் சென்று தேய்ந்துறும் நிலைமை என்ற கருத்தமைப்புகளோடு பரிணமித்தல், ஒடுங்குதல் பற்றிய அவரது விளக்கமானது இங்குப் பதிவுகளை உண்டாக்கியது. ஒட்டுமொத்த விசையானது பகுதிகளாக விரிந்து பரவலாகும். தொடக்க ஆற்றலானது பலமுகமாகச் செயல்படும். மாறுபட்ட தொகுதிகளாகப் பிரியும். அப்போது ஒவ்வொன்றும் மையமாக, அந்த மொத்த விசையில் செயல்படும், இரண்டாம்நிலை மாறுதலுக்குத் தனது பங்கைச் செலுத்தும் (First Principles.393). இது காரண காரிய நிலை வகைப்பட்ட கருத்தமைப்பு. ஒன்று பலவாக ஆதல் மட்டும் அல்லாமல், பலவாக ஆன அந்த ஒவ்வொன்றும் தொடக்க நிலையான அந்த ஒன்றினது விசையை மாற்றுகின்றது எனவும் அது பொருள் தந்தது. ஸ்பென்சர் ஆற்றல்/ விசை என்ற பொருள் தரும் Force என்ற சொல்லையே மேற்கொண்டார். சக்தி எனப் பொருள் தரும் Energy என்ற சொல்லினைக் கைக்கொள்ள இல்லை. 1842 இலேயே மாயர் சக்தி அழியாதது என்ற பிரபஞ்சம் அளவிலான தனது கருத்தியலை அளித்து இருந்தார். அஃது ஐரோப்பாவிலும் பரவி இருந்தது. ஆனாலும், ஸ்பென்சர் ஆற்றல் / விசை என்ற கருத்தையே கைக்கொண்டு இருந்தார். அடுத்து, இதனோடு நேர்க் காட்சி வாதத்தின் பிரயோசன வாதமானது ஜே.எஸ். மில், கிரீன் ஆகியோர் கூற்றுகளோடு இங்கும் வழக்கிற்கு வந்தது. தனிச் சொத்து அதன் பெருக்கம் என்பதோடு உடன் கொண்டு அது நிலவியது. எந்த ஒரு பொருளையும் தனக்கான பிரயோசன உணர்வில் எடுத்துப் பேச இது கற்பித்தது. அதோடு மட்டும் அல்லாமல் புலன்களின் நேரடி அவதானிப்புக்கு உட்பட்ட புறநிலை விஷயத்தில் இருந்து பெற்ற பொறிகள் உணர்வுகளின் புலன் அனுபவங்களே அறிவு, இன்பங்களுக்கு உறுதி தருகின்றது என விவரித்தது. இதுவே அனுபவ வாதம். புறநிலை விஷயத்தை விடப் புலன் உணர்வு அனுபவமே அறிவு, இன்பங்களுக்கு வித்து என்பது இதன் கருத்தியல்.

இந்த நேர்க் காட்சி வாதமானது ஆத்திகம் மற்றும் சாத்திகம் என்ற இரண்டு முகங்களைக் கொண்டு நடமாடியது. ஆத்திகத்திலும் Deism என்ற பாங்கினில் நிலை கொண்டு இயங்கியது.

கடவுளுக்கும், மனிதனுக்கும் நேரடித் தொடர்போடு, கடவுளது தெய்வத் தன்மையை தவிர்த்து விட்டு, அதனது தலைமைத் தன்மையைத் மட்டும் அனுசரிக்கும் பண்புடன் அது நடமாடியது. கடவுளை முற்றாக மறுத்த அதனது நாத்திகப் பக்கத்தில் பகுத்தறிவுத் தன்மை இணைந்து இருந்தது. தனக்கு முன்னால் இருப்பதைத் தனது நலனுக்கான நல்லது கெட்டது எனப் பகுத்து வைத்துக் கொண்டு, தனக்கு உரியதை அறிந்து எடுத்துக் கொள்வது இது. இந்த வாதமானது கிறித்தவக் கருத்தியலான சித்த சுதந்திரத்தை அடி ஒற்றியது. தனிமனித நலனை மேல்நிலைப் படுத்தித் தனக்கான சுகப்பேறு, தனது துக்க நீக்கம் என்ற முகாந்தரத்தில் இந்தப் பகுத்தறிவுச் சிந்தனை கால் கொண்டது. இது நாத்திகப் பக்கமாகப் பரவும் போது நிகழ்கால நலன் மட்டுமே மேலோங்க, எதிர் காலத்தில் மற்றும் முன்பின் அடுத்து வரும் நலன், தீமைகள் இரண்டாம் பட்சத்தில் நிறுத்தியது. சாஸ்திரம், புராணம், மரபு, முறைப்படுத்தப்பட்ட மெய்யியல் கருத்தமைப்புகள் ஆகியவற்றைப் புறம் தள்ளியது. தன்னைக் கடந்து போனதை, அடுத்து வருவதைப் பொருட்படுத்தவில்லை. 1860-1870 களில் கிறித்தவத்தோடு இணைந்து படிப்பாளிகளுக்கு இடையேயும் பரவியது. சுயசதயம், அது சார்ந்த சாஸ்திரம், புராணம், மரபுகள் பால் ஒரு மாறுபட்ட போக்கைத் தோற்றுவித்தது. அவர்கள் பகுத்தறிவு தாங்கிய நாத்திகர்களாக அவர்கள் நிலவினர். ''புராட்டஸ்டண்ட் பாதிரிமார்கள் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து... அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வி இல்லாதவர்களும், ஒரு சமயநெறியிலும் பற்று இல்லாத நிரீச்சுரவாதிகளும் ஆகின்றார்கள்'' என ஆறுமுக நாவலர் 1872 இல் சுட்டிக் காட்டினார் (பிரபந்தத் திரட்டு.38). 1879 இல் மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், சேவம். பகடால. நரசிம்மலு நாயுடுவும் இந்த நிரீச்சுர வாதத்தை மறுத்து எழுதினர். வேதநாயகர் 'பிரதாபமுதலியார் சரித்திரம்' எனப் புதினம் வெளியிட்டார். நரசிம்மலு 'ஆஸ்திக மத சித்தாந்தம்' எனச் சொற்பொழிவினைப் அன்று பெங்களூரில் நிகழ்த்திக் கோயம்புத்தூரில் நூலாகவும் வெளியிட்டார். அப்போதைய ஆண்டுகளில் ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் அல்லாத சுதேசி கிறித்தவர் மற்றும் இந்துக்கள் இடையே நேர்க்காட்சி வாதம் பரவி இருந்ததைக் கண்டு தமது சம்மதம் இன்மையை அந்த நூல்கள் பதிவு செய்தன. 1880 இல் சூளை. சோமசுந்தர நாயக்கர் 'ஆபாச ஞான விரோதம்' என நேர்க் காட்சி வாதத்தையும், பகுத்தறிவு நாத்திகத்தையும் பரிசீலித்தார்.

1839, 1852 இல் அருட்திரு. ஜாய்ஸ் என்ற திருச்சபையாளர் நியூட்டன், லாக்கே, லீப்னீட்ஸ் ஆகியோரை முன்னிட்டுக் கொண்டு இயந்திரவியல், ஆடியியல், தொன்மவியல், காலவியல், இயற்கை வரலாறு, அளவையியல் ஆகியனவற்றை உடன் கொண்டு, ஒரு முன்னுரையாக 'இயற்கைத் தத்துவம்' என ஒரு கட்டுரை தந்தார். அமெரிக்க நிலத்தை வைத்து அதனை எழுதினார். மதுரையில் இருந்த அமெரிக்கத் திருச்சபை 1854 முதல் 1858 முடிய வணக்கத்திற்கு உரிய இ.வெப் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 'கிறிஸ்து மார்க்க விளக்கம்' என்ற தமிழ் இதழோடு, ஆங்கிலத்திலும், தமிழிலும் 'தமிழ் குவார்ட்டலி ரிபோசிடரி' என்ற இதழையும் வெளியிட்டனர். கத்தோலிக்கர், இந்துக்களுக்கு பதில் அளிக்கவும் அந்த இதழ்கள் தொடங்கப்பட்டன. மேலும், திருச்சபைப் பேராளர்கள் பாடநூல்கள் படிப்பதற்குத் துணையாக நிற்பதே இந்த இதழ்களின் நோக்கம். தியானம், திருச்சபை வரலாறு, இயற்கைத்தத்துவம் ஆகியன சில பாடநூல்கள் (19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்.72,290).

கிறித்தவக் கருத்தியல்களை, அதனை நம்பாதவர்க்கு எதிரில் நிறுத்த வேண்டும் என்றால், இந்த உலகிற்கு ஏற்றதாக அதனை வைக்க வேண்டும் என்றால், பகுத்தறிவு ஒளி, விவரத் தெளிவு வேண்டும். அறிவியல் இல்லாத மதமானது வெறி, மூடத்தனம் நோக்கிக் கெடும். அதனால் கருத்தியல், அறிவியல் ஆகியன உண்மையான, சுத்தமான இன்பம் தருகின்றன. சமூகத்தின் பொது நலனை உயர்த்துகின்றன.

கடவுளது ஒளியானது உண்மையின் ஊற்று. எல்லாமே கடவுளது கண்ணாடி. கடவுளது புகழுக்காக மனிதனால் எல்லாப் பொருளும் உயிரேற்றப்படுகின்றன. அழகும் இணைப்பும் உண்டாகின்றன. எல்லாப் பொருளும் மனிதனுடன் இணைந்தவை. அவைகளை மனிதன் மாற்றுகிறான். படைக்கிறான். பலவகைப்படுத்துகிறான். மேம்படுத்துகிறான். மனிதன் இல்லாத உலகானது செயல் இல்லாத உலகு. வீணானது. உறைந்த, மகிழ்வு அற்ற நிசப்தமானது.

மனிதன் பகுத்தறிவால், புரிதல் திறனால் மேன்மை ஆக்கப் பட்டவன். இதனால் வேறானவன். தலைமையானவன். பிற படைப்புகளைவிட உயர்ந்தவன். புறநிலைத் தாக்குதல்களை எதிர் கொண்டு, தாக்கும் திராணி உள்ளவன். காணப்படும் இந்த உலகப் பொருள்களுக்கு மேலே பார்வை செலுத்த முடியும். சுற்றி உள்ளனவற்றில்

இருந்து வேறானவனாக அவனால் இருக்க இயலும். கூடவே, தனக்குள்ளே சிந்திக்கப் படும் பொருள்களிடம் இருந்து தனது சிந்தனையை வேறாக்கிக் கொள்ளவும் சாத்தியம் ஆகும்.

தனது இருப்பு செயல் பற்றி உள்முகமான தெளிந்த பிரக்ஞையைக் கொண்டு நிலவ அவனால் கூடும். கண்டதைக் கொண்டு காணாததை மதிப்பிட முடியும். அவனது அறிவானது துணிகரமானது. முனைப்பானது. கருத்துக்கள், முடிவுகள், கணக்கிடப்பட முடியாத தீர்ப்புகள், இவை எழுவன, இணைவன, பின்னுவன, புவிப் பயணத்தின் பொழுது எண்ணத் தொலையாத பிரதிபலிப்புகள் தருவன. மேலே, ஆழத்தில், உள்ளே , உலகினில் புலப்படும் மற்றும் புலப்படாத சாத்தியங்களில், இறந்த கால இருளில், எதிர்கால இரவில் உடைமையாக்கப் போராடும் முனைப்புடைய உள்ளமானது செல் திறம் உடையது. மேலும், அறியும், ஆழம் காணும், விளக்கும், முன்னமேயே அறியப் பட்டதுடன் ஒப்புமையைக் காணும். இணைக்கும்.

இயற்கையானது மனிதன் செயல்படும் இடம். வாழும் இடம். அங்கே வழி அமைக்கிறான். மலர்களால், கனிகளால் அணி செய்கிறான். அதனால் காற்று மணம் நிறைந்ததாக ஆகின்றது. உயிர் உள்ளதாகிறது. மகிழ்வாகிறது. இயற்கை அழகானது. மனிதன் அழகாக்குகிறான். இயற்கை ஆதாயமானது. வற்றாதது. மனிதன் மேம்படுத்துகிறான். பயன் தருகிறான். ஒவ்வொரு கல்லும், தாதுவும், மனிதனும், உறுப்பும், பொருளாயத மற்றும் ஆவி உலகும், புலப்படும் உலகு, புலப்படா உலகு, இறப்பும், எதிர்வும், சாத்தியமும், நடப்பும், படைப்பும், கர்த்தாவும் அனைத்தும் இனிமையானவை. உண்மையின் வழியில் நடத்துவன.


அனைத்தும் ஏறத்தாழ உணர்த்துகின்றன. தனிப்பட்டது மற்றும் முழுமை இணக்கம் காட்டுகின்றன. எல்லாமும் முழுமை, நிறைவு முதலானதை நோக்கி நடத்துகின்றன.

கடவுள், மனிதன், பகுத்தறிவு, செயல், வெற்றி, உலகின் உண்மைத்தன்மை, அதனது இனிமை, பயன் பற்றி இயற்கைத் தத்துவமானது உறுதி கூறியது. தனி மனிதன் காணப்படும் உலகுக்கு வேறாக நிலவ இயலும். தன்னுடைய சிந்திப்பில் இருந்து சமநேரத்தில் வேறாகவும் இருந்து கொள்ள முடியும். பொருளைப் பலவகைப்படுத்துவதுவும் மனிதனே. அவனால் பொருளை மாற்றவும், படைக்கவும் இயலும். இவனது பகுத்தறிவால் நிகழ்வுகளின் காரணம், உள்நோக்கங்களை அறிய முடியும். பிறவற்றுடனான இணக்க உறவு, பங்குநிலை, தொடர்பு, விளைவு காண இயலும். இப்படியாக அது காட்டும் காட்சிகள் இங்கிருந்த மரபுகள், பூர்வீக சிந்தனைகளை எதிர்கொண்டன. இதைக் கற்ற இளையோர் சுயசமயத்தின் மீதும், முன்னோர் போதனைகள் மீதும் பற்றுதல் இன்றி, வெளி சமயத்தின் மீது ஒட்டுதலும் இன்றி நாத்திகர் ஆயினர். 1875 ஆம் ஆண்டு நேரங்களில் கல்வி, கேள்வி, பொருளியல் செல்வாக்கால் மேம்பட்டதோடு முன்னேறி இருந்த குடிமக்களிடையே இது வேர் ஊன்றிப் பொலிவு அடைந்தது (சே.ப. நரசிம்மலு நாயுடு கையெழுத்துக் குறிப்பு). இன்னும், சி.சிங்காரவடிவேலு முதலியார், பி.ஆர். ராஜம் ஐயர், டாக்டர்.எம். சி. நஞ்சுண்ட ராவ் ஆகியோரது வாழ்க்கைக் குறிப்புகளும் சான்று உரைக்கின்றன. பெருமளவில் அரசு மற்றும் நிர்வாகங்களில் படை மற்றும் காவல் துறைகளில், கல்வி மற்றும் சமய நிறுவனங்களில் வணிகம் மற்றும் தொழில் துறைகளில் சொத்துக்கள் சேர்ப்பதில் வேட்கை கொண்டு நாட்டமிட்ட ஆங்கிலேயர், சிறு அளவிலான பிற ஐரோப்பியர், இங்கேயே பிறந்த ஆங்கிலோ இந்தியர் அல்லாத இந்திய இளையோர் கூட்டத்தில் இது பரவி இருந்தது. ஆங்கிலேயரது நேர்க் காட்சி வாதப் பரிமாணங்களும், அமெரிக்கத் திருச்சபையினரது இயற்கைத் தத்துவம் உரைக்கோள்களும், ஆட்சியில் அமர்ந்த சென்னை வேதாகம சங்க இந்திய இயலாளர்களும் எடுத்துப் பேசி வந்த விமர்சனப் பாங்கான திருத்தும் ஆவல் தனிந்த போதனைகளும் நாத்திகத் துறை மட்டும் அல்லாது ஆத்திகத் துறையிலும் பதிவுகளைப் பதிந்தன.


1859இல் சார்லஸ் டார்வின் தமது உயில்களின் தோற்றம் ஆய்வு நூலினை வெளியிட்டார். அதனது பரிணாமக் கோட்பாடு 1870 களில் இங்குப் படித்து அறியப்பட்டது. குரங்கு நிலையில் இருந்து மனிதம் பரிணமித்து நிமிர்ந்தான் என நிறுவினார். உயிர்ப் பொருள்களில் தாவரங்கள், விலங்குகள் அவைகளது உற்பவங்கள், மாற்றங்களுக்கு இயலுலகு சார்ந்த விளக்கம் உரைத்தார். தெய்வீகத் தன்மைகள் நாடப்படவில்லை. இதனால், பொருள் சார்ந்த கொள்கைகளும், உலகாயதக் கருத்தியல்களும், இவற்றினது விதிகளும் துல்லியம் கண்டன. சார்லஸ் டார்வின் வகுத்த பரிணாமக் கோட்பாட்டில் கடவுள் என்ற ஒன்று தேவைப்படவில்லை. அதனால் அவரது கோட்பாடு நாத்திகமாகவும் போற்றப் பட்டது.

●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




₹ 490/-





₹ 140/-




₹ 1500/-




₹ 390/-




₹ 200/-





₹ 145/-





₹ 195/-




₹ 65/-





₹ 85/-




₹ 125/-




₹ 140/-





₹ 240/-

நூல் மதிப்புரை

# அன்றும் இன்றும் என்றும் தேவை

## உதயை மு.வீரையன்




தோழர் ம.சிங்காரவேலரின் தலைமையுரை
(கான்பூரில் டிசம்பர், 1925 – இல்
முதலாவது கம்யூனிஸ்ட் மாநாட்டில் ஆற்றிய உரை)
வெளியீடு:என்சிபிஎச், சென்னை.
விலை:ரூ.30.00

சிந்தனைச் சிற்பி என்று போற்றப்பட்ட ம.சிங்காரவேலர் (1860-1946) தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். இந்தியாவிலேயே பொதுவுடைமைக் கொள்கையை முதன் முதலில் போதித்த முன்னோடிகளில் முதன்மையானவர். தமிழ்நாட்டில் காங்கிரஸ், சுயமரியாதை, கம்யூனிஸ்ட் இயக்கங்களைப் பரப்பியவர்.

இந்தியாவில் முதன் முதலாக கான்பூரில் 26-12-1925 அன்று பொதுவுடைமை இயக்க மாநாட்டுக்கு தலைமை ஏற்று, கொடியேற்றி, கொள்கைத் திட்டத்தை அறிவித்தவர் அவர். இதற்கு முன்பாகவே 1922ஆம் ஆண்டில் கயாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் பற்றியும் முதன் முதலாகத் திட்டம் தீட்டிக் கொடுத்த பெருமைக்குரியவர்.

உலகத் தொழிலாளர்களின் திருநாளாகிய மே தினத்தை இந்தியாவில் முதன் முதலாக 1-5-1923இல் கொண்டாடிய முதல் தலைவர். அமெரிக்கத் தொழிலாளர்களான சாக்கோ, வான்சிட்டி ஆகியோரை அமெரிக்கா அரசு கொன்றபோது, இந்தியாவில் எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்.

தொழிலாளர் மற்றும் உழவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழ்நாட்டில் முதன்முதலில் ‘தொழிலாளி’ என்ற தமிழ் இதழையும், லேபர்

அன்று கிசான் கெசட் என்ற ஆங்கில இதழையும் வெளியிட்டு, அவர்களுக்கு வழிகாட்டியவர். உழைப்போரின் நல்வாழ்வுக்காக 1923ஆம் ஆண்டிலேயே இந்தியத் தொழிலாளர் மற்றும் உழவர் கட்சியைத் (Labour and Kissan Party of Hindustan) தோற்றுவித்தார்.

தமிழ்நாட்டில் நடந்த முதல் நாத்திகர் மாநாட்டிற்குத் தலைமை ஏற்று அரிய உரையாற்றி நெறிப்படுத்தியவர். 1925ஆம் ஆண்டில் நகராண்மைக் கழக உறுப்பினராகப் பொறுப்பேற்றபோது, கடவுள் நம்பிக்கையை மறுத்து, 'மனச்சாட்சிப்படி பொறுப்பேற்கிறேன்' என்று உறுதிமொழி ஏற்று வழிகாட்டியவர்.

நகராண்மைக் கழகப் பாடத்திட்டத்தில் மதத்தைப் பற்றியும், போரைப் பற்றியும் பாடங்கள் இருக்கக் கூடாதென முதன் முதலில் தீர்மானங்கள் கொண்டு வந்தவர். சென்னையில் டிராம் போக்குவரத்தையும். தொலைபேசியையும் அரசுடைமை ஆக்க வேண்டுமென தீர்மானம் கொண்டு வந்த பெருமைக்கு உரியவர்.

அத்துடன் தமிழக மக்களுக்கு முதன்முதலில் மார்க்சியத்தையும், டார்வினிசத்தையும் போதித்தார். அறிவியல், மானிடவியல், சமூகவியல், உளவியல், அரசியல் ஆகிய துறைகளைப் பொதுமக்களுக்கு எளிய முறையில் விளக்கியவர். பல புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்துவதிலும், பல அரிய செயல்களைச் செயல்படுத்தியதிலும் அவர் முன்னோடியாக விளங்கினார். பலர் தொழிற்சங்க இயக்கங்களில் பங்கேற்கவும், பொதுவுடைமை, சுயமரியாதைக் கொள்கைகளைப் பின்பற்றவும் அவர் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவ்வாறு பொதுவுடைமை இயக்கத்திற்கும். பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்கும் பாலமாக இருந்தவர் அவர். பெரியார் ஈ.வெ.ரா, தோழர் ஜீவா, நாகை முருகேசன், சி.எஸ்.சப்பிரமணியம், அறிஞர் அண்ணா, கே.டி.கே.தங்கமணி முதலிய பெருமக்களோடு நெருங்கிய தொடர்பில் இறுதிவரை இருந்தார்.

இவரது 1925ஆம் ஆண்டு கான்பூர் பொதுவுடைமை மாநாட்டுத் தலைமை உரையை சென்னை மயிலாப்பூர் 'துறை' என்னும் வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது, எக்காலமும் தேவைப்படும் இந்த உரை காலத்தின் தேவை கருதி இப்போது மறுவாசிப்புக்காக விடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் நோக்கம் என்ன என்பதையும், இங்கே எதற்காக கம்யூனிஸ்டுகள் கூடியிருக்கிறார்கள் என்பதையும் அவர் உரையின் தொடக்கத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு விடுகிறார்.

"நம் மாநாடு இவ்வுலகில் வாழ்கின்ற எல்லா மனித உயிர்களுக்கும் இவ்வுலகத்தை செழுமையும், இன்பமும் நிறைந்ததாக ஆக்கப் பாடுபடும். நமது நலம் பயக்கும் இயக்கத்தை நசுக்க கம்யூனிச எதிரிகள் முயன்று கொண்டிருக்கும் நேரத்தில் இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த அரங்கில் இந்தியாவில் நிலவும் அரசியல், பொருளாதார நிலைமையைப் பொதுவாக ஆராயவும், நம் நாட்டு மக்கள் வாழ்வை மேலும் சிறப்பாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளைத் திட்டமிடவும் இன்று கூடியுள்ளோம்."

உலகின் பிற பகுதிகளிலும், இந்தியாவிலும் ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு ஆட்பட்டு கம்யூனிஸ்ட் தோழர்கள் துன்பத்திற்கு உள்ளாயினர். இதற்குக் காரணம் ஆட்சியாளர்கள் இந்த இயக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதுதான்.

"அவர்களுக்கு அளிக்க நம்மிடத்தில் ஒரே ஒரு பதில்தான் உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன் கல்வாரி என்ற இடத்தில் சிலுவையில் அறையப்பட்டபோது, "ஓ நீங்கள் செய்வதை இன்னதென்று அறியாமல் செய்கிறீர்கள்" என்று தம்மைத் துன்புறுத்தியவர்களிடம் நம் மனித இனத்தின் மிகச் சிறந்தவர்களில் ஒருவர் கூறியதே அந்தப் பதிலாகும்" என்று கூறுகிறார்.

சமூகம் அல்லது மதம், அரசியல் அல்லது பொருளாதாரம், அறிவியல் அல்லது தத்துவம் ஆகிய துறைகளில் எந்தச் சீர்திருத்தத்தின் முன்னோடிகளும் தங்கள் சிந்தனைகள், கருத்துகள், செயல்கள் இவைகளுக்காக இவ்வுலகத்தில் கட்டாயம் துன்புற வேண்டுமென்பது வருத்தத்திற்குரியதாகும்.

மக்களுக்காக உழைத்து மாண்ட மாவீரர்களுக்கு மாநாட்டில் வீர வணக்கம் செலுத்தப்பட்டது. ஜெர்மன் தொழிலாளர்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்ட லீப்நெக்ட், புகழ்பெற்ற வீரப் பெண் ரோசாலக்ஸம்பர்க், பிரெஞ்சுக்காரர்களிடேயே புகழ் பெற்ற எம்.மூவாரே இவர்களை உலகத் தொழிலாளர்கள் என்றும் நினைவில் வைத்துப் போற்றுவர்.

சோவியத்தின் மாபெரும் தலைவன் நிக்கோலாய் லெனின் மறைவை மாபெரும் இழப்பு என்று குறிப்பிடுகிறார். இங்கிலாந்தில் வாழ்ந்த ஜார்ஜ் லான்ஸ்பெரி, நம் நாட்டைச் சேர்ந்த தேச பந்துதாஸ், சுப்பிரமணிய சிவா மற்றும் கான்பூர், சென்னை, பிற இந்திய நகரங்களில் உயிர் இழந்த தொழிலாளர்களுக்கும் அவர் உரையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மறைந்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, வாழும் மக்கள் நிலையை வேதனையோடு விளக்குகிறார். "உலக மக்களில் நம் நாட்டு மக்கள் மட்டுமே, இம்மண்ணில் மனித இனம் வாழும் மிக்க துயரம் தோய்ந்த பகுதியைச் சார்ந்தவர்கள். வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உறையுள், உடை, மனித வாழ்வின் மிக உயர்ந்த விடுதலை, ஒத்த உரிமை, அறிவு ஆகியவைகளை இழந்து, நம் நாட்டின் பெரும்பகுதி மக்கள் உலகில் உள்ள மற்ற நாடுகள் எட்டியுள்ள தரத்தைவிட மிகக் கீழான நிலையில் உள்ளனர்" என்று கூறியுள்ளார்.

மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினராக உள்ள இந்நாட்டு விவசாயிகளே மிகுதியான துன்பத்தை அனுபவிக்கின்றனர். கிராமங்களில் அவர்கள் வாழ்க்கை தாங்க முடியாதபடி உள்ளது என்கிறார்.

"அன்புத் தோழர்களே! மனித வாழ்க்கையின் இந்த அவலமான நிலைமைகளைச் சீர்திருத்த உங்களின் திட்டம் என்ன? உண்மையில் கம்யூனிஸ்டுகளாகிய நாம், நம் இன்றைய துன்ப வாழ்க்கையை மகிழ்ச்சியும், வளமையும் கொண்ட வாழ்க்கையாகத் தீவிர மாற்றம் செய்ய என்ன செய்யப்போகிறோம் என்பதை இம்மாநாட்டில் விளக்க வேண்டும். இது மண்ணின் மீது வாழும் ஒவ்வொருவரின் பிறப்புரிமையாகும்" என்று தெரிவித்துள்ளார்.

நாடெங்கும் நடைபெறும் சுதந்திரப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பெரும் பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டும். எண்ணிக்கையில் சிறிதாக இருந்தாலும் இந்தியாவில் ஏற்படப் போகும் தொழிலாளர் அரசில் முன்னணிப் படையாக நாம் இருக்கிறோம் என்று நம்பினார். ஆனால் விடுதலை பெற்ற அரசாங்கத்தால் அடக்குமுறைக்கு ஆளான கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சியே இருந்தது.

"கம்யூனிஸ்டுகளுக்கு சாதியோ சமயக் கோட்பாடுகளோ கிடையா. இந்துக்கள், முஸ்லீம்கள் அல்லது கிறிஸ்துவர்கள் அவைகளைப் பற்றி எத்தகைய சொந்தக் கருத்துகளைக் கொண்டிருக்கலாம். கோடிக்கணக்கில் உள்ள இவ்விந்திய மக்களின் தீண்டாதோர் பொருளாதாரச் சார்புடைமையுடன் தீண்டாமைப் பிரச்சினை சிறப்பாகப் பிணைந்துள்ளது" என்கிறார்.

உலகக் கம்யூனிசத்தின் சிறப்பைப் பற்றியும், அது எதைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதைப் பற்றியும் தவறான எண்ணமும் மிகுதியாக உள்ளது. கம்யூனிசம் என்றால் என்ன? மனித வர்க்கத்தின் ஏறக்குறைய எல்லாத் தீங்குகளையும் போக்கிச் செம்மையுறச் செய்யும் குறிக்கோளைக் கொண்ட ஒரு நெறி அல்லது தத்துவமாகும்.

அதே சமயத்தில் ஒரு நெறியாகவும், வழிமுறையாகவும் உள்ளது. உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் பங்கிடுவதிலும், அனுபவிப்பதிலும் சமத்துவமின்மை சரி செய்யப்பட்டு, எல்லோரும் ஒத்த நன்மையடையக் கூடிய முறையில் அதனால் ஒழுங்குபடுத்தப்படலாம்.

மார்க்சிய கம்யூனிசம் பற்றி சிறிது கூடுதலாக விளக்குகிறார். உலகத்தில் மக்கள் இரண்டு வர்க்கங்களாக உள்ளனர். அதாவது சொத்து உள்ளவர்கள், சொத்து இல்லாதவர்கள். இவர்களையே பூர்ஷ்வா வர்க்கம் என்றும், பாட்டாளி வர்க்கம் என்றும் குறிப்பிடுகிறோம். இவ்விரண்டு வர்க்கங்களும் எப்பொழுதும் தங்களுக்குள் போராடிக் கொண்டிருக்கின்றன.


"முதலாவதாக, மூலதன ஆதிக்கத்தை ஒழிப்பது, போர்கள் நடைபெறாமல் செய்வது, நாட்டின் வரம்புகளையும், எல்லைக் கோடுகளையும் ஒழித்து, எல்லா அரசுகளையும் ஒன்றிணைத்து ஒன்றுபட்ட அமைப்பாக்குவது, உண்மையான தோழமையுணர்வையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டல் ஆகிய இவைகளே குறிக்கோளாகும். இதுவே கம்யூனிஸ்டின் கனவாகும்" என்று நமது கம்யூனிசக் குறிக்கோளை விளக்குகிறார்.

இந்திய விவசாயிகளை இந்த மண்ணின் உயிர்ச் சத்து என்று குறிப்பிடுகிறார். அவர்களுடைய துன்பங்களையும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கம்யூனிஸ்டுகள் அறிவார்கள். இம்மண்ணின் போலித் தலைவர்களால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எங்கள் வாழ்க்கைக்குரிய எல்லா நலன்களையும் தேவைகளையும் வழங்குகின்றனர். ஆனால் நிலவுடைமையாளர்கள் அவர்களை ஒதுக்கி வைத்துள்ளனர். இந்த நாடகத்துக்கு முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது.

"வரலாற்றுக் காலம் தொட்டு நமது அரசியல் ஒற்றுமையை விழுங்கும் பேய்களாக சாதி, மதங்கள் இருந்து வந்துள்ளன. இந்த சாதி மத வேற்றுமைகள் இன்று நாட்டை மீண்டும் சின்னா பின்னப் படுத்துகின்றன. பயன் இல்லாத இவற்றை நம்முன் ஆர்ப்பரித்துக் காட்டுவோர் நம் நாட்டுக்கும், நம் குறிக்கோளுக்கும் பகைவர் ஆவர்" என்று சிங்காரவேலர் அன்று கூறியது இன்றும் பொருத்தமாகவும், தேவையாகவும் உள்ளது.

(கான்பூர் பொதுவுடைமை மாநாட்டுத் தலைமை உரை – 1925)

# நியூ செஞ்சுரியின் புதிய நூல்கள்





அரசியல் வரலாறு, சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு, பொருளாதார வரலாறு முதலானவற்றை அறிந்து கொண்டுள்ள அளவிற்கு நாம் காலனிய காலத்தின் மருத்துவ வரலாற்றை அறிந்ததில்லை. அதிலும் தமிழில் அறியும் வாய்ப்பு கிடைக்கவில்லை. உதிரிக் கட்டுரைகளாக சில பொழுது எழுதப் பெற்றுள்ளன. வெவ்வேறு பொருள் சார்ந்து சில நூல்கள் உள்ளன. நேர்ப் பொருளில் ஒரு முழுமை நோக்கிய பார்வையில் முழு நீள நூல் இதுவரை இல்லை. அந்த வெற்றிடத்தை இந்த நூல் நீக்குகிறது. அதனால் இந்த வகைமையில் முதல் நூல் எனும் சிறப்பைப் பெறுகிறது.

**காலனி ஆட்சியில்**
**நல வாழ்வும் நம் வாழ்வும்**

டாக்டர் சு.நரேந்திரன்

₹ 250/-




காலனிய வளர்ச்சிக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறு தங்களது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி இலங்கை தீவுக்கும், மர்த்தினு, குவாதலோப் போன்ற தென் அமெரிக்கத் தீவுகளுக்கும், ஆப்பிரிக்காவுக்கு அருகாமையில் உள்ள மொரிசியசு, ரீயூனியன் தீவுகளுக்கும், மலேயாவில் உள்ள பினாங்கு, சிங்கப்பூர் தீவுகளுக்கும் புலம்பெயர்ந்தனர் என்பதை இந்நூல் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்கிறது. மேலும் காலனிய ஆதிக்கத்தினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நிலைமை, தமிழர்களின் வாழ்வில் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கங்கள், விளைவுகள், புதிய அனுபவங்கள் மற்றும் பழைய அடையாளங்களைத் தெள்ளத் தெளிவாக எடுத்து இயம்புகிறது.

**காலனிய வளர்ச்சிக் காலம்**


புலம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கை

எஸ்.ஜெயசீல ஸ்டீபன்

₹ 175/-

# உ.வே. சாமிநாதையரின் திருக்குறள் ஆராய்ச்சி

## முனைவர் இரா. வெங்கடேசன்


28636

திருவள்ளுவரும் திருக்குறளும்

20333

20333

டாக்டர். உ. வே. சாமிநாதையர்

சென்னை:
கார்டியன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது

Copyright Registered] 1936


7. திருக்குறளால் வந்த பயன்

தஞ்சாவூர் அரண்மனையில் சரஸ்வதி மகால் என்னும் பெயர்பெற்ற பழைய புத்தகசாலை ஒன்று உண்டு. அங்கே உள்ள ஏட்டுச் சுவடிகளையும் அச்சுப் புத்தகங்களையும் பார்க்கும்பொருட்டு ஒவ்வொருநாளும் பலர் சென்று வருவார்கள். சரபோஜி அரசர் அமைத்த பலதர்மங்களுள் இப்பொழுது மிக்க பயனுடையதாக விளங்குவது அந்தப் புத்தகசாலை. அதில் அம்மன்னர் காலத்தில் பல்லாயிரக்கணக்கான சுவடிகள் இருந்தன. தென்மொழி, வடமொழி, தெலுங்கு, மகாராஷ்டிரம் முதலிய பாஷைகளில் உள்ள சுவடிகள் அங்கே உண்டு. சங்கீதம், பரதசாஸ்திரம், வைத்தியம், சோதிடம், கஜசாஸ்திரம், அசுவசாஸ்திரம் முதலிய பலவகைக் கலைகளுக்குரிய நூற்சுவடிகளும் இருந்தன. அந்த அந்த வகையில் தேர்ச்சி பெற்ற புலவர்களைக் கொண்டு அந்நூல்களை வருவித்துச் சரபோஜி மன்னர் தொகுத்து வைத்தார். அப்புத்தகசாலையில் தமிழ்நூல்கள் பல சேகரிக்கப்பட்டதற்குக் காரணமான ஒரு நிகழ்ச்சியை நான் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது வருமாறு:—

சரபோஜி மன்னர் ஒருமுறை காசியாத்திரை சென்றார். அப்பொழுது கல்கத்தா நகரத்தில் இருந்த ராஜப்பிரதிநிதியைக் காண எண்ணினார்.

பழந்தமிழின் ஆகச்சிறந்த நூல்களையெல்லாம் தேடித்தேடிக் கண்டெடுத்து அச்சிட்டு வெளியிட்ட உ.வே. சாமிநாதையர், திருக்குறளை அச்சிட்டு வெளியிட ஆர்வம் காட்டவில்லை என்ற கருத்து சிலருக்கு உண்டு. தமிழின் ஆழ, அகலங்களைக் கண்டுணர்ந்த சாமிநாதையர் திருக்குறளின் ஆழத்தையும் கண்டுணர்ந்துள்ளார். சாமிநாதையரின் முக்கால் நூற்றாண்டிற்கும் மேலான வாழ்க்கை வரலாற்றினூடே பயணித்துப் பார்க்கையில் திருக்குறளோடு அவர்கொண்டிருந்த பிணைப்புப் புலப்படுகின்றன.

உ.வே. சாமிநாதையர் மிக இளம் வயதில் அரியலூர் கிருஷ்ணவாத்தியார் என்பவரிடம் திருக்குறளைப் பாடம் கேட்டறிந்திருக்கிறார் என்பதை அவரின் என் சரித்திரத்தில் உள்ள குறிப்புகள் புலப்படுத்துகின்றன. பதினாறாம் வயதில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்க வருவதற்கு முன்னர் குன்னத்தில் சிதம்பரம் பிள்ளை என்பவரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் அவ்வூரிலிருந்த முத்தப்பிள்ளை என்பவரிடம் திருக்குறள் தெளிபொருள் விளக்கவுரைப் புத்தகத்தை இரவலாகப் பெற்றுப் படித்திருக்கிறார் என்பதையும் அவரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் புலப்படுத்துகின்றன.

செங்கணம் விருத்தாசல செட்டியாரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் செட்டியாரிடமிருந்த பல பழந்தமிழ் நூல்களைத்

தாமே தேடித் தேடிக் கண்டெடுத்துப் படித்திருக்கிறார். பேரீடுபாட்டோடு தேடிப்படித்த நூல்களுள் திருக்குறள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்திருக்கிறது. செட்டியாரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்தபோது ஒருநாள், செங்கணத்திலிருந்து பெரும்பூலியூருக்கு நடந்தே சென்று அவ்வூர் பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் ராயர் என்பவரைத் தேடிக்கண்டு திருக்குறள் பரிமேலழகர் உரையைத் தழுவி எழுதப்பெற்றிருந்த பதவுரை, கருத்துரை, விசேடவுரை புத்தகத்தைப் பெற்றுவந்து படித்திருக்கிறார். செங்கணத்திலிருந்து காரைக்கு அவரது குடும்பம் இடம்பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டபோது விருத்தாசல செட்டியாரிடமிருந்து சில முக்கியமான தமிழ் நூல்களை இரவலாகப் பெற்றுச் சென்றிருக்கிறார் சாமிநாதையர். அவற்றுள் திருக்குறளும் இடம்பெற்றிருந்தது.

மாணவ நிலையைக் கடந்து ஆய்வாளர் நிலையை அடைந்த காலத்திலும் திருக்குறளைத் தொடர்ந்து படித்தறிந்து ஆராய்ந்து நோக்கும் வழக்கத்தைச் சாமிநாதையர் கொண்டிருந்திருக்கிறார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றை இங்கு நினைவுபடுத்திப் பார்ப்பது பொருத்தமாக அமையும். புறநானூற்றைச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி ஆராய்ந்துப் பதிப்பித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலத்தில், பழைய தமிழ் நூல்களின் உரையில் புறநானூற்றுப் பாடல்கள் மேற்கோள்களாக இடம்பெற்றுள்ளனவா? என்று ஆராய்ந்து பார்க்க நேர்கையில் திருக்குறளின் அனைத்து உரைகளையும் முற்றாகப் படித்தறிந்திருக்கிறார். இவ்வாறாக இளமை தொடங்கி முதுமைவரையில் திருக்குறளோடு அறுபடா தொடர்பு சாமிநாதையருக்கு இருந்திருக்கிறது என்பதை அவரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் புலப்படுத்துகின்றன.

திருக்குறள் மீது பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர் வ.உ. சிதம்பரம் பிள்ளை என்பதைப் பலரும் அறிவர். அவர், கோவை சிறையில் இருந்தபோது திருக்குறளை ஆழ்ந்து கற்றறிந்திருக்கிறார். அப்போது திருக்குறளில் தமக்கு ஏற்பட்டிருந்த ஐயங்களைப் போக்கிக்கொள்ளும் பொருட்டுச் சிறையிலிருந்து செப்டம்பர் 14, 1908இல் சாமிநாதையருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் என்பதையும் நாம் இங்கே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

திருக்குறளுக்கு ஒரு ஆராய்ச்சிப் பதிப்பைக் கொண்டுவர வேண்டுமென்று சாமிநாதையர் பெருவிருப்பம் கொண்டிருந்திருக்கிறார். சாமிநாதையரின் விருப்பம் கி. வா. ஜகந்நாதையர் வழியாக நிறைவேறியிருக்கிறது. 1963ஆம் ஆண்டு "திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு" ஒன்றை வெளியிட்டுச் சாமிநாதையரின் விருப்பம் நிறைவெய்தியதாகக் கி.வா.ஜ. குறிப்பிட்டிருப்பார்.

1929இல் திருச்சி, குளித்தலை தாலுக்கா மருங்காபுரி ஜமீன்தாரிணி கி.சு.வி. இலட்சுமி அம்மணி என்பவர் எழுதிய 'திருக்குறள் தீபாலங்காரம்' என்ற நூலுக்கு சாமிநாதையர் எழுதிய அணிந்துரையில்,

திருக்குறளுக்குச் சமானமான நீதி நூல் வேறு இல்லையென்பது ஆன்றோர் கருத்து. அது பலவேறு பாஷைகளிலும் பல பலவாறாக மொழிபெயர்க்கப் பெற்றிருத்தலே அதன் பெருமையை நன்கு தெரிவிக்கும். திருக்குறளையே ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றுள்ள செய்யுள் நூல்களும் வசன நூல்களும் பல இக்காலத்தில் வழங்கி வருகின்றன (திருக்குறள் தீபாலங்காரம், 1929) என்று எழுதி மகிழ்ந்திருக்கிறார். 1929இல் திருநெல்வேலியைச் சேர்ந்த பரமசிவன் பிள்ளை என்பவர் 'திருக்குறட் சாரம்' என்றவொரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். பரமசிவன் பிள்ளை சாமிநாதையரிடம் பெரிதும் விரும்பிப் பெற்ற வாழ்த்துரையில்,

திருக்குறளின் வசனமாகப் பல நூல்கள் இக்காலத்தில் வெளிப்போந்து உலாவி வரினும் இப்புத்தகம் ஒரு புதிய அமைப்பைப் பெற்று விளங்குகின்றதென்று சொல்லலாம். ஒவ்வோர் அதிகாரத்தும் உள்ள சிறந்த குறள் ஒன்றை எடுத்துக்காட்டி அதன் பொருளையும் தெளிவாக எழுதி அவ்வதிகாரத்திலுள்ள ஏனைப்பாக்களின் கருத்துக்களையும் தொடர்புபடுத்தி நல்ல நடையிற் செவ்வனே விளக்கி உரிய இடங்களிற் சிறந்த சைவநூற் கருத்துக்களை இதன் ஆசிரியர் பிரமாணங்களாகக் கொடுத்திருப்பது யாவராலும் பாராட்டத்தக்கது. இதனைப் படிப்பவர்கள் திருக்குறளிற் கூறப்பட்ட நீதிகளையும் சிவபக்தி மார்க்கத்தையும் எளிதில் அறிந்து கொள்வார்களென்பது என் கருத்து (திருக்குறட்சாரம், 1929) என்று திருக்குறளை மதிப்பிட்டு நோக்கியிருக்கிறார். சாமிநாதையர் 1929ஆம் ஆண்டு ச. சோமசுந்தர பாரதியார் எழுதிய 'திருவள்ளுவர்' என்ற நூலுக்கும் மதிப்புரை எழுதி மகிழ்ந்திருக்கிறார்.

1936இல் "திருக்குறளால் வந்த பயன்" என்றொரு கட்டுரையையும் இவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். தஞ்சாவூர் அரண்மனையில் சரசுவதி மகால் என்று பெயர்பெற்ற நூல்நிலையத்தில் சரபோஜி மன்னர் திருக்குறள் சுவடிகளைச் சேகரித்து வைக்கத்தொடங்கிய வரலாற்றுப் பின்புலத்தை இக்கட்டுரையில் சாமிநாதையர் குறிப்பிட்டிருப்பார்.

சாமிநாதையர், இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் 1936இல் 'திருவள்ளுவரும் திருக்குறளும்' என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார்

என்பது வரலாறாகும். திருக்குறளைத் திறனாய்வு நோக்கில் நோக்கிய நூல்களுள் இந்நூலுக்கு எப்போதும் தனி இடம் உண்டு. சாமிநாதையர் இந்நூலில் பல்வேறு நிலைகளில் குறள் பற்றியும், திருவள்ளுவர் பற்றியும் திறனாய்வு செய்திருக்கிறார். அந்நூலின் ஓரிடத்தில் திருக்குறளை இவ்வாறு மதிப்பிட்டு நோக்குகிறார்.

ஏனைய தமிழ் நூல்களிற் காணப்படாத சில சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைத் தெளிவாகக் கூறிய நூல்களுள் குறளுக்கு ஈடானது வேறு இல்லை. சங்க மருவிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பவற்றுள் திருக்குறளைப் போல 1330 செய்யுட்களையுடைய நூல் வேறொன்று இல்லை; குறட்பாவில் அமைந்ததும் இல்லை...... குறட் கருத்துக்களை எடுத்தாளாத தமிழ் நூலே இல்லையென்று கூறுவது மிகையாகாது. தமிழ்ப் புலவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நூல்களில் திருக்குறளே முதன்மை வாய்ந்த தென்பதில் ஐயமில்லை. நீதிநெறி விளக்கம் குறட் கருத்தைச் சுருக்கமாக வேறு உருவத்தில் அமைத்துச் சொல்லும் நீதிநூலாகும். கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீமான் சி. தியாகராஜ செட்டியார் அந்நூலை, “இது குறள் பருவத்தில் பெற்ற பிள்ளையைப் போன்றது” என்பர். (திருவள்ளுவரும் திருக்குறளும், 1936)

இளமை தொடங்கி வாழ்நாளின் இறுதிவரையில் திருக்குறளோடு சாமிநாதையருக்கு இருந்த தொடர்பு பல தரவுகள் புலப்படுகின்றன. திருக்குறள் பதிப்பு (1812) இவர் பிறப்பதற்குப் (1855) பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளிவந்துவிட்டன. திருக்குறளுக்கு மூலம், உரை, புத்துரை, பதவுரை, விளக்கவுரை, அகலவுரை ஆகிய உரைப்பதிப்புகள் சாமிநாதையர் பதிப்புத்துறையில் ஈடுபடத்தொடங்கியதற்கு (1878) முன்னமே வெளிவந்துவிட்டன. வாழ்நாளில் பிறர் பதிப்பித்து வெளியிட்ட நூலொன்றை மீண்டும் பதிப்பித்து வெளியிடும் வழக்கத்தைச் சாமிநாதையர் கொண்டிருந்ததில்லை. பலபேர் திருக்குறளுக்குப் பலவகையான பதிப்புகளை வெளியிட்டு முடித்திருந்த நிலையில் சாமிநாதையர் திருக்குறளைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் ஈடுபடவில்லைபோலும். என்றபோதிலும் ஆராய்ச்சி நோக்கில் திருக்குறளை அணுகும் முயற்சியைச் சாமிநாதையர் தம் வாழ்நாளின் இறுதிவரையில் கைவிடவில்லை என்பதை வரலாறு புலப்படுத்துகிறது.

●


**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!**



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 4252 | 871 | 4327 | 124 | 5931 |
| 4224 | 5906 | 2761 | 4809 | 5935 |
| 4225 | 5884 | 1102 | 7811 | 5932 |
| 4253 | 5916 | 1103 | 2759 | 164 |
| 1101 | 5917 | 903 | 4853 | 2865 |
| 2758 | 4852 | 904 | 2762 | 2866 |
| 483 | 4223 | 905 | 4380 | 5937 |
| 5913 | 4222 | 163 | 7812 | 4810 |
| 484 | 5925 | 5919 | 486 | 2061 |
| 2862 | 2863 | 4323 | 2864 | 906 |

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00, ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*